# பொருளியல் நோக்கு

மே ஜூன்
1984

May/June









## இலங்கையின் பொருளாதாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலர் வலயத்தில் உள்ள உள்ளூர் நீர் நிலைகளின் பரப்பளவு**

| நீர் நிலைகளின் வகை | | ஏக்கர் பரப்பளவு |
|---|---|---|
| 1. பிரதான | நீர்ப்பாசன நீர்த்தேக்கங்கள் | 175,000 |
| 2. மத்திம அளவிலான | ,, ,, | 42,000 |
| 3. சிறிய ,, | ,, ,, | 97,000 |
| 4. வெள்ளக் குளங்கள் | | 10,000 |
| மொத்தம் | | 324,000 |

மூலம்: மீன்பிடி அமைச்சு

உலர் வலயத்தில் உள்ளூர் மீன்பிடியை அபிவிருத்தி செய்வதற்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள நீர் நிலைகளின் மொத்தப் பரப்பளவினைக் கீழ்க் காணும் வகையில் உப பிரிவுகளாகப் பிரிக்களாம்:

1. நீர்ப்பாசனத் திணைக்களம் 73 பாரிய தாழ் நிலை நீர்த்தேக் கங்களைப் பட்டியற் படுத்தியுள்ளது. முழுமையான நீர் மட்டத்தில் பிரதான குளங்கள் 175,000 ஏக்கர்களுக்கும் கூடுதலான நீரைக் கொண்டிருக்கும். இந்த ஏக்கர் பரப்பளவை புதிய குளங்களைத் திறத்தல், பழைய குளங்களைப் புனர் நிர்மாணித்தல், உள்ள குளங்களை விரிவாக்குதல் என்பவற்றின் வாயிலாக அதிகரிக்கலாம். வழமைக்கு மாறான வறட்சி தவிர்ந்த காலங்களில் இக் குளங்கள் வருடம் முடிவதும் நீரை வைத்திருக்கின்றன.

2. 160 நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பட்டியற் படுத்தப்பட்டுள்ளன. முழுமையான நீர் மட்டத்தில் இவை 42,000 பரப்பளவில் நீரைக் கொண்டிருக்கும். இவை கடும் வறட்சியினால் பாதிக்கப்படா விட்டால் வருடம் முழுவதும் இந்தளவு நீரை வைத்திருக்கும்.

3. பெருமளவிளான சிறிய குளங்கள் இருப்பதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவிக்கின்றது. முழுமையான நீர் மட்டத்தில் இவை 97,000 ஏக்கர் பரந்திருக்கும் இவை கிராமக் குளங்கள் என அழைக்கப்படுகின்றன; இவை ஒரு சில மாதங்களுக்கே நீரை வைத்திருப்பதனால் பருவகாலக் குளங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

(மிகுதி அடுத்த இதழில்)

(31-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கெனவே குறிப்பிடப்பட்டது போல் 1973 - 74 ம் ஆண்டுகளில் நடைபெற்ற எண்ணெய் விலையேற்றத்தினால், உடனடியாகவும் கிட்டத்தட்ட அதே சமயத்திலும் ஏற்பட்ட விளைவு என்னவென்றால், ஒபெக் நாடுகளின் அரசாங்கங்கள் உள்ளமைப்புகளிலும் அடிப்படைச் சேவைகளிலும் நீண்டகருப்ப காலங்களைக் கொண்ட கைத்தொழில்களிலும் முதலீடுகளை அதிகரித்ததாகும். அத்துடன், தனியார் துறைக்குக் கொடுகடன் வசதிகளும் கணிசமான அளவில் விரிவாக்கப்பட்டன. அதன் விளைவாக, முதலீடுகளும் சம்பள மட்டங்களும் நுகர்வாளர் கோரிக்கையும் அதிகரித்த அதேசமயத்தில் உள்நாட்டு உற்பத்தி வெகுதூரம் பின்தங்கியிருந்தது. அபிவிருத்திக்கும் பாதுகாப்புக்கும் நுகர்வுக்கும் ஏற்பட்ட வேகத்தில் உயர்ந்து வந்த கோரிக்கையைப் பூர்த்தி செய்வதற்காக அதிகாரிகள் இறக்குமதிக் கதவுகளை அகலத் திறந்துவிட்டனர். விரைவிலேயே மூலதனமும் நுகர்ப்பொருள்களும் விரிவான அளவில் ஒபெக் நாடுகளின் செயலூக்க மையங்களுக்கு வந்து சேர்ந்து விட்டன. உதாரணமாக, 1970 ம் ஆண்டுக்கும் 1979 ம் ஆண்டுக்கும் இடையேயுள்ள காலத்தில் வெளிநாட்டுக் கொள்வனவுகளின் சராசரி வருடாந்த விகிதம் வெனிசூலாவில் 12 சத விகிதமும் நைஜீரியாவில் 20 சத விகிதமும், சவூதி அரேபியாவில் 39 சத விகிதமும் வளர்ந்தன.

1960 - 70 தசாப்தத்தில் நடைபெற்ற வருடாந்த இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில், மிகக் குறைந்த வளர்ச்சி விகிதம் வெனிசூலாவைப் பொறுத்தவரை இன்னும் மூன்று மடங்கு உயர்ந்தும், இந்தோனீஷியா விஷயத்தில் ஆறுமடங்குக்கு மேல் உயர்ந்தும், நைஜீரியா விஷயத்தில் 13 மடங்கு உயர்ந்தும், அல்ஜீரியா விஷயத்தில் 15 மடங்கு உயர்ந்தும் இருந்தது. இந்த இறக்குமதிகளில் கணிசமான பகுதி மூலதனச் சாமான்களாகவும் பாதுகாப்புத் தேவைகளாகவும் இருந்த அதேசமயத்தில், நுகர்ப்பொருள்களும் தமது விசேஷ பங்கைப் பெற்றன.

1973 ம் ஆண்டுக்குப் பின் பெற்றோலியம் வருமானங்கள் அதிகரித்ததுடன் பெரும்பாலான எண்ணெய் வள நாடுகளின் கொள்வனவுச் சக்தியும் கூடிவிட்டது. இந்த நாடுகள் பெரும்பாலும் தங்களுடைய தேவைகளில் 80 சத விகிதத்திலிருந்து 90 சத விகிதம் வரை இறக்குமதி செய்கின்றன. மேலும், இந்நாடுகள் அண்மையில் பிரமாண்டமான அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துள்ளன. இதனால் இந்நாடுகளில் தனித் திட்ட 'கொந்தராத்து' களுக்கு நிறையச் சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளன. ஆதலால், அந்நாடுகளுடன் வியாபாரத்தையும் பொருளாதார ஒத்துழைப்பையும் விரிவாக்க இந்தியா இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வது பொருத்தமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 10 இதழ் 2/3

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No 1274

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## நிரல்கள்


| | | |
|---|---|---|
| நிகழ்ச்சிக்குறிப்பேடு | 2 | மே 1984 |
| கடற்றொழில் | 14 | கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் |
| வெளிநாட்டுச் செய்தித்தொகுப்பு | 16 | இந்தியா - நீதியுடன் வளர்ச்சிக்கு வற்புறுத்தல் |


## விசேஷ அறிக்கை

3 பொருளாதாரம் - 1984

கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| காமினி அபேசேகரா | 4 | பொருளாதார ஆய்வு - 1984 |
| டப். எம். திலகரத்ன | 17 | அபிவிருத்தியில் வங்கிகளின் பங்கு |
| எஸ். ஹெட்டிகே | 23 | இலங்கையில் கல்வி — சில கருத்துரைகள் |
| வி. சந்திரசேகரராவ் எம். கே. கஞ்சு | 28 | ஒபெக்குக்கான வாய்ப்புக்கள் — தப்பெண்ணங்களும் யதார்த்தமும் |
| லால் டி அல்விஸ் | 32 | உலர் வலயத்தில் உள்ளூர் மீன் பிடி — அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் |


பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூக பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும், அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதன் சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களில் நேரிலோ பெற்றுக் கொள்ளலாம்.

## அடுத்த இதழில்

- ★ இலங்கையில் ஏற்றுமதி அபிவிருத்தி - கொள்கைகளும் சாதனைகளும்
- ★ இலங்கையின் கிராமியத் துறையில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் பங்களிப்பு
- ★ சிறிய நீர்ப்பாசன அமைப்புக்களும் பொருளாதாரத்தில் அவற்றின் முக்கியத்துவமும்
- ★ சேமநல சேவைகள் அரசு: இலங்கையின் சேமநலப் பொருளாதாரம் பற்றிய ஒரு பார்வை

அட்டைப்படம்:
பாலித்த கன்னங்கரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

மே

5. மத்திய வங்கி, பொது மக்களுக்கு அதிக அனுகூலங்களைத்தரக்கூடிய பிணைப்பத்திரங்களை விநியோகிப்பதன் மூலம் தற்போதைய 14 சத வீத பணவீக்கத்தைக் குறைக்க முடியுமென எதிர்பார்க்கிறதென வங்கி ஆளுனர் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார். இந்நடவடிக்கை பணவீக்கத்துக்கு எதிரானது எனக்கருதப்படுவதுடன், விலைகளை ஸ்திரப்படுத்தும் என்றும் நம்பப்படுகின்றது. பண நிரம்பலில் திடீரென ஏற்பட்டுள்ள அதிகரிப்பு - 24 சத வீதம் - தேயிலை விலைச் செழிப்பினால் தூண்டப்பட்டது என்றும் அவர் கூறினார். மேலதிக திரவத்தன்மை 170 கோடியிலிருந்து 200 கோடி ரூபா வரையில் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

7. தற்போதைய அமைதியான உலக எண்ணெய்ச் சந்தை நிலைமையை கருத்தில் கொண்டு, எண்ணெய் விலைகளையும், வெளியீட்டினையும் எவ்வித மாற்றமுமின்றி தொடர்வதாக ஒபெக் ஸ்தாபனம் தீர்மானித்திருப்பதாக ரொய்ட்டர் செய்தி ஒன்று தெரிவித்தது.

8. வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக்கமிட்டி 1984 ன் முதல் காலாண்டில் 17 கூட்டு முயற்சி செய்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கியிருப்பதாக பத்திரிகை அறிக்கையொன்று தெரிவித்தது. இச்செய்திட்டங்களின் மொத்த மூலதனம் 59.7 கோடி ரூபாவாகும்; இதில் வெளிநாட்டுப்பங்களிப்பு 27.8 கோடி ரூபாவாக இருப்பதுடன், இச்செய்திட்டங்கள் 5,697 பேருக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் ஆற்றல் கொண்டவையாகவும் இருக்கும்.

9. நவம்பர் 30, 1984 க்கு முன்னர் துறை முகத்துக்கு வந்து சேரும் உளுந்துக்கான தீர்வை விகிதத்தை அரசாங்கம் கிலோ ஒன்று ரூ. 20 இலிருந்து ரூ. 2.50 ஆக தற்காலிகமாக குறைத்தது. கடந்த போகத்தின் போது மோசமான கால நிலை காரணமாக உளுந்து உற்பத்தி பாதிக்கப்பட்டதன் விளைவாக சந்தையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குமுகமாகவே இத்திருத்தம் அறிமுகஞ் செய்யப்பட்டது.

12. அபாயமெதுக்கள் மலிந்த செய்திட்டங்களை நிதிப்படுத்துவதற்காக அண்மையில் 100 கோடி ரூபா அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட மூலதன அபிவிருத்தி முதலீட்டு நிறுவனம், அதன் முதலாவது முதலீடான 1.6 கோடி ரூபாவை பெல்வத்தை சீனிக் கம்பெனியில் செய்துள்ளது என நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

16. பண, கடன் வளர்ச்சியை நியாயமான மட்டத்தில் பேணுவதனை கருத்திற்கொண்டு வர்த்தக வங்கிகள் தனியார் துறைக்கு வழங்கும் கொடுகடனில் மத்திய வங்கி கட்டுப்பாடுகளை விதித்தது. வர்த்தக வங்கிகள் வழங்கிய கடனினதும், நிலுவையாக இருக்கும் கடனினதும் மொத்தம் 1984 மே 11 ந் திகதியிலிருந்த தொகையை விடவும் 5 சத வீதத்துக்கு மேல் அதிகமாக இருக்கக் கூடாதென பணிக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்துக்காக (அபிவிருத்தி வங்கிகள் தவிர்ந்த) அரசாங்க கூட்டுத்தாபனங்களும், சட்டரீதியாக தாபிக்கப்பட்ட நிறுவனங்களும் தனியார் துறையாக கருதப்படும் விவசாயத்துக்கும், ஏற்றுமதிகளுக்கும் வழங்கப்பட்ட கடன்களுக்கு இக்கட்டுப்பாட்டிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

16. சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திலிருந்து பெறவிருக்கும் 3 கோடி அமெரிக்க டொலர் கடனுக்கும், சர்வதேச அபிவிருத்தி, ஆராய்ச்சிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறவிருக்கும் 1.2 கோடி அமெரிக்க டொலர் கடனுக்குமான ஒப்பந்தங்களில் கலந்து கொள்வதற்கான அரச அங்கீகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சருக்கு வழங்கப்பட்டது. இக்கடன்கள் துரித மகாவலி அபிவிருத்திச் செய்திட்டத்தின் 'பி' அமைப்பின் வலது கரைவாய்க்காலுக்கானவையாகும்.

18. கனடாவிலிருந்து சில குறிப்பிட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கும், கண்காணிப்பு, மதிப்பீட்டு சேவைகளை வழங்குவதற்குமான 1.5 கோடி கனேடிய டொலர் (29.5 கோடி ரூபா) கொடைக்கான பத்திரங்களை கனேடிய, இலங்கை அரசாங்கங்கள் பரிமாறிக்கொண்டன.

இலங்கையின் கலாசார முக்கோணத்தில் இருக்கும் கலாசார சின்னங்களைப்புனருத்தாரணம் செய்வதற்கும், பாதுகாப்பதற்குமென ஜப்பான் இலங்கைக்கு வழங்கும் 5 கோடியென் (54 லட்சம் ரூபா) கொடைக்கான பத்திரங்களை இரு நாட்டு அரசாங்கங்களும் பரிமாறிக் கொண்டன.

இலங்கையில் தொலைக்காட்சி ஒளிபரப்பை விஸ்தரிப்பதற்காக ஜப்பானிய அரசாங்கம் வழங்கும் 143 கோடி யென் (15.3 கோடி ரூபா) கொடை தொடர்பான பத்திரங்களை இரு நாடுகளும் பரிமாறிக்கொண்டன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு தேவையான இரு கட்டிடங்களையும், அது தொடர்பான வசதிகளையும் உருவாக்குவதற்கு தேவையான பொருட்களையும், சேவைகளையும் கொள்வனவு செய்வதற்காகவும், இரு ஒளிபரப்பு நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் இக்கொடை பயன்படுத்தப்படும்.

22. முன்னைய அரிசி - இறப்பர் ஒப்பந்தத்துக்கு ஒத்ததான பொருளாதார - வர்த்தக கூட்டுறவு ஒப்பந்தமொன்றில் இலங்கையும் சீனாவும் கைச்சாத்திட்டன. பொருளாதார - வர்த்தக ஒத்துழைப்புக்கான கூட்டுக்கமிட்டி ஒன்றை நிறுவுவதையும் இவ்வொப்பந்தம் உள்ளடக்கியிருந்தது.

28. 1985 ஜூலையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் செவனகல சீனிச் செய்திட்டம் தேசிய சீனித் தேவையில் 10 சத வீதத்தை வழங்கும் என இலங்கை சீனிக்கூட்டுத்தாபன தலைவர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார். வருடாந்தம் 25,000 மெட்ரிக் தொன் உற்பத்தி ஆற்றல் கொண்ட இச்செய்திட்டத்துக்கு கூட்டுத்தாபனம் மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியை நாடியுள்ளது.

30. குடிசன மதிப்பு, புள்ளி விவரத்திணைக்களத்தினால் கணக்கிடப்படும் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் (கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்) 1984 ஏப்ரல் இறுதியில் 548.9 ஆக இருந்தது. இது 1982 ஏப்ரலில் 412.6 ஆகவும், 1983 ஏப்ரலில் 460.0 ஆகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையின் பொருளாதாரம்-1984

1984 ன் நடுப்பகுதியில் இலங்கையின் சென்மதி நிலுவை நிலைமை கணிசமான அளவில் ஸ்திரமடைந்திருந்தது. 1983 ன் நடுப்பகுதியில் 530 கோடி ரூபாவாக (அல்லது 21.4 கோடி எஸ். டி. ஆர். ஆக) இருந்த நடைமுறைக்கணக்கு பற்றுக்குறை 1984 மத்தியில் 120 கோடி ரூபாவாக (4.8 கோடி எஸ். டி. ஆர். ஆக) குறைந்திருந்தது. வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் கிடைத்த வெளிநாட்டு நாணய பெறுவனவுகள் 1983 ன் இதே காலப்பகுதியை விடவும் 850 கோடி ரூபாவால் அதிகரித்திருந்தன. சர்வதேச பொருளாதார அரங்கில் (சமாளிக்கக் கூடிய) சிலபிரச்சினைகள் எழுந்த போதிலும் பொருளாதாரம் பெருமளவில் ஸ்திரமடைந்திருந்தது.

பல்வேறு உற்பத்தித் துறைகளிலும் — குறிப்பாக பெருந்தொட்டத் துறையிலும், கைத்தொழில் ஏற்றுமதித் துறையிலும் - 1984 செப்டம்பர் வரையில் குறிப்பிடத்தக்க அளவிலான சம்பாத்தியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேயிலை, இறப்பர் என்பவற்றின் விலைகளில் 1983 இறுதியிலிருந்து நிகழ்ந்து வந்த உயர்ச்சிப் போக்கிலான மாறுதல்கள் 1984 முழுவதும் நிலையாக இருந்து வந்தன. அதிகரித்த விலைகள் மூலம் இத்துறைகளுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பம் முற்று முழுதாகப் பயன்படுத்தப்பட்டதுடன், கவர்ச்சிகரமான விலைகளின் விளைவாக உற்பத்தி மட்டங்களும் அதிகரித்தன.

அரை வருட இறுதியில் தேயிலை உற்பத்தி முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியை விடவும் 37 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. ஏற்றுமதி மூலமான வருமானம் 700 கோடி ரூபாவாக இருந்தது. முன்னைய ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடும் போது 1984 ன் முதலரைப் பாகத்தில் இறப்பர் மூலமான சம்பாத்தியங்கள் 33 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. கைத்தொழில் ஏற்றுமதிகள் மூலமான வருமானம் 610 கோடி ரூபாவாக இருந்ததுடன், இதில் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்பு 40 சத வீதமாகும். துணிமணிகள், தயார் செய்யப்பட்ட ஆடைகள் என்பவற்றின் மூலமான சம்பாத்தியங்கள் 44 சத வீத வளர்ச்சியையும், பெட்ரோலியம் மூலமான சம்பாத்தியங்கள் 42 சத வீத வளர்ச்சியையும் பதிவு செய்தன.

கடந்த நான்கு வருட புள்ளி விவரங்களுடன் 1984 ன் வருட மத்திய வெளிநாட்டுச் சொத்து மட்டங்களை ஒப்பிட்டுப்பார்க்கும் போது ஸ்திரமடைந்து வரும் வெளிநாட்டு ஒதுக்குகளின் மட்டத்தைக் காண முடிகிறது. 1981 ல் ரூ. 640 கோடியாகவும், 1982 ல் ரூ. 750 கோடியாகவும், 1983 ல் ரூ. 1090 கோடியாகவும் இருந்த இத்தொகை 1984 ஜூனில் ரூ. 1570 கோடியாக அதிகரித்திருந்தது. முன்னர் இருந்த வெளிநாட்டுச் சொத்தொறுக்கு 2 அல்லது 3 மாத இறக்குமதிகளுக்கே போதுமானதாக இருந்தது ஆனால், 1984 ஆகஸ்ட் அளவில் 5 மாத இறக்குமதிகளை ஈடு செய்யக் கூடிய சொத்துக்கள் திரண்டிருந்தன.

ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் பெருமளவில் அதிகரித்ததன் விளைவாக வரவு செலவுத்திட்ட தேறிய பணப்பற்றுக்குறையை 1680 கோடி ரூபாவுக்குள் கட்டுப்படுத்த முடிந்தது. மொத்த உள் நாட்டு உற்பத்தியின் சதவிகிதமாக கூறுவதானால், 1982 ல் 17 சத விகிதமாக இருந்த இது 1984 ஆகஸ்டில் 9.8 சத வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 1982/83 ல் 2010 கோடி ரூபாவாக இருந்த வரவு செலவுத்திட்டப்பற்றுக் குறை 1984/85 ல் ரூ. 800 கோடியாக குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம் 1984

**கலாநிதி காமினி அபேசேகர**

(மேலதிக பணிப்பாளர், பொருளாதார விவகாரங்கள், நிதிப் பிரிவு, நிதி, திட்டமிடல் அமைச்சு)

இலங்கையை ஒத்த தலா நபர் வருமானமட்டங்களை உடைய ஒரு குறைவிருத்திப் பொருளாதாரத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் சமூக அபிவிருத்தி மட்டத்தை விடவும் சிறந்த ஒரு நிலையை இலங்கை பெற்றிருப்பது ஒரு சுவாரஷ்யமான விஷயமாகும். சுதந்திரத்தின் முன்னரும் அதன் பின்னரும் ஆட்சி புரிந்த அரசாங்கங்கள் சமூக நலத் திட்டங்கள், பகிர்வுக் கொள்கைகள் என்பவற்றின் மீது செலுத்திய அக்கறையின் விளைவாக சமூகத் துறையில் இந்த அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது எனலாம். ஒப்பீட்டு ரீதியில் சாதகமான வெளிநாட்டு வர்த்தக நிலைமைகள், நாட்டின் ஒன்றுதிரண்ட வெளிநாட்டுச் சொத்து என்பன அபிவிருத்திக்குரிய இத்தகைய ஒரு அணுகு முறையைக் காரிய சாத்தியமாக்கின. ஆனால், 1960 க்களின் மத்திய பகுதியிலிருந்து எதிர்நோக்கிய பாதகமான வர்த்தக மாற்றுவிகிதம், வளர்ந்து வந்த சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் என்பன நாணயமாற்று, இறக்குமதிக் கட்டுப்பாடுகள், பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துவதற்குரிய நிர்வாக ரீதியான செய்முறைகள் என்பவற்றை உள்ளடக்கிய உள்வாரியான கொள்கைகளைப் பின்பற்றுவதற்கு வழிவகுத்தன. எழுபதுக்களின் ஆரம்பப் பகுதியில் நாடு எதிர்நோக்கிய, எதிர்நோக்க வேண்டியிருந்த மோசமான வலு நிலைமையின் விளைவாக இது மேலும் ஸ்திரமடைந்தது. இவ்வலுப் பிரச்சினையானது குறைந்த பொருளாதார வளர்ச்சி, வேலையின்மை ஆகிய இரட்டைப் பிரச்சினைகளை மிகவும் மோசமாக்கியதுடன், செலவுத் தூண்டல் வீக்கத்திற்கும் வழிவகுத்தது. இச்சூழ்நிலையிலேயே 1977 இன் பிற்பகுதியில் புதிய பொருளாதாரக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1977 நவம்பரில் ஆரம்பிககப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களும் இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் நிதி, நாணய, நாணய மாற்று விகிதாசார, வர்த்தக, சென்மதி நிலுவை என்பன தொடர்பான பல தொடர்ச்சியான படிகளைக் கொண்டிருந்தன. ஒரு புறத்தில் இப் புதிய அணுகுமுறை சந்தைப் பொறிமுறைகள், சுதந்திர வர்த்தகம் என்பவற்றின் மீது கூடுதலாகத் தங்கியிருக்கின்ற பண்பினைக் கொண்டிருந்த அதே வேளை மறுபுறத்தில், பொருளாதார வளர்ச்சியையும் வேலைவாய்ப்பினையும் ஊக்குவிக்கின்ற பிரதான பொறுப்பினையும் கொண்டிருந்தது. இதன்படி வளர்ச்சி, வேலைவாய்ப்பு என்பவற்றைத் துரிதப்படுத்தும் வகையில் பாரிய பொதுத் துறை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன: இவை முதலீட்டிலும் வேலைவாய்ப்பினைத் தோற்றுவிப்பதிலும் தனியார், வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிப்பதனையும், முன்னணியில் திகழச் செய்வதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தன.

பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளினதும் உற்பத்தி இயலளவினை விரிவாக்கும் நோக்கத்துடனான மூலதனச் செறிவுள்ள, நீண்டகாலச் செயற்பாட்டுத்தன்மை கொண்ட பொதுவசதிச் செய்திட்டங்களை அமுலாக்குவதே அரசாங்கத்தின் உபாயமாக விளங்கியது. அரசாங்கம் அளித்த பல்வேறு ஊக்குவிப்புக்களையும் பொது வசதிகளையும் பயன்படுத்தி, விரைவில் பயனளிப்பதும் மிகை உற்பத்தியை அளிப்பதுமான கைத்தொழில், விவசாய, வர்த்தக நடவடிக்கைகளில் தனியார் வெளிநாட்டு மூலதனம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. மேலும், ஒரு தாராள திறந்த பொருளாதாரக் கொள் நிலவுவதற்குரிய வழியாக ஏற்றுமதி விஸ்தரிப்பும் உற்பத்தி அதிகரிப்பும் வலியுறுத்தப்பட்டன. இதனை அடைவதற்கு ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தி, ஊக்குவிப்பதும் இறக்குமதி நாணய மாற்று வசதிகளை உற்பத்தி சார்ந்த நோக்கங்களுக்கும் பயன்படுத்துவதும் முக்கியமாகும்.

### பொருளாதாரத்தின் மொத்த செயற்திறன்

ஆரம்ப வருடங்களில் இலங்கை சமூகத் துறையில் அபிவிருத்தி காண்பதில் குறிப்பிடத்தக்க வெற்றி கண்டது. தாய், சிசு மரண விகிதாசாரத்திலும் மொத்த மரண விகிதாசாரத்திலும் வீழ்ச்சி, ஆயுள் அதிகரிப்பு, போஷாக்கு அதிகரிப்பு, மக்களின் கல்வி வளர்ச்சி என்பன குறிப்பிடத்தக்க சாதனைகளாகும். எனினும், பொருளாதார வளர்ச்சி பின்தங்கியிருந்தது; சனத்தொகை அதிகரிப்புடன் இணைந்த வகையில் உற்பத்தி அதிகரிக்காமையால் நாட்டின் தலா வருமானம் ஒப்பீட்டுரீதியில் குறைவாகவிருந்தது. அதிகரித்து வந்த வேலையின்மையுடன் இணைந்த பொருளாதாரத் தேக்கம் எழுபதுக்களின் பாரிய அரசியல், சமூகப் பிரச்சினையாக தலையெடுத்தது.

எழுபதுக்களின் தசாப்தத்தில் பிரதானமாக சமூக, பொருளாதார மாறிலிகளின் தன்மையை அட்டவணை 1 காட்டுகின்றது. 13 சதவீதத்திலும் குறைந்த சேமிப்பு விகிதாசாரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 - 77 கால கட்டத்தில் தேசிய வெளியீட்டு வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியது. மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வருடாந்தம் சராசரியாக 3 சதவீதமாக இருந்த அதே வேளை, சனத்தொகையின் வருடாந்த சராசரி வளர்ச்சி 2 சதவீதமாகவிருந்தது. ஆகையால் இக் காலப் பகுதியில் தலா வருமானம் குறைவாகவே வளர்ச்சியடைந்தது. 1970 இல் ரூபா 1,036 ஆகவிருந்த தலா வருமானம் 1977 இல் ரூபா 2,470 ஆக இரு மடங்காக அதிகரித்த போதிலும், வீக்கத்தாக்கமே இதற்குக் காரணமாகும். விலை அதிகரிப்புக்களைக் கழித்த பின்னர் 1977 இன் தலா வருமானம் மெய்ரீதியாக 1,143 ரூபாவாக விருந்தது; இது சென்ற ஏழு வருடத்திற்குமுரிய 10 சதவீத திரண்ட வளர்ச்சியாகும். அமெரிக்க டொலரின் படி 1973 இல் இலங்கையின் தலா வருமானம் 110 டொலர்களாகும்; 1977 இல் இது 200 டொலர்களாகவிருந்தது.

1977 இன் பின்னர் அமுலாக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை முதலீட்டையும் வளர்ச்சியையும் துரிதப்படுத்துவதில் தாக்கம் ஏற்படுத்தியது போல் தென்படுகின்றது. 1978 - 83 கால கட்டத்தில் சராசரி மூலதன உருவாக்க மட்டம் 28 சதவீதமாகவிருந்தது. இதன் மட்டம் 1980 ல் 34 சதவீதமாக உயர்ந்திருந்தது. 1970 - 77 கால கட்டத்தை விடவும் கடந்த ஆறு வருடங்களுள் முதலீட்டு விகிதாசாரம் இரு மடங்காக அதிகரித்தமை குறிப்பிடத்தக்க ஒரு அபிவிருத்தியாகும். இத் தகைய பாரிய முதலீட்டு அபிவிருத்திக்கு வெளிநாட்டு மூலவளப் பாய்ச்சல் ஒரு பிரதான காரணமாகும்; 1977 இல் புதிய பொருளாதாரக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப் பட்டதனைத் தொடர்ந்து மொத்த மூலதன உருவாக்கத்தில் வெளிநாட்டு மூலவளங்களின் பங்கு 46 சதவீதமாகும். வேறு வார்த்தைகளில் கூறினல் உள்நாட்டு சேமிப்பு விகிதாசாரம் நாட்டின் முதலீட்டுத் தேவைகளுடன் இணைந்ததாக இருக்கவில்லை. மொத்தத் தேசிய சேமிப்பினைப் பொறுத்தவரையிலும் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் அனுப்பிய செலுத்தல்கள் உள்நாட்டுச் சேமிப்பினைக் குறை நிரப்பின.

உதாரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தேசிய சேமிப்பு 15 சதவீதமாக விருந்தது; 1970 - 77 காலக்கட்டத்தில் இது 12.7 சதவீதமாகவிருந்தது. முதலீடு துரிதமாக அதிகரித்த அதேவேளை, ஒப்பீட்டு ரீதியில் சேமிப்பு நிலையாக இருந்ததனல் தேவைப்பட்ட முதலீட்டுக்கும் இடம்பெறக்கூடிய சேமிப்பிற்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கு வெளிநாட்டு மூலகங்களின் நிதிப்படுத்தல் தேவைப்பட்டது. பெருமளவுக்கு வெளிநாட்டு உதவியை நாடுதல் எதிர்காலத்தில் கடன் சேவையில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதாகும்; பெருமளவு

**அட்டவணை 1**

இலங்கையின் சமுக - பொருளாதார அபிவிருத்தி 1970, 1978, 1983 வருடங்களில்

| | 1970 | 1977 | 1978 | 1983 |
|---|---|---|---|---|
| 1. பொருளாதார வளர்ச்சி (அ) மொ. தே. உ. தலா (ரூபா) நடைமுறை விலைகள் | 1036 | 2470 | 2836 | 7017 |
| (ஆ) மொ. தே. உ. தலா (ரூபா) 1970 விலைகளில் | 1036 | 1143 | 1221 | 1432 |
| 2. வருட மத்தியில் சனத்தொகை ('000) | 12,514 | 13,942 | 14,190 | 15,416 |
| 3. வேலை வாய்ப்பு ('000) | 3550 | 3854 | 4065 | 5002 |
| 4. வேலையின்மை ('000) | 747 | 1284 | 1193 | 865 |
| 5. வேலைப் பட்டாளத்தில் வேலையின்மை விகிதாசாரம் | 17.4 | 25.0 | 22.7 | 14.7 |
| 6. மொத்த உள்ளூர் முதலீடு (ரூ. பத்துலட்சம்) | 2589 | 5259 | 8554 | 35,471 |
| 7. தேசிய சேமிப்புக்கள் (ரூ. பத்துலட்சம்) | 1930 | 6539 | 6622 | 20,166 |
| 8. மொ. உ. உ. யில் முதலீட்டு % | 18.9 | 14.4 | 20.0 | 29.0 |
| 9. மொ. உ. உ. யில் சேமிப்பு % | 14.1 | 18.0 | 15.1 | 16.5 |
| 10. மொ. உ. உ. யில் வெளிநாட்டு முதலீடுகளின் % | 4.8 | — 3.6 | 4.5 | 12.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி; நிதி, திட்டமிடல் அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு மூலதனத்தை இலங்கையால் கவர முடிந்தமை, நாட்டில் நிலவிய சிறந்த நிதி முதலீட்டு நிலைமைக்கு அத்தாட்சியாகும். இத்தகைய மூலதனத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தி, மூலதன, வட்டிச் செலுத்தல்கள் ஏனைய கட்டணங்கள் போன்றவற்றைச் செலுத்துவதற்குத் தேவையான மிகைகளையும் ஏற்றுமதி வருமானத்தையும் தோற்றுவிப்பது நாட்டின் முன்னுள்ள பணியாகும்.

### பிரதான பொருளாதாரத் துறைகள்

வளர்ச்சிக்கான தூண்டுதல் ஓரிரு நடவடிக்கைகளில் இருந்து அன்றி மொத்த பொருளாதாரத் துறைகளிலிருந்தும் உருவாகிவர வேண்டும் என்பது ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியதாகும். உள்ளூர் விவசாயம் நிருமாணம், சேவைத் துறைகள் என்பன பிரதானமானவைவாகும். தொழில் வாய்ப்புக்களை விஸ்தரித்து, வருமானத்தை அளிக்கக்கூடிய இத் துறைகள் 1978 - 83 காலகட்டத்தில் உயர் விகிதாசாரத்தைக் கொண்டிருந்தன. எழுபதுக்களின் ஆரம்பப் பகுதியில் உள்நாட்டு விவசாயம் 3.5 சதவீத சராசரி வளர்ச்சி விகிதாசாரத்தைக் கொண்டிருந்தது; அண்மைக் காலத்தில் இவ் வளர்ச்சி விகிதாசாரம் 5 சதவீதமாக அதிகரித்துள்ளது. எதிர்கணிய வளர்ச்சி விகிதாசாரத்தைக் கொண்டிருந்த நிருமாணத் துறை 1978 - 83 காலகட்டத்தில் 9 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. போக்குவரத்து, செய்திப் பரிமாற்றம், வர்த்தகம், நிதி, வங்கியியல், பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்கிய சேவைத் துறை, 1977 இல் தாராண்மைப் பொருளாதாரக் கொள்கைகளின் பின்னர் 7 சதவீத வளர்ச்சியைக் காட்டின. இவ்வாறாக புதிய பொருளாதாரக் கொள்கை பல்வேறு துறைகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தி வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்தது.

உணவில் தன்னிறைவு இலக்கினை நோக்கி இலங்கையை இட்டுச் செல்லக்கூடிய அளவிற்கு அண்மைக் காலத்தில் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு விவசாயத் துறையில் குறிப்பிடத்தக்கதாகும். நெற் செய்கை 600,000 பேருக்கு வேலை வாய்ப்புக்களை அளிப்பதுடன் நாட்டில் செய்கைக்கு உட்படுத்தக்கூடிய நிலத்தில் ஐந்திலொரு பங்கினையும் கொண்டுள்ளது. பெருமளவிற்கு நெல் சிறு விவசாயிகளின் பயிராகும். நாட்டில் உள்ள 16 லட்சத்துக்கும் கூடுதலான நெற் செய்கைக் காணிகளில் 74 சதவீதம் ஒரு ஹெக்டரிற்கும் குறைந்த பரப்பளவினைக் கொண்டதாகும். ஆகையால் நெல் உற்பத்தியிலும் விலையிலும் ஏற்படுகின்ற அதிகரிப்பு கிராமீயத் துறையில் வேலை வாய்ப்பு அதிகரிப்பிற்கும் வருமானப் பகிர்விற்கும் வழிவகுக்கின்றது. 1976/77 சிறு போகத்திலும் பெரும் போகத்திலும் 8 கோடி புசல்களாகவிருந்த நெல் உற்பத்தி 1983/84 இல் 11.8 கோடி புசல்களாகவிருந்தது. விளை நிலப் பரப்பளவில் ஏற்பட்ட அதிகரிப்பினை விடவும் உற்பத்தி முறைகள், சிறந்த விதை இனங்கள், பசளை போன்ற உள்ளீடுகளின் அதிகரித்த பாவனை என்பவற்றின் விளைவாகவே இந்த உற்பத்தி அதிகரிப்பு ஏற்பட்டது. இதன் விளைவாக சராசரி விளைச்சலும் அதிகரித்தது; 1977 இல் 47.7 புசல்களாகவிருந்த விளைச்சல் 1983 இல் 69.7 புசல்களாக அதிகரித்தது. விலையின் வாயிலாக அளிக்கப்பட்ட ஊக்குவிப்பு உற்பத்தியை அதிகரிக்கச் செய்து, சந்தைப்படுத்தக் கூடிய மிகையையும் தோற்றுவித்தது. 1978 இல் புசலுக்கு ரூபா 33 ஆகவிருந்த நெல் உத்தரவாத விலை 1983 இல் ரூபா 62.50 ஆக அதிகரித்தது; இதே காலகட்டத்தில் பகிரங்க சந்தையில் ஒரு புசல் அரிசியின் விலை ரூபா 75 ஆகவிருந்தது.

எனினும், இதே காலப்பகுதியில் ஏற்றுமதி சார்ந்த பெருந்தோட்டத்துறையின் செயற்திறன் விவசாயத்தைப் போன்று சிறப்பானதாக இருக்கவில்லை. 1978 - 83 காலகட்டத்தில் தேயிலை, தென்னை, இறப்பர் என்பவற்றின் சேர்க்கப்பட்ட பெறுமதியில் சிறிதளவு அபிவிருத்தியே காணப்பட்டது. 1970 - 77 காலப்பகுதியில் பதியப்பட்ட முரணான வளர்ச்சி விகிதாசாரமான 1.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டப் பயிர்களின் இச் சிறிய மீட்சி ஊக்கமளிப்பதாகவிருந்த போதிலும் விவசாயத் துறையின் மொத்தச் செயற் திறனில் குறிப்பிடத்தக்க பாதிப்பினை ஏற்படுத்துவதற்குப் போதியதாக இருக்கவில்லை. இலங்கையின் மொத்த உள்ளூர் உற்பத்தியில் விவசாயத் துறை நான்கிலொரு பங்கினை வகிப்பதால், ஏனைய எல்லாத் துறைகளை விடவும் கூடுதலாக விவசாயத் துறையின் செயற்திறன் பொருளாதாரத்தின் மொத்தமான வளர்ச்சி விகிதாசாரத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது. மேலும் பெருந்தோட்டப் பயிர்கள் நாட்டுக்கு ஏற்றுமதி வருமானத்தை உழைத்துத் தருவதனால் இவற்றின் உற்பத்திப் போக்கினை விடவும் ஏற்றுமதி முக்கியமாகும். மொத்த ஏற்றுமதி வருமானத்தில் ஏறக்குறைய 50 சதவீதம் தேயிலை, தென்னை, இறப்பர் என்பவற்றிலிருந்து பெறப்படுகின்றது; இவை இலங்கையின் நிலப்பரப்பில் ஏறக்குறைய 41 சதவீதத்தை உள்ளடக்குகின்றன. எழுபதுக்களில் நாடு எதிர்நோக்கிய வலுப் பிரச்சினையின் பின்னர், இலங்கையின் பொருளாதாரம் எதிர்நோக்கிய ஒரு பாதக காரணியாக இதனைக் குறிப்பிடலாம்.

தயாரிப்புத் துறைக்குத் தேவையான இயந்திர சாதனங்கள், கருவிகள், மூலப் பொருட்கள் என்பவற்றைத் தாராளமாக வழங்கி ஊக்கப்படுத்துவதுடன் வலு, செய்திப் பரிமாற்றம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து போன்ற பொது வசதிகளை விஸ்தரிப்பதற்கு உதவுதலும் நாணயமாற்று, இறக்குமதி என்பன தொடர்பான தாராண்மைக் கொள்கையின் பிரதான நோக்கமாகும். எனினும், இது வரையிலும் கைத்தொழிற் துறையின் செயற்திறன் எதிர்பார்க்கப்பட்டது போன்று இல்லை; இன்னும் மொத்த உள்ளூர் உற்பத்தியில் இத் துறையின் பங்கு 14 சதவீதமாகவே இருக்கின்றது. எனினும் எமது தனியார் துறைக் கைத்தொழில்கள் அதிகரித்த இயலளவுப் பயன்பாட்டினைக் காட்டுகின்றன. உதாரணமாக, 1977 க்கு முன்னர் 60 சதவீதமாக மதிப்பிடப்பட்டிருந்த கைத்தொழிற் துறையின் இயலளவுப் பாவனை, தாராண்மைக் கொள்கையின் அமுலாக்கத்தைத் தொடர்ந்து படிப்படியாக அபிவிருத்தியடைந்து 1983 இல் 76 சதவீதமாக உறுதியடைந்தது. 1970 - 77 காலகட்டத்தில் சராசரியாக 1 சதவீதமாகவிருந்த கைத்தொழிற் துறையின் வளர்ச்சி விகிதாசாரம் 1977 இன் பின்னர் வருடாந்தம் 5 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. அதிகரித்த இயலளவுப் பாவனைக்கு மேலதிகமாக புதிய முதலீடுகள், இயக்கத்திலுள்ள கைத்தொழில்களின் விரிவாக்கம் என்பனவும் இதற்கு உதவின எனலாம். புதிய முதலீடுகளைப் பொறுத்தவரையிலும் சுதந்திர வர்த்தக வலயத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கைத்தொழில் முயற்சிகள் 1980 க்களில் ஒரு பிரதான வளர்ச்சி மூலமாக விளங்கின எனலாம். பொருளாதாரத் தாராண்மைவாதம் கைத்தொழிற் துறையில் ஏற்படுத்திய பாதிப்பு தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன; அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு அமைவான முறையில் ஊக்குவிப்புக்களையும் சுங்க வரிகளையும் ஒழுங்கமைப்பதுடன் இத் துறைக்கு வேறு வகையான உதவிகளையும் அளிப்பதற்கு முன்வந்துள்ளது.

சேவைத் துறைகளைப் பொறுத்தவரையிலும் பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்த இரு பிரதான அம்சங்களை அவதானிக்கலாம்.

(1) போக்குவரத்து செய்திப் பரிமாற்றம், வலு போன்ற பொது வசதித் துறைகள் (2) வர்த்தக, வணிக நடவடிக்கைகள். ஒரு புறத்தில் இறக்குமதித் தாராண்மைக் கொள்கை, பொது வசதிகளுக்குத் தேவையான வாகனங்கள், கருவிகள், தொழில்நுட்பம் போன்றவற்றை நிரம்பல் செய்தது. மறுபுறத்தில், 1977 இன் இறுதிப் பாகத்தில் மேற்கொள்ளப்பட்ட தாராண்மைப் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாகப் பல்வேறு துறைகளிலும் பொருளாதார நடவடிக்கைகள் அதிகரித்ததன் விளைவாகப் பொது வசதிகளுக்கான கேள்வி விரைவாக அதிகரிக்கலாயிற்று.

உதாரணமாக, 1970 - 77 காலகட்டத்தில் 7 சதவீதமாகவிருந்த மின்சாரத்திற்கான கேள்வி வளர்ச்சி விகிதாசாரம் 1978 - 1979 இல் 12 சதவீதமாக வளர்ச்சி அடையத் துவங்கியது. ஆகையால் நாட்டின் மின்சார வலு இயலளவைக் குறை நிரப்புவதற்கு செலவுமிக்க அனல் வலுவினை உற்பத்தி செய்ய வேண்டி ஏற்பட்டதுடன், விலைக் கொள்கையின் ஊடாக கேள்வியைக் கட்டுப்படுத்த வேண்டியுமிருந்தது. பெற்றோலிய நுகர்வினும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது; வாகன இறக்குமதியுடன் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் புதிய பதிவுகளை 27 சதவீதமாக அதிகரித்தன. துரித பொருளாதார வளர்ச்சியின்

அட்டவணை 2

துறை ரீதியான வளர்ச்சிச் செயற்திறன்: 1970 – 77, 1978 – 83

பெறுமதி (ரூ. பத்துலட்சம்) (சராசரி வளர்ச்சி விகிதாசாரங்கள் %)

| | 1970 | 1977 | 1978 | 1983 | 1970 - 77 | 1978 - 83 |
|---|---|---|---|---|---|---|
| 1. மொத்த உள்நாட்டு உற்பத்தி (நிலையான விலைகளில்) | 13,187 | 16,078 | 17,401 | 22,815 | 2.9 | 6.0 |
| 2. மொ. உ. உ. தலா (நிலையான விலைகளில்) | 1054 | 1153 | 1226 | 1472 | 1.3 | 4 1 |
| 3. விவசாயத் துறை | 3732 | 4299 | 4532 | 5492 | 2.1 | 4.1 |
| (அ) ஏற்றுமதிப் பயிர்கள் | 1191 | 1052 | 1111 | 1081 | - 1.7 | 0.5 |
| (ஆ) நெல்லும் ஏனையவையும் | 2541 | 3247 | 3421 | 4442 | 3.5 | 5.3 |
| 4. தயாரிப்புத் துறை | 2197 | 2537 | 2541 | 3014 | 1.0 | 4.2 |
| 5. நிருமாணத் துறை | 744 | 619 | 794 | 1028 | - 2.6 | 8.8 |
| 6. சேவைத் துறைகள் | 6419 | 8288 | 8315 | 12,548 | 3.7 | 7.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி; நிதி, திட்டமிடல் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக செய்திப் பரிமாற்றம், தபாற் சேவைகள் என்பவற்றுக்கான கேள்வியும் அதிகரித்தது. ஆகையால் இத்துறைகளில் நிரம்பல விரிவாக்குவதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

**வெளிநாட்டு வர்த்தகமும் சென்மதி நிலுவையும்**

சேவைத் துறையைச் சேர்ந்த பெரும்பாலான நடவடிக்கைகள் ஏதோ ஒரு வகையில் ஏற்றுமதி, இறக்குமதிக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புற்றிருப்பதனால் நாட்டின் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் பற்றியும் சென்மதி நிலுவையில் அதன் பாதிப்பு பற்றியும் தனித்தனியாக நோக்குவது பயன்மிக்கதாகவும் கருத்துமிக்கதாகவும் இருக்கும். 1977 ஆம் ஆண்டுப் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் பிரதான நோக்கங்களுள் ஒன்று, இறக்குமதிப் பதிலீட்டுடன் ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும் என்பதனை நாம் இங்கு நினைவுறுத்தல் வேண்டும். தரரீதியான கட்டுப்பாடுகள், உயர் சுங்க வரிகள் என்பவற்றின் ஊடான மிகையான பாதுகாப்பு போட்டிமிக்க வர்த்தகத்தினதும், கைத்தொழிலினதும் வளர்ச்சிக்கு ஏற்றதல்ல எனக் கருதப்பட்டது. மேலும், இறக்குமதிகளை நிதிப்படுத்துவதற்கு ஏற்றுமதி வருமானத்தில் பாரிய அதிகரிப்பு ஏற்படாவிடில் உள்நோக்கிய கட்டுப்பாடு மிக்க ஒரு பொருளாதரத்திலிருந்து ஒரு சிறந்த பொருளாதாரத்தை நோக்கி நிலைமாறுவது கடினமாகும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனவே இறக்குமதிகளைத் தொடர்ந்தும் வெளிநாட்டு உதவி, கடன் என்பவற்றின் வாயிலாக நிதிப்படுத்துவது விரும்பத்தக்கதல்ல எனக் கருதப்பட்டது. மேலும், ஏற்றுமதித் துறையின் மோசமான செயற்திறனின் காரணமாக ஒரு தாராள இறக்குமதிக் கொள்கையை இயக்கத்தில் வைத்திருப்பதற்கு வெளிநாட்டு உதவியை நாடுவதனை விட வேறு வழி இருக்கவில்லை.

முன்னர் அமுலிலிருந்த கட்டுப்பாடுகளின் விளைவாக எழுந்திருந்த இறக்குமதிக் கேள்வி, புதிதாக ஏற்பட்டுவந்த பொருளாதார வளர்ச்சியிலிருந்து எழுந்த கேள்வி என்பவற்றின் விளைவாக 1978 இல் இறக்குமதிகள் பெருமளவு அதிகரித்தன. 1978 - 83 காலகட்டத்தில் இறக்குமதியின் வருடாந்தச் சராசரி விஸ்தரிப்பு விகிதாசாரம் 24 சதவீதமாகவிருந்தது; 1978 இல் 81.9 கோடி எஸ்டிஆர்களாகவிருந்த இறக்குமதி, 1983 இல் 179.6 கோடி எஸ்டிஆர்களாக அதிகரித்தது. இதனுடன் ஒப்பிடுகையில் வருடாந்தச் சராசரி ஏற்றுமதி 9 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்தது; அதாவது 1978 இல் 67.8 கோடி எஸ்டிஆர்களாகவிருந்த ஏற்றுமதி 1983 இல் 98.8 கோடி எஸ்டிஆர்களாக அதிகரித்தது. இதற்கிடையில் இக் காலப் பகுதியினுள் வர்த்தக மாற்றுவிகிதம் தீவிரமாக வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி, இறக்குமதிப் போக்கில் இவ் விளைவு ஏற்பட்டமைக்குக் காரணம் பண்ட வர்த்தகக் கணக்குப் பற்றுக் குறை விரிவடைந்தமையாகும். வர்த்தக நிலுவை என அழைக்கப்படுகின்ற சென்மதி நிலுவையின் உப அங்கம் 14.4 கோடி எஸ்டிஆரிலிருந்து 80.8 கோடி எஸ்டிஆர்களாக அதிகரித்தது; 1978 - 1983 காலப் பகுதியில் பண்டக் கணக்குப் பற்றுக் குறையில் ஏறக்குறைய ஆறு மடங்கு அதிகரிப்பினை இது பிரதிபலித்தது.

வர்த்தக நிலுவை மோசமடைந்ததனால் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட பாதிப்பு, சாதகமான சேவைக் கணக்கின் மூலம் குறைக்கப்பட்டது; குறிப்பாக வெளிநாடுகளில் வேலை செய்கின்ற இலங்கையர்களின் செலுத்தல்கள், சுற்றுலாத்துறை வருமானம் என்பன இதற்கு உதவின. உதாரணமாக, தனியார் பண அனுப்பீடுகள் 15 மடங்காக அதிகரித்தன; 1977 இல் 1.7 கோடி எஸ்டிஆர்களாகவிருந்த இது 1978 இல் 25.5 கோடி எஸ்டிஆர்களாக அதிகரித்தது. இதே போன்று 1978 இல் 4.4 கோடி எஸ்டிஆர்களாகவிருந்த சுற்றுலாத்துறை வருமானம், 1982 இல் 13.3 கோடி எஸ்டிஆர்களாக அதிகரித்தது; 1983 ஜூலைக் கலவரத்தின் விளைவாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததனால் இவ் வருமானம் 10.2 கோடி எஸ்டிஆர்களாகக் குறைந்தது. எனினும், சென்மதி நிலுவையில் மொத்த வெளிநாட்டு மூலவளப் பற்றுக்குறை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்தது; 1978 இல் 22.8 கோடி எஸ்டிஆர்களாகவிருந்த இப் பற்றுக்குறை 1983 இல் 131.2 கோடி எஸ்டிஆர்களாக அதிகரித்தனல், வெளிநாட்டு மூலவளங்களால் இதனை நிதிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

**நிதி, நாணய அபிவிருத்திகள்**

1977 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாகப் பொருளாதார நடவடிக்கைகள் அதிகரித்ததனால் முதலீட்டு, நுகர்வுச் செலவு அதிகரித்தது. இதன் விளைவுகள் நாணய, நிதிக் கொள்கைகளில் பிரதிபலித்தன. ஒரு புறத்தில், உள்ளூர்ப் பணவாக்கமும் பண நிரம்பலும் வேகமான விகிதாசாரத்தில் அதிகரித்தன. மறு புறத்தில், வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையும், நிதி விரிவாக்கக் கொள்கையும் வருடா வருடம் அதிகரித்தன. இக் காரணிகள் ஒன்றிணைந்து வீக்க அமுக்கத்தை ஏற்படுத்தியதனல், பொருளாதாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய பாரிய பணியை வேண்டிநின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979, 1980 ஆம் வருடங்களில் கடனுக்க விகிதாசாரம் விரைவாக வளர்ச்சியடைந்தது; இவ் விரு வருடங்களிலும் மொத்த உள்ளூர்க் கடன் முறையே 43,70 சதவீதங்களால் அதிகரித்தது. இவ்விரு வருடங்களிலும் பண நிரம்பல் விகிதாசாரம் முறையே 49,41 சதவீதங்களால் அதிகரித்தது. ஆகையால் நாட்டின் பண நிரம்பல் மட்டம் 1978 - 1980 இடையில் ரூபா 1089.2 கோடியிலிருந்து ரூபா 1986 கோடியாக இரு மடங்காக அதிகரித்தது. இக் காலத்திலிருந்து கடனுக்கம், பண நிரம்பல் வளர்ச்சி விகிதாசாரத்தைக் குறைப்பதற்கு கூடுதலான கட்டுப்பாட்டுக் கொள்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், 1983 இன் இறுதியில் விரிவான பண நிரம்பல் மட்டம் ரூபா 3725 கோடியாக அதிகரித்தது. இது தொடர்ந்தும் விலைகளின் மீது அழுக்கத்தை ஏற்படுத்தியது.

பாரிய பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் விளைவாக வரவு செலவுத் திட்ட முகாமைப் பிரச்சினை ஏற்பட்டதனல் பண நிரம்பலும் பணவாக்கமும் அதிகரித்தன எனலாம். உதாரணமாக, உள்நாட்டு உற்பத்தியில் மொத்தப் பொது முதலீட்டு விகிதாசாரம் இரு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது; 1970 - 77 காலகட்டத்தில் 7.7 சதவீதமாகவிருந்த இவ் விகிதாசாரம், 1978 - 83 காலகட்டத்தில் 16.7 சதவீதமாக அதிகரித்தது. 1978 - 83 காலகட்டத்தில் நாட்டின் மொத்த முதலீட்டு மட்டத்தில் பொதுத்துறை முதலீடு 60 சதவீதத்திற்கும் கூடுதலாகவிருந்தது; 1970 - 77 காலகட்டத்தில் இது 50 சதவீதமளவில் இருந்தது. பெரும்பாலும் தனியார் பங்கெடுப்பிலும் சுதந்திர சந்தைப் பொறிமுறையிலும் தங்கியிருக்க வேண்டும் எனப் புதிய திறந்த பொருளாதாரக் கொள்கையின் அறிமுகத்துடன் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தாராளமயக்

# 1988 வரையிலும் பொருளாதாரக் குறிகாட்டிகள்

***1982 - 1983 பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து***

**உள்நாட்டு மூலவளங்களும் அவற்றின் பாவனையும்**

1984 விலைகளில் 1988 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 15540 கோடியால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது; இது 6.9 சதவீத வருடாந்த வளர்ச்சியாகும். 1984 - 1988 காலகட்டத்தில் மூலவளப் பாவனையில் அமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் எதிர்பார்க்கின்றது; மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த முதலீடு 28 சதவீதமாகும் என அண்மைக் காலப் போக்குகள் பதிவுசெய்துள்ளன. எனினும், இறுக்கமான மூளவளக் கட்டுப்பாடுகளின் விளைவாக இத்தகைய முதலீட்டு மட்டங்களைப் பேணுவது கடினமாகும். முதலீட்டுப் பற்றுக்குறை விகிதாசாரம் குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டுள்ளது; 1984 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 27 சதவீதமாகவுள்ள இதனை 1984 - 1988 காலகட்டத்தில் 25 சதவீதமாகக் குறைக்க எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் பொது மூலதனச் செலவுகள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கி மூலவளங்களைத் தனியார் துறையின் அபிவிருத்திக்கு அளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறாகத் தனியார் துறையினரின் முதலீட்டுப் பங்களிப்பு அதிகரித்து 1987 - 1988 அளவில் பொதுத் துறையின் முதலீட்டுச் செலவிலும் கூடுதலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொத்த முதலீட்டு மட்டத்திலும் அமைப்பிலும் எதிர்பார்க்கப்படுகின்ற இலக்குகளை அடைவதில் உள்ளூர் சேமிப்பு முன்னரை விடவும் கூடுதலான பங்களிப்பினைச் செய்யும் எனக் கருதப்படுகின்றது. பொதுத் துறையும் தனியார் துறையும் இதற்கு நேர்கணியப் பங்களிப்பினைச் செய்யும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. தனியார் சேமிப்பு விரைவாக அதிகரித்துச் சென்று 1988 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.7 சதவீதமாக விளங்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது; 1984 இல் தனியார் சேமிப்பு மொ. உ. உ. 11 சதவீதமாகவிருந்தது. நிகர வெளிவாரியான உட்பாய்ச்சல்கள் வீழ்ச்சியடையும் எனவும், இவ்வீழ்ச்சி தனியார் துறையினரால் சரிப்படுத்தப்படும் எனவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**வ. செ. திட்ட வருமானம் 1984 - 88**

பெருந்தோட்டப் பயிர்களின் சாதகமான விலைகளின் விளைவாக அரசாங்க வருமானம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1984 இல் சராசரியாக ரூபா 150 கோடி மேலதிக தேயிலைப் பெறுமான விகிதவரியாகச் சேகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது இலகுவாக அடையக்கூடிய ஒரு இலக்காகும் என தற்போதைய ஏற்றுமதி விலைப்போக்குகள் காட்டுகின்றன. இறப்பரின் ஏற்றுமதித் தீர்வையைப் பொறுத்த வரையிலும் ஏறக்குறைய ரூ. 35 கோடி அதிகரிப்பு ஏற்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே திட்டமிடப்பட்டதனை விடவும் ரூபா 30 கோடி கூடுதலாக இறக்குமதித் தீர்வை அமையலாம். அரசாங்கத்தின் அண்மைக் காலத் தீர்மானத்தினிற்கிணங்க பொதுக் கூட்டுத் தாபனங்களின் மிகையிலிருந்து ரூபா 35 கோடி மிகையாகக் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவையும் ஏனைய காரணிகளும் ஒன்றிணைந்து 1984 இல் அரசாங்க வருமானத்தை ரூபா 230 கோடியால் அதிகரிக்கச் செய்யும் என எதிர் பார்க்கப்படுகின்றது. 1984 - 88 காலகட்டத்தில் மொத்த நடைமுறை வருமதிகள் மொ. உ. உ. யின் 22 சதவீதமாகவிருக்கும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்ற ஆறு வருடங்களாக மூலதனப் பாய்ச்சல்களில் பெரும்பகுதி உத்தியோகபூர்வமான மாற்றங்களிலிருந்தும், சலுகைக் கடன்களிலிருந்துமே கிடைத்தன. நாடு மூலதனச் செலவுகளை எவ்வாறு அதிகரித்தது என்பதனையும், சென்மதி நிலுவை, அரசாங்க வரவு செலவுத் திட்டப் பற்றுக் குறை என்பவற்றை எவ்வாறு சமாளித்தது என்பதனையும் இது விளக்குகின்றது. மூலவளப் பற்றுக் குறையைத் தீவிரமாகக் குறைப்பதனையும் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட வளர்ச்சி இலக்குகளுக்கு இயைபான மட்டத்தில் முதலீட்டுச் செலவினை உறுதிப்படுத்துவதும் அடுத்துவருகின்ற ஐந்து வருடங்களுக்குரிய செயற்திட்டமாகும். எனினும் இதற்கு அதிகரித்த வெளிநாட்டு உதவி தேவைப்படும்.

வெளிநாட்டு உதவி, வெளிநாட்டுக் கடன் என்பவற்றில் தங்கியிருப்பதனல் எதிர்காலத்தில் கடன் சேவைப்படுத்தலில் ஏற்படுகின்ற பாதிப்பு தொடர்ந்து மீளாய்விற்கு உட்படுத்தப்படும். 1980 இறுதியில் எஸ், டி. ஆர். 8.1 கோடியாக

( 15-ம் பக்கம பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையின் பின்னரும் குறிப்பாக முதலீட்டுத் துறையில் அரசாங்கத்தின் முக்கியத்துவம் குறையவில்லை.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம், வீடமைப்பு, நகராக்கத் திட்டம், பாரிய கொழும்பு அபிவிருத்தி ஆணைக்குழு போன்ற பல்வேறு பாரிய முதலீடுகளை அரசாங்கம் ஆரம்பித்த போதிலும் இவற்றை நிதிப்படுத்துவதற்குத் தேவையான போதிய வரவு செலவுத் திட்ட சேமிப்பினை அரசாங்கத்தால் உருவாக்க முடியவில்லை. தனியார் துறைக்கு அளிக்கப்பட்ட நிதி ஊக்குவிப்புக்களும், குறைந்த ஏற்றுமதியும் அரசாங்கத்தின் வரி வருமானத்தைப் பாதித்தன. இதேவேளை சில மானியங்கள் குறைக்கப்பட்ட போதிலும், பாரிய பொது உதவி முதலீடு, அதிகரித்த செலவு என்பவற்றின் விளைவாக பொதுச் செலவு தொடர்ந்தும் அதிகரித்தது. ஆகையால் முதலீட்டுச் செய்திட்டங்களை நிதிப் படுத்துவதற்கு வெளிநாட்டு உதவியை நாடியதுடன், மீதி வரவுசெலவுத் திட்டப்பற்றுக் குறையைத் தீர்ப்பதற்கு விரிவான நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. திறைசேரி உண்டியல் வினியோகம், வங்கித் துறையிடமிருந்து கடன் பெறல் போன்ற நடவடிக்கைகளின் விளைவாக பண நிரம்பல் அதிகரித்து வீக்கப் போக்கினைத் தோற்றுவித்தது.

மேலே விவரிக்கப்பட்ட இப் போக்குகள் யாவற்றுடனும் முரணை சென்மதி நிலுவைப் போக்குகளும் இணைந்து, நாணயமாற்று விகிதாசாரத்தைத் தேய்வடையவைத்தன; இதன் விளைவாக உள்நாட்டு விலை மட்டங்கள் அதிகரித்தன. 1977 இல் 203.2 புள்ளியில் இருந்த வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் எனப் பிரபல்யம் பெற்றுள்ள கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952 = 100), 1980 இல் 318.2 ஆகவும், 1983 இல் 474 ஆகவும் அதிகரித்தது. வேறு வார்த்தைகளில் கூறினால் 1978 - 83 காலகட்டத்தில் வீக்கம் வருடாந்த அடிப்படையில் 11 சதவீதத்திலிருந்து 26 சதவீதமாக அதிகரித்தது; இதே போன்று மொத்த விலைச் சுட்டெண் இரு மடங்காக அதிகரித்தது; 1978 இல் 156..7 ஆக விருந்த இச் சுட்டெண் 1983 இல் 354.1 ஆக அதிகரித்தது. 1978 - 1983 இடைப்பட்ட ஆறு வருடங்களிலும் நுகர்வோர் விலைச் சுட்டெண் 15 சதவீதத்தினாலும், மொத்த விலைச் சுட்டெண் சராசரி 17 சதவீதத்தாலும் அதிகரித்தன. இவை இரண்டும் மிகைக் கேள்வி அமுக்கத்தையும் செலவுத் தூண்டல் தாக்கத்தையும் பிரதிபலித்தன.

## 1984 இல் எழுச்சியடைகின்ற போக்குகள்

இவ்வருடம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி ஒரு சாதகமான திருப்பத்தைக் காட்டலாம் என 1984 இன் முதலரைப் பாகத்திற்குரிய பொருளாதார செயற்திறன் தெரிவிக்கின்றது. பொருளாதாரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சில பிரதான

அட்டவணை 3

வெளிநாட்டு வர்த்தகமும் சென்மதி நிலுவையும்
1970, 1977, 1978, 1983 (ரூ. பத்துலட்சம்)

| | 1970 | 1977 | 1978 | 1983 |
|---|---|---|---|---|
| 1. வர்த்தக நிலுவை | – 316 | + 350 | – 2,393 | – 20,304 |
| 1 (அ) ஏற்றுமதிகள் | 2016 | 6640 | 13,207 | 24,917 |
| 1 (ஆ) இறக்குமதிகள் | 2332 | 6290 | 15,600 | 45,221 |
| 2. சேவைகள் நிலுவை | – 103 | + 304 | + 119 | – 1,297 |
| 2 (அ) வருமதிகள் | 237 | 923 | 1,942 | 7,959 |
| 2 (ஆ) செலுத்தல்கள் | 340 | 619 | 1,823 | 9,256 |
| 3. மாற்றல்கள் (நிகர) | + 69 | + 612 | + 1,242 | + 10,416 |
| 3 (அ) தனியார் | 6 | 122 | 342 | 6,400 |
| 3 (ஆ) உத்தியோகபூர்வ | 75 | 490 | 900 | 4,016 |
| 4. நடைமுறைக் கணக்கு நிலுவை | – 350 | + 1266 | – 1,032 | – 11,185 |
| 5. வெளிநாட்டு மூலவள இடைவெளி | - 1,124 | – 860 | – 4048 | – 32,760 |
| 6. வர்த்தக மாற்று விகிதச் (1978 = 100) சுட்டெண் | 106 | 102 | 100 | 44 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குகள் தொடர்ந்து நிலவி, உறுதிப்படுத்தப்பட்டால், இங்கு ஏற்கனவே ஆராயப்பட்ட சில பொருளாதாரப் பிரச்சினைகளை இலங்கை வெற்றிகொள்ளலாம். இப் போக்குகள் பிரதானமாக சென்மதி நிலுவையுடனும், வரவு செலவுத் திட்ட முகாமையுடனும் தொடர்புடையனவாகும். அபிவிருத்தியடைந்த பொருளாதார வளர்ச்சி விகிதாசாரம், குறைந்த வீக்கம் என்பவற்றுடன் ஓரளவு அதிகரித்த வேலை வாய்ப்புக்கள் என்பவற்றில் இச் சாதக அபிவிருத்திகளின் தாக்கம் உணரப்பட வேண்டும். எனினும், இது வரையிலும் இவ் வருடம் எதிர்பாராத செயற்றிறன் வீழ்ச்சியினால் கவனத்தை ஈர்த்துள்ள பிரதான உற்பத்தித் துறைகளும் உள்ளன. இப் போக்குகள் தடுக்கப்பட்டு மேலும் மோசமடையாது தடுப்பதற்குரிய நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அண்மையில் வெளிவந்துள்ள உலக வங்கியின் வருடாந்த அறிக்கை (1984) இலங்கையின் சிறந்த பொருளாதாரச் செயற்றிறன் குறித்து நம்பிக்கை தெரிவித்துள்ளது. இவ்வறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "தமது பாரிய விவசாயத் துறையின் செயற்திறனில் பெருமளவு தங்கியுள்ள பெரும்பாலான தென் ஆசியப்பிராந்தியப் பொருளாதாரங்கள், பிரதான கைத்தொழில் நாடுகளில் இடம்பெற்று வருகின்ற பொருளாதார மீட்சியால் நன்மை அடைந்துள்ளன." இலங்கை தொடர்பாக இவ்வறிக்கை பின்வருமாறு கருத்துரைக்கின்றது; "தேயிலை விலைகள் மிக உறுதியாக இருந்ததன் விளைவாக பொது வருமானமும், வெளிநாட்டு நாணய மாற்று நிலைமையும் அபிவிருத்தியடைந்ததனால் 1984 இன் ஆரம்பத்தில் அபிவிருத்திக்கான குறிகள் தென்படுகின்றன." நாடு பின்பற்றுகின்ற தாக்கம் மிக்க வலுப் பாவனைக் கொள்கையும், மரப் பயிர்த் துறையின் செயற்றிறனை அபிவிருத்தி செய்வதற்குரிய கொள்கைகளும் இலங்கைக்கு வாய்ப்பாகவிருப்பதாக இவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. தொடர்ந்தும் இவ்வறிக்கை பின்வருமாறு கூறுகின்றது. "துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழான முதலாவது அணை செயற்படத் துவங்கியதன் பின்னர் நாடு ஐந்து வருடங்களாக அனுபவித்த வலுப் பிரச்சினை முடிவுறுகையில் 1984 இல் பொருளாதாரம் ஒரு பிரதான செழிப்பு நிலையை அடைய வேண்டும்."

1984 இல் இலங்கையின் பொருளாதாரத்தில் எழுச்சியடைந்து வருகின்ற இப் போக்குகளின் பின்னணியில், இவ்வருடத்திற்குரிய பொருளாதார வளர்ச்சி விகிதாசாரம் சென்ற வருடங்களை விடவும் கூடுதலாக இருக்கும். 1983 இல் உள்நாட்டு, வெளிநாட்டுக் காரணிகளின் விளைவாகப் பொருளாதார வளர்ச்சி விகிதாசாரம் குறைவடைந்தது. உதாரணமாக; 1978 - 83 காலகட்டத்தில் பொருளாதார வளர்ச்சி விகிதாசாரம், 6 சதவீதமாகவிருந்த அதேவேளை, 1983 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்தது. ஜூலைக் கலவரத்தின் விளைவாகக் கைத்தொழில், வர்த்தகம், அவை சார்ந்த நடவடிக்கைகள் என்பன பாதிக்கப்பட்டமையும், கடந்த இரு வருடங்களாக உலகப் பொருளாதார மந்தம், உள்ளூரில் நிலவிய வறட்சி என்பவற்றின் விளைவாக மரப் பயிர்களின் உற்பத்தியிலும் ஏற்றுமதி வருமானத்திலும் ஏற்பட்ட வீழ்ச்சியும் இச் சிறப்பற்ற செயற் திறனுக்குக் காரணமாகும். பொருளாதாரத்தின் ஏனைய இரு பிரதான துறைகளான தயாரிப்புத் துறையும், நிருமாணத் துறையும் 1983 இல் ஒப்பீட்டு ரீதியில் மோசமான செயற் திறனைக் காட்டின. 1984 இல் இத் துறைகளுள் பெரும்பாலானவை மீட்சியடைந்துள்ளன எனவும், இவற்றின் பொது வளர்ச்சி விகிதாசாரம் நன்னிலை அடையும் எனவும் நம்புவதற்குக் காரணங்கள் உள்ளன. பொதுவாக 1984 இல் சர்வதேசப் பொருளாதாரத்தில் நிலவுகின்ற சிறந்த தன்மையிலிருந்தும் இலங்கையின் பொருளாதாரம் நன்மை அடையவேண்டும்.

### ஏற்றுமதி வாய்ப்புக்கள்

1984 இல் இதுவரையிலும் பொருளாதாரம் அடைந்துள்ள மிகவும் சாதகமான அம்சம் தேயிலை விலைச் செழிப்பாகும்; இவ்விலை அதிகரிப்பு எதிர்பார்த்ததனை விடவும் கூடுதலான ஏற்றுமதி வருமானத்தை அளித்தது. 1983 உடன் ஒப்பிடுகையில், 1984 இல் ஜனவரியிலிருந்து ஜூன் வரையிலும் எஸ்டிஆர் வடிவில் ஏற்றுமதி வருமானம் 41 சதவீதம் அதிகரித்தது. அதாவது கடந்த வருடம் 45.8 கோடியாகவிருந்த ஏற்றுமதி வருமானம் இவ் வருடம் 64.8 கோடியாக அதிகரித்தது. இவ்வருமான அதிகரிப்பின் பிரதான மூலமாகத் தேயிலை வருமான அதிகரிப்பு விளங்கியது. இதேவேளை இறப்பர், கைத்தொழில் ஏற்றுமதிகள் என்பன மூலம் பெற்ற வருமானமும் குறிப்பிடத்தக்கதாகவிருந்தன. 1983 இன் முதலரைப் பாகத்தில் பெற்ற தேயிலை வருமானம் ரூபா 359.3 கோடியாகும். (14.6 கோடி எஸ்டிஆர்); இவ்வருட முதலரைப் பாகத்தில் தேயிலை ஏற்றுமதியின் மூலம் ரூபா 659.3 கோடி (26.4 கோடி எஸ்.டி.ஆர்) பெறப்பட்டது; எஸ்.டி.ஆர். வடிவில் இது 81 சதவீத அதிகரிப்பாகும். இறப்பர் ஏற்றுமதி வருமானம் 31 சதவீதத்தால் அதிகரித்தது; சென்ற வருடம் இக் காலப் பகுதியில் 5.2 கோடி எஸ்டிஆர்களாகவிருந்த வருமானம் 6.9 கோடி எஸ்டிஆர்களாக அதிகரித்தது. கைத்தொழில் ஏற்றுமதிகள் (புடவை, தயாரித்த ஆடை, பெற்றோலியத் தயாரிப்புக்கள் என்பவற்றை முன்னணியாகக் கொண்டது) 40 சதவீத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 4

**நிதி, நாணயச் செயற்திறன – 1970, 1977 1978, 1983 (ரூ. பத்துலட்சம்)**

| | 1970 | 1977 | 1978 | 1983 |
|---|---|---|---|---|
| 1. அரசாங்க வருமானம் | 2,736 | 6,686 | 11,688 | 25,210 |
| 2. அரசாங்க செலவு | 3,886 | 9,670 | 18,853 | 46,772 |
| 2 (அ) மீளவரும் செலவு | 2,873 | 6,148 | 10,408 | 23,958 |
| 2 (ஆ) மூலதனச் செலவு | 812 | 3,182 | 6,614 | 21,694 |
| 3. வரவுசெலவுத்திட்டம் பற்றாக்குறை | 1,150 | 3,074 | 7,165 | 21,562 |
| 4. குறுகிய பண நிரம்பல் | 1,966 | 5,366 | 5,936 | 14,748 |
| 5 விரிந்த பண நிரம்பல் | 3,115 | 8,717 | 4,956 | 37,257 |
| 6. நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952 = 100) | 138.2 | 203.2 | 227.8 | 474.2 |
| 7. மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (1974 = 100) | — | 135.3 | 156.7 | 35.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதிகரிப்பைக் காட்டின; 1983 இன் முதலரைப் பாகத்தில் 16.5 கோடி எஸ்டிஆர்களாகவிருந்த வருமானம் இவ்வருடம் இதே காலப் பகுதியில் 23.1 கோடி எஸ்டிஆர்களாக அதிகரித்தது. தென்னை, இரத்தினக்கல், சிறு விவசாயத் தயாரிப்புக்கள் என்பன மூலம் பெற்ற வருமானம் சென்ற வருட முதலரைப் பாக வருமானத்தை விடவும் குறைவாக விருந்தது.

1984 இன் சிறந்த ஏற்றுமதி வருமானம் தேயிலை விலைச் செழிப்பின் அடிப்படையில் அமைந்ததாகும். தேயிலை உற்பத்தி மட்டம், விலை ஊக்குவிப்புகளுக்கும் இணங்க உற்பத்தி மட்டங்கள் சிறப்பாக இருந்தன. இவ்வருடத்தின் மீதிப்பகுதிக்கும், அடுத்த வருடத்துக்குமான தேயிலை குறித்த முற்கூற்று கணிப்பீடுகள் உற்சாகம் தருவனவாக உள்ளன. 1983 ல் உற்பத்தி வீழ்ச்சியைத் தொடர்ந்து தேயிலை இருப்பு வீழ்ச்சியடைந்ததனால் கேள்வி நிரம்பலில் ஏற்பட்ட சமநிலையின்மை தற்போதைய தேயிலை விலை அதிகரிப்பிற்குக் காரணமாகும். இந்தியாவில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி அடைந்ததனாலும் உள்நாட்டு நுகர்வினைத் திருப்திப்படுத்துவதற்கு தேயிலை ஏற்றுமதி கட்டுப்படுத்தப்பட்டதனாலும், கோப்பி விலை அதிகரித்ததனால் தேயிலை நுகர்வு நாடுகள் கூடுதலான தேயிலையை நுகர்ந்ததனாலும் தேயிலையின் கேள்வி அதிகரித்தது. இதன் விளைவாக 1984 இன் முதலரைப் பாகத்தில் தேயிலை கிலோ ஒன்றின் விலை ரூ. 77.23 ஆக அதிகரித்தது. முன்னைய ஆண்டின் இதே காலப் பகுதியில் இது ரூ. 44.82 ஆக இருந்தது. ரூபாய் வடிவில் இது 72 சதவீத அதிகரிப்பினையும் எஸ்டிஆர் வடிவில் 61 சதவீத அதிகரிப்பினையும் காட்டியது. உற்பத்தியையும், ஏற்றுமதியையும் அதிகரிப்பதன் மூலம் இலங்கை கவர்ச்சிகரமான தேயிலை விலைகளிலிருந்து பயன் பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1984 இன் முதலரைப் பாகத்தில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி 9 கோடி கி. கிராம்களாகும். 1983 இன் முதலரைப்பாகத்தில் இது 8 கோடி கிராம்களாகும். இவ்விரு காலப்பகுதியிலும் தேயிலை உற்பத்தி 37 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வுற்பத்தி அதிகரிப்பில் பெரும் பகுதி சிற்றுடைமை உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்டது போற் தென்படுகின்றது. இவர்களால் அரசாங்க பெருந்தோட்டத் துறையை விடவும் கூடுதலான உற்பத்தி எல்லையைப் பெறமுடிந்தது. தேயிலை விலைச் செழிப்பு மொத்த வருமானத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்துவது தெளிவாகவிருந்த போதிலும், இதன் மூலம் உற்பத்தியாளர்கள் பெறுகின்ற இலாபம் அவர்களது உற்பத்திச் செலவிலேயே தங்கியுள்ளது. இவ்வருட மத்திய பகுதியில் கூலி அதிகரிக்கப்பட்டதனால் அரச பெருந்தோட்டத்துறையின் உற்பத்திச் செலவு அதிகரித்தது. இதே வேளை சிற்றுடைமையாளர்கள் கூலி அதிகரிப்பிற்கு உற்படவில்லை. எனினும், தொடர்ந்து நிலவுகின்ற கவர்ச்சிகரமான விலை மட்டமும், இவ்வருடம் இது வரையிலும் நிலவிய சாதகமான காலநிலையும் தேயிலை உற்பத்தியாளர்களுக்கு வரப்பிரசாதமாக உள்ளது. 1984 இனைப் போன்று 1985 ஆம் வருடமும் இலங்கையின் தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு வெற்றிகரமானதாக அமைவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

### இறக்குமதி இயலளவு

சென்ற பல வருடங்களாக வளர்ச்சிவிகிதாசாரம் குறைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்த போதிலும் வெளிநாட்டு உதவி கிடைத்ததனுல் நாட்டின் இறக்குமதி இயலளவு பாதிக்கப் படவில்லை. 1984 இன் முதலரைப் பாகத்தில் இறக்குமதிக் கேள்வி யில் மிதமான வீழ்ச்சி ஏற்பட்டது. 1977 இல் பொருளாதாரம் தாராளமயப்படுத்தப்பட்டதிலிருந்து இறக்குமதிக் கேள்வியில் ஏற்பட்ட படிமுறையான தேக்கநிலைக்குரிய முற்குறி என இதனை அழைக்கலாம். பாரிய முதலீட்டுச் செய்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் விரும்பாததனுலும், மூலதனச் செறிவுள்ள செய்திட்ட வேலைகள் முடிவடைந்து வருவதனுலும் இறக்குமதிக் கேள்வி மேலும் வீழ்ச்சி அடையலாம் என நாம் எதிர்பார்க்கலாம். மேலும், நெகிழ்ச்சி மிக்க நாணமாற்றுக் கொள்கையின் விளைவாக நாணயம் ஒரு நிலையான விகிதாசாரத்தை அடைவதனுல் அத்தியாவசியமற்ற பண்டங்களதும், உற்பத்தித் திறன் குறைந்த இறக்குமதிகளதும் இறக்குமதிகள் மேலும் குறைவடையலாம். ஆகையால் குறைந்த இறக்குமதிகள் 1984 இல் வர்த்தக நிலுவையில் ஏற்படுகின்ற பாதிப்பினைத் தடுக்கலாம். குறிப்பாக, ஏற்கனவே விருத்தியடைந்துள்ள ஏற்றுமதிச் செயற்திறன் இதற்கு உதவியாக அமையும்.

1984 இன் முதலரைப் பாகத்தில் இறக்குமதிச் செலுத்தல்கள் ரூபா 2298.8 கோடியாக (எஸ்டிஆர் 87.2 கோடி) அதிகரித்தது. எஸ்டிஆர் வடிவில் இது 6 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. 1983 இல் ஓரளவிற்குக் குறைவடைந்த இறக்குமதிச் செலுத்தல்களைக் கருத்திற்கொண்டு, அதற்கு முன்னைய வருட இறக்குமதிச் செலவுடன் ஒப்பிடுகையில், 1984 இலும் இது வீழ்ச்சி அடையலாம் அல்லது அதிகரிக்காது இருக்கலாம் எனலாம். இறக்குமதிகளின் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றம் 1980 க்களில் எழுச்சியடைந்த இன்னொரு பண்பாகும். பிரதானமாக நடுத்தரப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் என்பவற்றை 1984 இன் இறக்குமதி கூடுதலாகக் கொண்டிருந்ததன் மூலம் இப்போக்கு மேலும் உறுதியடைந்தது எனலாம். உதாரணமாக 1983 ஜனவரி - ஜூன் காலப்பகுதியில் மொத்த இறக்குமதியில் 30 சதவீதமாக விருந்த நுகர்வுப் பொருட்களின் விகிதாசாரம் இவ்வருடம் இதே காலப்பகுதியில் 21 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. உரம், பெற்றோலியம் என்பவற்றை உள்ளடக்கிய நடுத்தரப் பொருட்களின் பங்கு இக்காலப் பகுதியில் 44 சதவீதத்திலிருந்து 49 சதவீதமாக அதிகரித்தது. இதேவேளை இயந்திர சாதனங்களை உள்ளடக்கிய மூலதனப் பொருட்களின் விகிதாசாரம் ஒப்பீட்டுரீதியில் நிலையாகவிருந்தது. நாட்டின் மூலதன உருவாக்கத்திற்கு ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ள இத்தகைய இறக்குமதிகளின் விரிவாக்க இயலளவின் விளைவாக எதிர்காலத்தில் உற்பத்தித் துறைகளில் வெளியீடு அதிகரிக்கலாம்.

**பல்வேறு துறைகளதும் வளர்ச்சி இயல்திறன்**

1978 - 1983 காலப்பகுதியில் விவசாயத் துறையின் வளர்ச்சிக்குப் பெருமளவு பொறுப்பாகவிருந்த நெற்செய்கைத் துறை, 1984 இன் முதலரைப் பகுதியில் சிறப்பாக அமையவில்லை. 1983 இல் அதற்கு முன்னைய வருடத்தை விடவும் உற்பத்தி 15 சதவீதத்தால் அதிகரித்தது. சென்ற வருட முதலரைப் பாகத்தை விடவும் இவ்வருட உற்பத்தி வீழ்ச்சியடைந்திருந்தது. 1984 இன் முற்பாகத்தில் நிலவிய பாதகமான காலநிலையே இதற்குப் பிரதான காரணமாகும். பிரதான நெல் விளை பிரதேசங்களில் இக்காலப் பகுதியில் வெள்ளப்பெருக்குக் கூட ஏற்பட்டது. உப உணவுப் பயிர்களைப் பொறுத்தவரையிலும் கூட இவ்வருட முதலரைப் பகுதியில் உற்பத்தி மோசமடைவதற்கு மோசமான காலநிலை காரணமாகவிருந்தது எனலாம். இதன் விளைவாக இவ்வருடத்திற்குரிய மொத்த ரீதியான விவசாய வளர்ச்சி விகிதாசாரம் வீழ்ச்சி அடையலாம்.

முன்னைய வருடத்தை விடவும் 1983 இல் எல்லை அளவில் 1 சதவீத வளர்ச்சியைக் கண்ட கைத்தொழிற் துறை 1984 இன் முதலரைப் பாகத்தில் புத்துயிர் பெற்றது எனலாம். கைத்தொழில் ஏற்றுமதி வளர்ச்சியிலும் இப்போக்கு தென்பட்டது. பொதுத் துறைக் கைத்தொழில்களின் உற்பத்தி மட்டம் அதிகரித்தது. உதாரணமாக, சென்ற வருடம் 102 ஆகவிருந்த பொதுத் துறைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண் (1977 - 100) இவ்வருட முதலரைப் பாகத்தில் 121 ஆக அதிகரித்தது. சென்ற வருட ஆரம்பப் பகுதியில் பழுதுபார்ப்பதற்காக மூடப்பட்டிருந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு இயந்திரம் மீண்டும் செயற்பட ஆரம்பித்தமையே இதற்குரிய பிரதான காரணமாகும். வடிசாலைக் கூட்டுத்தாபனமும் தேசிய புடைவைக் கூட்டுத்தாபனமும் இவ்வருட முதல்ரைப் பாகத்தில் அதிகரித்த உற்பத்தியைப் பெற்ற ஏனைய பொதுத் துறைக் கைத்தொழில் முயற்சிகளாகும். சென்ற வருடத்தில் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இவை இரண்டினதும் உற்பத்தி முறையே 21 சதவீதத்திஞலும் 10 சதவீதத்திஞலும் அதிகரித்தன. தனியார் துறைக் கைத்தொழில்களைப் பொறுத்தவரையிலும் உற்பத்தி அதிகரிப்பிற்குரிய பிரதான பங்களிப்பு கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயக் கைத்தொழில் நிறுவனங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. ஜூலைக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட கைத்தொழில்

(27-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 1940 ம் வருட 24 ம் இலக்க கடற்றொழில் கட்டளைச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட சிபார்சுகளின் மீது இணைக்கப் பட்டன. அவை செய்திட்டங்களுக்கு வேண்டிய நிதியளிப்பு, உற்பத்திப்பொருள்களைச் சந்தைப் படுத்தல், மீன்பிடிக் கைத் தொழிலை இயந்திரமயமாக்கல் போன்ற விசேஷ வசதிகளுக்கு ஏற்பாடு செய்தன. என்ன வகையான கூட்டுறவுச் சங்கம் எழுந்ததென்றால், 20 லிருந்து 30 வரையான அங்கத்தவர்களைக் கொண்ட சிறிய ஆரம்ப கூட்டுறவுச் சங்கம் தானாகும், ஆனால், இச் சங்கங்களிடம் மீன்பிடிக் கைத்தொழில் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான நிதி வளமோ, ஆள்பலமோ அல்லது புவியியல் பரம்பலோ இருக்கவில்லை. 1970 ம் ஆண்டளவில் ஏறக்குறைய 7,000 அங்கத்தவர்களைக் கொண்ட 290 கூட்டுறவுச் சங்கங்கள் அமைந்திருந்தன. அவ்வருடத்தில் இந்தச்சிறிய மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை 45 பெரிய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களாக ஒன்றிணைக்கச் சட்டம் இயற்றப் பட்டது. 1975 ம் ஆண்டளவில் இந்த ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 15,000 சுறுசுறுப்பான மீனவர்கள் அங்கம் வகித்தனர். இத்தொகை கடற்றொழில் துறையிலுள்ள மொத்தத் தொழிலாளர் படையில் சுமார் 20 சத விகித மென மதிப்பிடப்பட்டது. தற்போது இது 1975 ம் வருடத்திலிருந்த தொகையைவிட குறைவாயிருப்பதாகக் கூறப்படுகிறது.

இக்காலத்தில், மீன்பிடிக் கைத்தொழிலின் எதிர்காலம் சிறிய வள்ளத்துறையினர் பிடிக்கும் மீனின் அளவை அபிவிருத்தி செய்வதைச் சார்ந்திருக்கிறதென்றும், பலம் பொருந்திய - செயலூக்கமுள்ள மீனவர் ஸ்தாபனமொன்றிருப்பின், மீன் பிடிக்கும் அளவுகளையும் கையாளும் முறைகளையும் சந்தைப்படுத்தல் முறைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு உதவ முடியுமென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆதலின், ஆரம்ப கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, உயர் கொள்வனவு நிபந்தனைகளின் கீழ், 3½ தொன் நிறையுள்ள இயந்திர வள்ளங்கள் வழங்குவதைக் கட்டுப்படுத்துக் கொள்கையைக் கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டது. 3½ தொன் நிறையுள்ள இயந்திர வள்ளங்கள் மீன் உற்பத்தியிலும், அத்துடன் கடல் மீன்பிடி வள்ளங்களை இயந்திரமயமாக்கும் அரசாங்கத்தின் திட்டத்திலும் ஒரு முக்கியமான பங்கெடுத்துள்ளன. ஆதலால், இந்தக் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பலம்பொருந்திய — திறமான ஸ்தாபனங்களாகவிருந்தியுற்று, ஒரு மிக முக்கியமான பணியை நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பல்வேறு காரணங்களினால் அவை எதிர்பார்க்கப்பட்டது போல் பணியாற்றத் தவறிவிட்டன. எதிர்பார்க்கப்பட்டதற்கு வெகு குறைவாக மீன் பிடிக்கப்பட்டதாலும் மற்றும் முகாமைப் பிரச்சினைகளாலும், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலாவற்றினால் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை.

திட்ட அமுல் அமைச்சு நடத்திய பரிசீலனையொன்றிலிருந்து, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டிலும் அமைப்பிலும் இருந்துவரும் பல பிரச்சினைகள் தெரியவந்தன. அவை வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு, 3½ தொன் நிறையுள்ள இயந்திர வள்ளம் ஆண்டுக்கு 38,000 இறாத்தல் மீனைக்கொண்டு வருமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவை பிடித்த மீன்களின் அளவு இந்த மட்டத்துக்கு வெகு குறைவாகவே இருந்தது. சங்கங்களில் மிகப் பெரும்பாலானவை வருடாந்தம் பிடித்த மீன்களின் அளவு அவற்றின் மொத்த உற்பத்தித்திறனில் 30 சத விகிதத்தைவிட குறைவாயிருந்தது.

மேலும், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் போன்ற சாதனங்களில்லாப் பிரச்சினைகளையும் எதிர்நோக்கினர். குறைவான அளவு மீன் பிடிக்கப்பட்டதற்கு இது ஒரு முக்கியமான காரணம்.

அங்கத்தவர்கள் தாங்கள் பிடித்தவையெனக் கூட்டுறவுச் சங்கங்களிடம் கொண்டுவந்து ஒப்படைத்த மீன்களின் அளவு, பிடிக்கப்பட்ட மீன்களின் உண்மையான அளவை எப்பொழுதும் பிரதி பலிக்கவில்லை. ஏனென்றால், அங்கத்தவர்கள் தங்களுடைய வருமானத்தில் ஒரு பகுதி தங்களுடைய கடன்களுக்காகக் கழிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, தாங்கள் பிடித்த மீன்களை வியாபாரிகளுக்கு நேரடியாக விற்று வந்தனர். இந்த வள்ளங்கள் தங்களுக்குச் சொந்தமான சொத்தல்ல, ஆனால் அரசாங்கத்துக்குச் சொந்தமானவையென மாலுமிகள் கருதுவதும் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே உடைமையை உத்தியோக பூர்வமாக மாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞல் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், அத்துடன் இந்த மீனவரின் வருமானத்தை உயர்த்தவும் உதவியாயிருக்குமெனத் தோன்றியது.

கடற்ரெழில் கூட்டுறவுச் சங்கங்களால் தங்களுடைய அங்கத்தவர்களின் கோரிக்கைகளையும் தேவைகளையும் போதிய அளவுக்குப் பூர்த்திசெய்யவும், கூட்டுறவு முறையில் மீன்பிடிக்கும் கருதுகோளைவெற்றிபெறச் செய்வதற்குத் தேவையான உற்சாகத்தை அங்கத்தவர்களிடம் தூண்டவும் முடியவில்லை.

கூட்டுறவுச் சங்கங்களில் நிலவிய இந்த அதிருப்திகரமான நிலைமையினுல் இந்த ஸ்தாபனங்களைப் பலப்படுத்துவதற்காகக் கடற்ரெழில் அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது. எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் சில வருமாறு:

(1) கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்வதற்கும் மேற்பார்வையிடுவதற்குமான பொறுப்பு கூட்டுறவுத் திணைக்களத்திலிருந்து கடற்ரெழில் அமைச்சுக்கு மாற்றப்பட்டு, இந் நோக்கத்துக்காகக் கடற்ரெழில் பணிப்பாளர் கூட்டுறவு அபிவிருத்திப் பிரதி ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

(2) கூட்டுறவுச் சங்கங்கள் வாழ்தகவுள்ள திறமான ஸ்தாபனங்களாக இயங்குவதற்கு உதவியாகப் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(3) கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படும்வரை மீன்பிடி வள்ளத்தின் உரிமையை அதன் தலைவனுக்கு மாற்றிவிட, கொள்கை முடிவு செய்யப்பட்டது. இது இந்த வள்ளங்களின் செயற்பாட்டுத் திறனிலும் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படுவதிலும் அபிவிருத்தி ஏற்படுவதற்கு அடிகோலியுள்ளது.

1981 ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து முன்கணக்கு மீது கடற்ரெழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்குதல் நிறுத்தப்பட்டது. கடன்கள் மீட்கப்படுவதில் நிலவிய அதிருப்திகரமான நிலைமையே அதற்குப் பிரதான காரணம். எனினும், மக்கள் வங்கியும் இலங்கை வங்கியும் சங்கங்களுக்குத் தொடர்ந்து கடன் வழங்கி வருகின்றன. இயந்திர மயமாக்கல் கணக்கிலிருந்தும் கூட்டுறவு முன்கணக்கிலிருந்தும் 1981 ம் ஆண்டில் 34 இலட்சம் ரூபா கடனும் 1982 ம் ஆண்டில் 40 இலட்சம் ரூபா கடனும் மீட்கப்பட்டதாகக் கடற்ரெழில் அமைச்சு பதிவுசெய்துள்ளது. இந்நிலைமை 1983 ம் ஆண்டில் 37 இலட்சம் ரூபாவுக்கு வீழ்ச்சியுற்றதெனினும், 1984 ம் ஆண்டில் 42 இலட்சம் ரூபாவாக அபிவிருத்தியடைந்தது.

கடற்ரெழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட வழமையான கொடுகடன் வசதிகளுக்கு மேலதிகமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தென்மேற்குக் கரை அபிவிருத்தித் திட்டம் போன்ற விசேஷ அபிவிருத்தித் திட்டங்கள், இந்தச் சுய தொழில் திட்டம் ஆகியன சம்பந்தமாக இரு அரசாங்க வங்கிகள் வாயிலாகவும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

கடற்ரெழில் கூட்டுறவுச் சங்கங்கள் தோல்வியுற்றதற்குச் சரியான பண்டசாலை வசதியும் சந்தைப்படுத்தல் வசதியும் மீன்கள் சரியாக விநியோகிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளும் இல்லாமையும் மற்றும் உள்ளமைப்புத் தேவைகள் கவனிக்கப்படாமையும் காரணங்கள் எனத் தோன்றுகிறது. இவை நன்கு திட்டமிடப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டிருந்தால், கடற்ரெழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மிகச் சுலபமாக மீட்டிருக்க முடியும். ஏனென்ருல் இந்த ஸ்தாபனங்கள் பயனுறுதி வாய்ந்தவையாக இயங்கியிருக்கும். இந்த அம்சம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அபிவிருத்தித் திட்டத்தில் தெளிவாகக் காணப்படுகிறது. இத்திட்டத்தில் கடன் வழங்கலும் மீன் செலுத்தலும் மிக நுட்பமாகக் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேற்பார்வை மிகவும் தளர்ந்திருந்த பல சுய தொழில் திட்டங்களில் பெறு பேறுகள் வித்தியாசமாயிருந்துள்ளன.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு முயற்சியாகவே சிறிய மீனவர்கள் 1940 களில் கடற்ரெழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தனர். தவருன முறையில் திட்டமிடப்பட்டுப் பிழையாக அமுல் செய்யப்பட்டதாலும் முகாமையாளர்களின் தீச் செயல்களாலும் இக்கூட்டுறவுச் சங்கங்களின் ஆதிக் குறிக்கோள்கள் சீர்குலைந்தன. எனவே, இன்று இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்துவம் பெறுவது சம்பந்தமாகப் பெரும்பாலான மீனவர்கள் வேண்டா வெறுப்பு காட்டுகின்றனர்; தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க இது உதவுமென்று அவர்கள் கருதவில்லை, இந்நிலைமை தற்போது பலபகுதிகளில் கடற்ரெழில் கூட்டுறவுச் சங்கங்களின் வீழ்ச்சிக்கும் காரணமாயிருந்துள்ளது.

( 1 -ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்த வர்த்தகக் கடன் வாங்கலுக்குரிய நிலுவைக் கணக்கு 1983 செப்ரம்பர் இறுதியில் எஸ். டி. ஆர். 61.4 கோடியாக அதிகரித்தது. ச. நா. நி. யிலிருந்து பெறப்பட்ட கடனும் குறுங்காலக் கடனும் நீங்கலாகப் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் மொ. உ. உ. யில் 36 லிருந்து 40 சதவீதமாக அதிகரித்தது. சர்வதேச வட்டி விகிதாசாரங்கள் அதிகரித்துள்ள வேளையில் வெளிநாட்டுக் கடன் அதிகரிப்பதனுல் கடன் சேவை விகிதாசாரம் எதிர்காலத்தில் நாட்டின் சென்மதி நிலுவையில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி நாட்டுச் செய்தித் தொகுப்பு

## இந்தியா - நீதியுடன் வளர்ச்சிக்கு வற்புறுத்தல்

மத்திய அரசாங்கத்தில் புதிய தலைவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியதனல், புத்தாண்டு உதயத்துடன் இந்தியா அதன் சுதந்திரத்துக்குப் பிந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்துக்குள் பிரவேசித்தது. இளம் ராஜீவ் காந்தியின் தலைமையில் புதிய அரசாங்கம் விசுவாசப் பிரமாணம் செய்து பதவியேற்றபோது, என்ன மாற்றங்கள் ஏற்படக் கூடுமென முழு உலகமும் மனக் கலக்கத்துடனும், சந்தேகத்தோடும் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தது. குறிப்பாக, தென்னுசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகள் இந்தியாவின் கொள்கை முடிவுகள் குறித்துப் பெரும் விசாரம் கொண்டன.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. ராஜீவ் காந்தியின் அரசாங்கம் அறிவித்த பலநடவடிக்கைகளில், குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் நீதியுடன் வளர்ச்சியை உறுதிப் படுத்துவதற்குத் தற்போதிருந்து வரும் கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் மீளாய்வு செய்தல், நிர்வாக இயந்திரத்தை முடுக்கி விடுவதற்கான புதிய நடவடிக்கைகள், அரசாங்கத் துறையில் மாற்றங்களைச் செய்வதற்குரிய பாரதூரமான யோசனைகள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

திரு. காந்தி தேசிய வானெலியில் ஒலிபரப்பிய உரையொன்றில், அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையில் பல மாற்றங்கள் செய்யப்படுமென்று விவரித்தார். ஏழாவது திட்டம் "வறுமை வேலையில்லாமை நோய் அறியாமை போன்ற பழைய சத்துருக்களுக்கு" எதிராகப் போர் தொடுக்குமென்று அவர் கூறினர். உத்தேசிக்கப்படும் மாற்றங்களுடன் அரசாங்கத்துறை அபிவிருத்திக்கான ஒரு கருவியாயிருக்கும்.

உற்பத்திப் பெருக்கத்தை அபிவிருத்திசெய்தல், நவீன தொழில் நுட்ப உத்திகளைக் கிரகித்தல், உற்பத்தித்திறனை இப்பொழுது விட பூரணமாகப் பயன்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் தேசிய இயக்கத்தின் அந்தஸ்தைப் பெறும். இக் குறிக்கோள்களை அடைவதற்குக் குறிப்பான திட்டங்களைத் தயாரிக்குமாறு விஞ்ஞான, தொழில் நுட்பவியல், கைத்தொழில் அமைச்சுகள் கேட்கப்பட்டுள்ளன. ஏற்றுமதித் துறைக்குப் புதிய ஆக்கவிசையளிக்க அடுத்த சில வாரங்களில் உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பலமில்லாத பிரிவுகளுக்கான 20 அம்சங்களைக் கொண்ட சமூக - பொருளாதார வேலைத்திட்டம் அதிக பயனளிக்கத்தக்கவகையில் மீண்டும் திருத்தியமைக்கப்படும். பேராபத்தான முறையில் காடுகள் அழிவதைத்தடுப்பதற்காக, ஒவ்வொரு வருடமும் ஐம்பது இலட்சம் ஹெக்டேர் காணிகளில் விறகுக்கான மரங்களும் விலங்குணவுப்பயிர்களும் நடப்படுவதற்காகத் தேசியப் பாழ்நிலங்கள் அபிவிருத்திச் சபையொன்று உடனடியாக அமைக்கப்படும். காடுகள் உண்டாக்கப்படுவதற்காக மக்கள் இயக்கமொன்று வளர்க்கப்படும்.

சமூக, பொருளாதார உருமாற்றத்தை உண்டாக்குவதற்காக நிர்வாக ஸ்தாபனங்களையும் கொள்கைகளையும் நடைமுறைகளையும் முழு அளவில் மீளாய்வு செய்யும் வேலைகள் நடந்து வருகின்றன. முடிவுசெய்யும் முறை பரவலாக்கப்படும் அதே சமயத்தில் கணக்குக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் அமுலாகும். முடிவுகள் செய்வதைத் துரிதப்படுத்துவதற்காக, விதிகளும் நடைமுறைகளும் அடியோடு சுலபமாக்கப்படும். நடைமுறைகளுக்கு மேல் பெறுபேறுகளுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

அரசாங்க சேவைகளின், வழமையான வேலைகளில் வெளித்தலையீட்டைத் தடுக்க அரசாங்கம் முயலும். பொது மக்களுக்குச் சேவை செய்வதற்காக ஒரு புதிய நிர்வாக மனப்பக்குவம் உண்டாக்கப்படும். வினைத்திறனையும் இந்திய சமுதாயத்தின் அடிப்படை விழுமியங்களுக்குக் கடப்பாட்டையும் வளர்ப்பதற்காகச் சகல தரங்களையும் சேர்ந்த சிவில் ஊழியர்களின் பயிற்சிமுறை மாற்றியமைக்கப்படும்.

கல்வித்துறையில், தேசிய ஐக்கிய இயல்பையும் வேலை நீதியையும் வளர்ப்பதற்காக ஒரு புதிய கொள்கை வகுக்கப்படும். பாடசாலை முறையில் புதிய தொடர்பாடல் உத்திகளைப் புகுத்துதல், வேலைகளுடன் கல்விப் பட்டங்கள் கொண்டுள்ள இணைப்பை அறுத்தல், திறந்த வெளிப் பல்கலைக் கழகங்களை

(22-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியில் வங்கிகளின் பங்கு

டபிள்யு. எம். திலகரத்ன

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரான கலாநிதி டபிள்யூ. எம். திலகரத்ன மத்திய வங்கியின் கிராமீய வங்கி, பணியாளர் பயிற்சிக் கல்லூரியின் இரண்டாவது ஆண்டு பூர்த்தி விரிவுரையில், வங்கிகள் இயக்கத்தன்மை மிக்க கடன் கொள்கைகளைப் பின்பற்றுவதன் அவசரத் தேவையை வலியுறுத்தினர். இலங்கையின் வங்கித் துறை கொள்கை, நோக்கு, விருப்பு என்பவற்றில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்; இலங்கையில் உள்ள பெரும்பாலான வணிக வங்கிகள் தொடர்ந்தும் முறையற்ற வங்கிக் கொள்கைகளைப் பின்பற்றுவதாகவும் அவர் கருத்துத் தெரிவித்தார். வங்கி முறைமை கிராமீயத் துறையில் உற்பத்தித்திறன், வேலை வாய்ப்பு என்பவற்றை அதிகரிப்பதற்குரிய போக்கின் முன்னேடியாக விளங்க வேண்டும் எனக் கூறுகின்ற அவர் வங்கிச் சமூகம் தனது இத் தாராண்மை நலனைக் கருத்திற் கொண்டு இயங்கும் எனவும் கருத்துத் தெரிவிக்கின்றார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் நான் நிகழ்த்திய ஓர் உரையில் குறிப்பிட்ட பல அம்சங்கள் இன்னும் பொருத்தமானவையாகத் தென்படுகின்றன. நான் அடையாளம் கண்ட சில துறைகளில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி இடம்பெற்றுள்ள போதிலும் வங்கித் துறையில் இன்னும் பல குறைபாடுகள் நிலவுவது வருந்தத் தக்கதாகும். அந்த உரை வங்கி முறைமையின் இயலாமையை ஆராய்ந்தது. சேமிப்பினை அசைவுறச் செய்வதற்கும், கடன் அளிப்பிற்கும் வணிக வங்கி அமைப்பானது குறிப்பாக கிராமீயப் பிரதேசத்திற்கு விஸ்தரிக்கப்பட வேண்டும் என இவ்வுரையில் கேட்கப்பட்டது. வேறு வார்த்தைகளில் கூறினுல் வங்கி வசதிகளின் அளவு, தரம் என்பவற்றில் அபிவிருத்தி ஏற்பட வேண்டும். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, கடந்த பத்து வருடங்களிலும் அளவீட்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காணப்பட்டுள்ளது; ஆனல், தரத்தின் அடிப்படையில் இது மிகச் சிறியதாகும்.

நல்ல அம்சங்களை நோக்குபவன் என்ற வகையில் நான் சாதகமான சாதனைகளுடன் இதனை ஆரம்பிக்கின்றேன். இந்நேரத்தில் நாம் அனைவரும் நேர்கணியமாகச் சிந்தித்துச் செயற்படல் வேண்டும். எம்மை எதிர்நோக்குகின்ற சவால்களுக்கு நாம் துணிவுடன், முகம் கொடுக்க வேண்டும் என எமது நாட்டின் எதிர்காலம் எம்மை வேண்டுகின்றது.

எமது பொருளாதார அபிவிருத்தியின் மிக முக்கியமான இக் காலகட்டத்தில் இவ்விடயம் எம் அனைவருக்கும் மிகவும் முக்கியமானதாகும். பல வருடங்களாக எமது நாடு சிக்குண்டிருந்து "குறைந்த முதலீடு — குறைந்த வளர்ச்சி" என்ற பிடியிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு அண்மைக் காலத்தில் அரசாங்கம் பாரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. மொ.உ.உ. முதலீட்டு விகிதாசாரம் இரு மடங்காகியுள்ளது. யுத்தத்தின் பின்னர் உலகப் பொருளாதாரம் மிக மோசமான பின்வாங்கலை அனுபவிக்கின்ற இந்நேரத்தில், இலங்கையின் பொருளாதாரம் மெய்ரீதியாக சராசரி 6 சதவிதத்திற்கும் மேலாக வளர்ச்சியடைந்துள்ளது. முதலீடு தொடர்பாக அரசாங்கம் முன்னணிப் பங்கினை வகித்துள்ளது. இலங்கைப் பொருளாதாரத்தில் தொடர்ச்சியான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் ஊழியத்தைக் கவருவதற்கும் பொது வசதிகளின் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க முதலீடு இடம்பெறல் அவசியமாகவிருப்பதனல் இது பிரதான இடம் வகிக்கின்றது. பல வருட காலக் கட்டுப்பாடு, முழுமையான தேக்கநிலைமை என்பவற்றிலிருந்து பொருளாதாரத்தை துரிதமாக மீட்சிபெறச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவாக வர்த்தகம், நிருமாணம் ஆகிய துறைகளைச் சார்ந்த அபிவிருத்திச் செய்முறை ஏற்பட்டுள்ளது. இந்த அபிவிருத்திக் கட்டம் இப்பொழுது முடிவடைந்துள்ளது.

பொருளாதாரத்தில் மெய்த் துறைகளில் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் கொள்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. இடைக்கால அபிவிருத்தித் தந்திரோபாயம் வெற்றிபெற வேண்டுமாஞல் வங்கித் துறையின் உற்சாகமான ஆதரவு அவசியமாகும். வங்கித் துறையின் நோக்கில் குறிப்பிடத்தக்க புனரமைப்புத் தேவை; நாட்டின் அபிவிருத்தித் தேவைகள், வங்கிச் சமூகத்தின் தாராண்மை சார்ந்த சுய நலன் ஆகிய இரு நோக்குகளின் அடிப்படையிலும் இது முக்கியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969 இல் நான் உரையாற்றிய காலத்திலிருந்து நிறுவனரீதியான நிதித் துறையில் பாரிய விஸ்தரிப்பு ஏற்பட்டுள்ளது. அப்போது நாட்டில் 155 வணிக வங்கிக் கிளைகள் இருந்தன. இதன்படி சராசரியாக 80,000 மக்களுக்கு ஒரு வங்கிக் கிளை இருந்தது எனலாம். இன்று, தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள் தவிர 671 கிளைகள் உள்ளன; இதன்படி இன்று 22,500 மக்களுக்கு ஒரு கிளை வீதம் உள்ளது, வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒரு கிளைக்குரிய மக்கள் தொகை மிகக் குறைவாகும். பெல்ஜியம், ஸ்விட்சர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இத்தொகை 1,000 - 1,500 ஆகவும், ஐக்கிய இராச்சியத்தில் 3,000 ஆகவும் உள்ளது.

வைப்பாளர்களிடமிருந்து பணத்தைப் பெறுவதற்குத் தீவிர போட்டி நிலவுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு உயர்தர நிதிச் சேவைகளும் அளிக்கப்படுகின்றன என்பதனை இது காட்டுகின்றது. இலங்கையில் வங்கித் துறையில் போட்டியை அதிகரிப்பதற்கு அண்மைக் காலங்களிலிருந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிறுவனரீதியான நிதித் துறையில் மக்களின் உள்ளடக்க வளர்ச்சி சிறப்பாகவுள்ளது.

சனத்தொகையின் அடிப்படையில் பொது மக்கள் வைத்துள்ள வங்கிக்கணக்குகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பும் நிறுவன ரீதியான நிதித் துறையின் விஸ்தரிப்பினைப் பிரதிபலிக்கின்றது. ஒவ்வொரு வங்கிக் கணக்கும் ஒரு தனிப் பிரசையால் வைக்கப்பட்டுள்ளது என்ற எடுகோளின் அடிப்படையில் நோக்குகையில் 1969 இல் சனத்தொகையில் 4.5 சதவீதமானோர் மாத்திரமே வங்கிக் கணக்குகளை வைத்திருந்தனர். இன்று இது 28.9 சதவீதமாகும். ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகளை வைத்திருப்போரினதும் ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனங்களின் கணக்குகளும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருக்கலாம் என்ற அம்சத்தைத் தவிர்த்துப் பார்ப்பினும் கூட இது ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும்.

வைப்புக்களின் அசைவிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தலா அடிப்படையில் தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் அதிகரித்துள்ளன; 1969 டிசம்பரில் தலா அடிப்படையில் ரூபா 80.8 ஆக விருந்த இவை 1983 ஜூனில் ரூபா 1,417.6 ஆக அதிகரித்துள்ளன. நிறுவன ரீதியான நிதித் துறை அளவீட்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்க விஸ்தரிப்பினை அடைந்துள்ளது என்பதனை இது உறுதிப்படுத்துகின்றது. மேலதிக கிளை விஸ்தரிப்பு சிறந்த பொருளாதார அளவீட்டின் அடிப்படையில் இடம்பெற வேண்டும். பொருளாதாரத்தில் இடம்பெறுகின்ற அதிகரித்த பணமயமாக்கம் - குறிப்பாக மகாவலிப் பிரதேசத்தில் - எதிர்கால விஸ்தரிப்பிற்கு வாய்ப்பாக உள்ளது.

கடந்த ஐந்து வருடங்களாக இலங்கையின் வங்கி முறைமையில் முன்னெருபோதுமில்லாத முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கிராமீயப் பிரதேசங்களை உள்ளடக்கும் வகையிலான விஸ்தரிப்பு கூடுதலாக வலியுறுத்தப்பட்டுள்ளது. கிளைகளின் விஸ்தரிப்பிற்கு மேலாக வெளிநாட்டுக் கிளைகளும் செயற்பட ஆரம்பித்துள்ளன. வங்கித் துறையில் வரவேற்கத்தக்க போட்டியும் புத்துணர்ச்சியும் ஏற்படுவதற்கு இது வழி வகுத்துள்ளது. இது வெளிநாட்டு முதலீட்டையும் வெளிநாட்டு வர்த்தகத்தையும் ஊக்குவித்துள்ளது. 1977 இலிருந்து இலங்கையில் மொத்தம் 14 வெளிநாட்டு வங்கிக் கிளைகளும் இரு பிரதிநிதித்துவ அலுவலகங்களும் திறக்கப்பட்டுள்ளன. இரு வெளிநாட்டு வங்கிகளுக்குக் கிராமியக் கிளைகளைத் திறப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கிராமியக் கடன் துறையில் இவ் வங்கிகளுக்கு உள்ள நிபுணத்துவத்திலிருந்து பயன்பெறுவதே இதன் நோக்கமாகும். இதன் செயற்பாட்டுத் தாக்கத்தின் விளைவாக மறைமுக நலன்களும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஐந்து வருடங்களாக வங்கி முறைமையின் நிறுவன ரீதியான அமைப்பு பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்ற பல்வேறு புதிய நிறுவனங்களும் நாட்டின் நிதி முறைமையைப் பலப்படுத்துவதற்குத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நிதி அபிவிருத்தி, ஏற்றுமதி சார்ந்த நடவடிக்கைகள் என்பவற்றை நிதிப்படுத்துவதற்கே இவை உருவாக்கப்பட்டுள்ளன வணிக வங்கி முறைமையும் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை வங்கியின் ஒரு துணை நிறுவனமான இலங்கை மட்டுப்படுத்தப்பட்ட வணிக வங்கி 1982 ஆகஸ்டில் தொழிற்பட ஆரம்பித்தது. கினஸ் மாஹன் கம்பனியுடன் இணைந்து மக்கள் வங்கி, மட்டுப்படுத்தப்பட்ட மக்கள் வணிக வங்கியை நிறுவியது. பல்வேறு நிதிச் சேவைகளையும் - குறிப்பாக வீடமைப்புத் துறையில் - அளிக்கும் வகையில் அரச ஈட்டு, முதலீட்டு வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கி தனது கிளைகளை விஸ்தரித்திருப்பதுடன், சேமிப்பினை திரட்டுவதில் ஒரு முன்னோடியாகவும் கருமமாற்றியுள்ளது.

அண்மைக் காலங்களில் இலங்கையின் வங்கி முறைமையில் ஏற்பட்ட துரித அபிவிருத்தி, கிளை விரிவாக்கத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை; புதிய வெளிநாட்டு வங்கிகளின் வருகை, நிறுவன ரீதியான அமைப்பின் பன்முகப்படுத்தல் என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் இது உள்ளடக்கியிருந்தது. பல புதிய கருவிகளும் வசதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. 1979 மே மாதத்தில் கடல் கடந்த ஒரு வங்கித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது; இத்திட்டத்தின் கீழ் இலங்கையில் இயங்குகின்ற வர்த்தக வங்கிகளுக்கு வெளிநாட்டுப் பண வங்கிப் பிரிவுகளைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், அவை வெளிநாட்டுப் பண வடிவில் வைப்புக்களை ஏற்பதற்கும் கடன் கொடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

கொழும்பினை ஒரு சர்வதேச நிதி நிலையமாக ஊக்குவிப்பதும் மேலதிக மூல வளங்களை நாட்டின் அபிவிருத்தி நோக்கி அசைவுறச் செய்வதும் இதன் பிரதான நோக்கங்களாகும். நாட்டில் வசிக்காதோருக்கான வெளிநாட்டுப் பணக் கணக்குத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட சலுகைகள் இன்னொரு புதிய கண்டு பிடிப்பாகும். இக்கணக்கு வைத்திருப்போர் நாணயமாற்றக் கட்டுப்பாடுகள் இன்றி கணக்குகளை வைத்திருக்க முடிந்ததுடன் அவர்கள் இலங்கை திரும்பியதன் பின்னர் பத்து வருடங்களுக்கு இவற்றைத் தொடர்ந்தும் வைத்திருக்க முடிந்தது. இக் கணக்குகள் கவர்ச்சிகரமான வட்டியை அளித்தன. குறித்த காலகட்டத்திற்கு வட்டிக் கொடுபனவுகள் மீது வருமான வரி விதிக்கப்படாததுடன், இம் மூலதனம் செல்வ வரியிலிருந்தும் விலக்குப் பெற்றிருந்தது. 1976 இல் ரூபா 10 கோடியாக விருந்த உள்வாரியான வெளிநாட்டுப் பணவருகைகளை 1982 இல் ரூபா 578.9 கோடியாக அதிகரிப்பதற்கு இந்த ஊக்குவிப்புக்கள் உதவின.

பொருளாதாரத்தில் நிதித் தலையீட்டினை விருத்திசெய்வதில் மத்திய வங்கி உற்சாகமான பங்கினை வகித்துள்ளது. நிதி உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற அதே வேளை, முதலீடு, வெளியீடு, வேலை வாய்ப்பு என்பவற்றில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட பேரினப் பொருளாதாரக் கொள்கைகளின் பிரதான முகவராக இது கருமமாற்றியுள்ளது. மத்திய வங்கி ஒரு யதார்த்தமான வட்டி விகிதாசாரக் கொள்கையைப் பின்பற்றுகின்றது; இது நிதி உறுதிப்பாட்டுக்கு உதவுவது மாத்திரமன்றி சேமிப்பு முயற்சிக்கும் உதவுகின்றது. மத்திய வங்கி தன்வசமுள்ள பல்வேறு கருவிகளையும் விலைகளை உறுதிப்படுத்துவதற்குப் பாவித்துள்ளது. உள்ளூர்க் கடன் விரிவாக்கத்திலை நிதிவாங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இப்பின்னணியிலேயே திறைசேரி உண்டியல்களில் ஒரு இரண்டாந்தர சந்தை உருவாகியுள்ளது. அரசாங்கம் மத்திய வங்கியின் வாயிலாகப் பொருளாதாரத்தில் உள்ள கடன் பாய்ச்சலின் தரத்தை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கின்றது. வணிக வங்கிக் கடன் பாய்ச்சலை அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் பொருந்தச் செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முன்னுரிமைத் துறைகளுக்கான கடன் பாய்ச்சல் மத்திய வங்கியின் மீள்நிதிப்படுத்தற் திட்டங்களால் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளன.

கிளை விஸ்தரிப்பு, நிறுவன ரீதியான பன்முகப்படுத்தல், புதிய நிதிக் கருவிகளின் அபிவிருத்தி என்பவற்றில் கண்ட வெற்றி, கடன் நிரம்பல் அபிவிருத்தியுடன் இணைந்து செல்லாதிருந்தது துரதிர்ஷ்டவசமானதாகும். வங்கிகள் நன்கொடை நிறுவனங்கள் அல்ல என்பதனை ஆரம்பத்தில் ஏற்கவேண்டும். எதிர்காலத்தில் இலாபம் அளிக்காத நடவடிக்கைகளில் வங்கிகள் ஈடுபட வேண்டுமென நான் கூற வில்லை. எனினும், இலங்கையின் வங்கித் துறையில் கொள்கை, நோக்கு, விருப்பு என்பவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றம் தேவை என்பதனை வலியுறுத்தி ஆக வேண்டும்.

1969 இல் எனது உரையின் போது '"இலண்டன் வீதிகளில் உள்ளவை போன்ற வங்கியாளர்களை நாம் தேடவில்லை'' எனக் கூறினேன். இன்று கூட இலங்கையில் உள்ள பெரும்பாலான வங்கிகள் தொடர்ந்தும் பொருத்தமற்ற வங்கிக் கொள்கைகளைப் பின்பற்றுகின்றன என்பதனை நான் கவலையுடன் கூறுகின்றேன். இந்நிறுவனங்கள் நாட்டின் அபிவிருத்தித் தேவைகள் தொடர்பாக கூடிய அக்கறை செலுத்த வேண்டும். இவை குறுகிய வணிக வங்கிக் கட்டுப்பாடுகளிலிருந்து விலகி நிதி அபிவிருத்தித் துறைக்கு மாறவேண்டும். இலங்கையின் பின்னணியில், கிராமீயத் துறையினதும் சிறு முயற்சியாளர்களதும் கடன் தேவைகளுக்கு கூடிய வசதிகளைச் செய்தல் எனப் பொருள்படும்.

வர்த்தகம், விநியோகம் ஆகிய துறைகளை வங்கிகள் தொடர்ந்தும் நிதிப்படுத்தி வருகின்றன; குறிப்பாக ஏற்றுமதி, இறக்குமதித் துறையிலேயே இது இடம்பெறுகின்றது. அண்மையில் நிகழத்தொடங்கிய உள்நோக்கிய பண வருகைப் பாய்ச்சல் ஓர் இலகுவான வருமான மார்க்கமாக உள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் பொருளாதாரத்தின் ஆரோக்கியத்திற்கு முக்கியமாகும். எனினும், இன்று நாட்டில் நிலவுகின்ற வங்கி அமைப்பானது நிறுவன ரீதியான நிதித் துறையின் நீண்ட கால இலாபத்தைக் குறைக்காது, இந்த இலகுவான பிரிவுகளுக்கும் அப்பால் செல்லக் கூடிய திறமை உடையது என நான் உறுதியாக நம்புகின்றேன். உண்மையில், அபிவிருத்தி முயற்சியில் உற்சாகத்துடன் பங்கெடுப்பது வணிக வங்கிகளுக்கு நீண்ட கால ஓட்டத்தில் நன்மை பயப்பதாகும். எளிமையான வார்த்தைகளில் குறிப்பிட்டால், இலங்கை வளர்ச்சியடைந்தால், இலங்கையில் இயங்குகின்ற வங்கிகளுக்குக் கிடைக்கக் கூடிய வணிகப் பாய்ச்சலும் விரிவடையும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிச் சமூகம் தனது தாராண்மைக்குணத்தை உணரும் என நான் பணிவாக எண்ணுகின்றேன். கடன், வர்த்தக நடவடிக்கைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படக் கூடாது; அது வருமானம், தொழில்வாய்ப்பு என்பவற்றின் வளர்ச்சிக்கான இயல்திறன்களைக் காட்டுகின்ற துறைகளுக்கும் பாய்தல் வேண்டும். இலங்கையின் பொருளாதாரம் இன்னும் விவசாயிகள், குடிசைக் கைத்தொழில்கள், சிறு கைத்தொழில்கள், சிறு வணிக நடவடிக்கைகள் என்பவற்றின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்றது. நகர்த்துறை, பாரிய வர்த்தகம் என்பவற்றின் மீது கவனம் செலுத்துகின்ற கடன் பாய்ச்சல் பொருளாதாரத்தின் பாரிய துறைகளின் இயல்திறன்களைப் புறக்கணிக்கக் கூடாது.

கிராமீய மக்களின் உற்பத்தியை அதிகரிக்காவிட்டால் அர்த்தபுஷ்டியானதும், சமவலுமிக்கதுமான அபிவிருத்தி இலங்கையில் காரியசாத்தியமாகாது. கிராமீயக் கடன் விஸ்தரிக்கப்படாது இந்த இலக்கினை அடைய முடியாது. ஆகையால் வங்கி முறைமையானது கிராமீயத் துறையில் உற்பத்தித்திறன், வேலை வாய்ப்பு என்பவற்றை அதிகரிப்பதற்குரிய இயக்கத்தின் முன்னேடியாக விருத்தல் வேண்டும். இந்த நடவடிக்கை நீண்ட காலத்தில், எமது கிராமங்களில் வாழுகின்ற பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்வது மாத்திரமன்றி, நாட்டில் பொருளாதார நடவடிக்கைகளின் அதிகரிப்புடன் இலாபத்தையும் அதிகரிக்கச் செய்யும்.

இதன் விளைவாக ஏற்படுகின்ற மீளப் பாய்ச்சல், வங்கிகளின் வைப்புக்களையும், கடனளிக்கின்ற இயலளவினையும் உயர்த்துவதன் மூலம் அவற்றின் இலாபத்தையும் அதிகரிக்கச் செய்யும்.

இதற்கு மேலாக அலகுச் செலவுகளைக் குறைப்பதற்குரிய ஒரு சிறந்த வழி வர்த்தக விஸ்தரிப்பாகும், கடனளிப்பிற்குரிய சிறந்த சிந்தனையுடைய திட்டங்களுடன் கூடிய தீவிர வைப்புத் திரட்டுதலானது செலவுகளைக் குறைக்கும் நீண்ட கால இலாபத்திற்குரிய பாதையில் எதிர்ப்படும் குறுங்கால வர்த்தகக் குறைபாடுகளைப் பொறுப்பதற்குரிய நோக்கும் தீர்க்கதரிசனமும் வங்கிச் சமூகத்தின் அங்கத்தவர்களிடையே உண்டு என நான் நம்புகின்றேன். குறிப்பாக, நான் நம்புவது போன்று இவ்வர்த்தகக் குறைபாடு அவ்வளவு பாரியதாக இருக்கத் தேவையில்லை. திரட்டிய வைப்புக்களை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தவேண்டுமானால், வங்கிகள் தமது நோக்குகளையும் கொள்கைகளையும் மறுசீரமைக்க வேண்டுமென அண்மையில் பொருளாதாரக் கட்டமைப்பு ஊக்குவிப்புக்களுள் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் வேண்டுகோள் விடுப்பதனை நான் கீழே விளக்குவேன். இதற்கு முன்னர் கிராமிய பிரதேசங்களிலும், சிற்றளவுத் துறையிலும் உள்ள இயல்திறன் பற்றிச் சிறிது கூடுதலாக விளக்க விரும்புகின்றேன்.

வழமையாக சிற்றளவுத் துறையுடன் இணைந்துள்ள கூடிய இடர்பாடுடைய முயற்சிகளை நிதிப்படுத்துவதில் வங்கிகள் தொடர்ந்தும் முரணான போக்கினையே கடைப்பிடிக்கின்றன. எனினும், இத்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியும் தொழில் வாய்ப்பு இயலளவும் உண்டு. சிறிய வணிகச் செய்திட்டங்களின் இயளவை மதிப்பிடுவதில் நிறுவன ரீதியான கடனளிப்பாளர்கள் தொடர்ந்தும் தேவையற்ற வகையில் எச்சரிக்கையாக உள்ளனர். வங்கியாளரிடையே உள்ள மரபு ரீதியான பழமை பேணும் தன்மை, இவர்களை இறுக்கமான நிபந்தனைகளை விதிக்கச் செய்கின்றது: குறிப்பாகப் பிணை தொடர்பான வற்றிலேயே இது இடம் பெறுவதால் சிறு முயற்சியாளர்களை இது நிறுவன ரீதியான நிதி ஸ்தாபனங்களிலிருந்தும் நீக்கி விடுகின்றது. இதன் விளைவாகத் தமக்கு முதலீட்டுக் கடன் வசதிக்கான வாய்ப்பு இல்லை என்பதனை இவர்கள் அறிக்கின்றனர்.

அளிக்கப்படுகின்ற பிணைகளை விடவும், முயற்சியும் செயற்திறனும் காரிய சாத்தியமுமே கடனளிப்பு அளவீட்டுக் கருவியாக விளங்குதல் வேண்டும். இதற்கு மேலாக, முயற்சியாளர்களின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவுதல் அபிவிருத்தி வங்கியியலின் இன்னொரு பிரதானமான அம்சமாகும். இலங்கையின் வணிக வங்கிகள் இச்சவால்களை ஏற்றதாகத் தெரியவில்லை. சிற்றளவு முயற்சிகளை அளவிடுவதற்குரிய தொழினுட்ப திறமை இன்மையும் சிறிய முயற்சியாளர்களுடன் தொடர்பு இன்மையும் இதற்குக் காரணமாக விருக்கலாம்.

பாரம்பரிய விவசாயத் துறையைப் பொறுத்தவரையிலும் இங்கு நிறுவன ரீதியான கடன் விஸ்தரிக்கப்பட்டுள்ளது எனலாம். எனினும், இன்னும் முறைசாராத கிராமீயக் கடனளிப்போர் ஒரு பிரதான நிதி மூலமாக விளங்குகின்றனர்; குறிப்பாக நிறுவனரீதியான கடனின் அளவு வருடாவருடம் தளம்பிச்செல்லும்போது இவர்களது ஆதிக்கம் கூடுகின்றது. இலங்கையில் கிராமீயக் கடனின் ஒரு பிரதான பண்பு திரும்பப் பெறுவதில் உள்ள மோசமான தன்மையாகும். இது கடன் மார்க்கங்களைத் தடைப்படுத்துகின்றது. இதன் விளைவாக விவசாயிகள் கிராமீய கடனளிப்போரை நாடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவர்களது அதிகரித்த வட்டியும் சுரண்டல்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க கடனளிப்புச் செய்முறைகளும் அவர்களைக் கொடிய கடன் - வறுமைச் சக்கரத்தில் சிக்கவைக்கின்றது. விவசாயக் கடனின் சிறப்பான பாய்ச்சலைக் கொள்கை உருவாக்குவோரும் வங்கியாளர்களும் உறுதிப்படுத்த வேண்டும். மோசமாக அமுல்படுத்தப்பட்ட விவசாயக் கடன் முறையிலிருந்து எழுகின்ற இடர்களின் காரணமாக இக்கடன் முறை மோசமானது என்ற முடிவிற்கு வந்துவிடக்கூடாது.

இவ்விடத்தில் கிராமீயக் கடனின் நோக்கம் தொடர்பாக நாம் தெளிவான கருத்தைக் கொண்டிருத்தல் முக்கியமாகும். கடன் வேண்டுவோர் இரு குழுக்களுள் அடங்குவர். உற்பத்திப் பொருளாதார நடவடிக்கைக்குப் பணம் தேவைப்படுவோர் உள்ளனர்; உதாரணமாக, பண்டங்கள், சேவைகள் என்பவற்றின் உற்பத்தியைக் குறிப்பிடலாம். இதற்கு மேலாகத் தமது பிழைப்பூதியத்திற்குக் கடன் தேவைப்படுவோரும் உள்ளனர். இதில் முதலாவது குறிப்பிடப்பட்ட குழுவினரே வங்கித் துறையின் கவனத்திற்கு உட்படவேண்டியோராகும். பின்னர் குறிப்பிடப்பட்டோர் எல்லைப்படுத்தப்பட்ட பொருளாதாரக் குழுவினராகும். இவர்கள் மகாவலித் திட்டம், சிறிய, பெரிய நீர்ப்பாசன, குடியேற்றத் திட்டங்கள், ஒன்றிணைக்கப்பட்ட கிராமீய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் போன்ற அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் வாயிலாக உதவி பெறுகின்றனர்.

பணத்தைத் தேவையின்றிக் கொடுக்குமாறு எவரும் வங்கிகளைக் கேட்கவில்லை. கிராமீய, சிற்றளவுத் துறைகளில் உள்ள பயன்படுத்தப்படாத உற்பத்தி இயல்திறன்களைப் பயன்படுத்துவதற்கு உதவுவதே அவற்றின் அபிவிருத்திப் பணியாகும். இவ்வாறு செய்வதன் மூலம் அவை வருமானம், வேலைவாய்ப்புப் பெருக்கிகளின் வாயிலாக மிக வறிய மக்கள் தமது வாழ்க்கையை அபிவிருத்தி செய்வதற்கு மறைமுகமாக உதவுகின்றன. கிராமீயத் துறையில் தோற்றுவிக்கப்பட்ட மிகைகளை வற்றச்செய்கின்ற பொறிமுறையாக வங்கிகள் நடக்கக் கூடாது என்பது பிரதானமாகும். இம் மிகைகளை அதிகரித்த கடன் வாய்ப்புக்களின் ஊடாகக் கிராமீயத் துறையைச் சென்றடைவதற்கு கவனம் மிக்க முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். இது கிராமீயப் பிரதேசங்களில் முயற்சியாளர்கள் புதிய பொருளாதார நடவடிக்கைகளை அடையாளம் காண உதவும். இது நேர்கணியமான வேலைவாய்ப்பு, வருமான விளைவுகளைத் தோற்றவிக்கும்.

இயக்கத் தன்மைமிக்க கடன் கொள்கைகளுக்கான அவசர தேவையும் உள்ளது. அரசாங்கத்தின் இடைக்காலத் திட்டம் தனியார் துறையின் பங்கினை அதிகரிப்பதற்கு எதிர் பார்க்கின்றது. புனர் நிர்மாணமும் மீட்சியும் அரசாங்கத்தின் உடனடி முன்னுரிமைகளாகும். வளர்ச்சியைப் பேணுகின்ற அதேவேளை, விலை உறுதியையும் பேணுதல் அரசாங்கத்தின் இடைக்கால அபிவிருத்தித் தந்திரோபாயமாகும். அண்மைக் காலங்களில் பொது வசதித்துறை வசதிகளில் ஏற்படுத்தப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட வாய்ப்புக்களால் பயன் பெறும் வகையில் மூலவளங்கள் தனியார் துறைக்கு அளிக்கப்படுவதுடன் பொதுத் துறை முதலீடு வெகுவாகக் குறைக்கப்படும். கவனம் மிக்க நாணயக் கொள்கையினூலும். யதார்த்தமான நாணய மாற்று விகிதாசாரக் கொள்கைகளாலும் உள்ளூர்ச் சேமிப்பு முயற்சிகள் நன்மை அடைய வேண்டும். நாட்டின் முதலீட்டுத் தந்திரோபாயத்தில் ஏற்பட்டுள்ள அதிகரித்த தனியார் முதலீட்டினால் ஏற்படுத்தப்பட்டுள்ள வாய்ப்புகளிலிருந்து முழுமையான இயல்திறன்களைப் பெறுவதற்கு உதவக்கூடிய கொள்கைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் வங்கிகள் முழுமையான பங்கினை அளித்தல் வேண்டும்.

வங்கிகளுக்கும் முயற்சியாளர்களுக்கும் இடையிலான நெருங்கிய இயக்கத்தன்மை மிக்க உறவின் வாயிலாக அடையக் கூடிய நன்மைகளுக்கு ஜப்பானும், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசும் சிறந்த உதாரணங்களாகும். பல தடவைகள் வங்கிகள் வளர்ச்சி இயல்திறனுள்ள துறைகளில் சம பங்கெடுப்பினை மேற்கொண்டுள்ளன. பொருளாதாரத்தில் உற்பத்தித் துறைகளில் குறிப்பாக ஏற்றுமதி சார்ந்த நடவடிக்கைகளுக்கு. தனியார் முதலீட்டை அதிகரிப்பதற்குரிய முறையான சூழலை உருவாக்குவதற்கு நிதி, நாணய ஊக்குவிப்புக்கள் பாவிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையில் இது தொடர்பாக தீவிர கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

வணிக வங்கியாளர்களிடையே அபிவிருத்தி சார்ந்த கொள்கைகளை உருவாக்கி நாட்டில் சமூக, பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துகின்ற கருவியாக அவற்றை மாற்றுவது தொடர்பாக இப்பயிற்சி நிறுவகம் (மத்திய வங்கியின் கிராமீய வங்கிப் பணியாளர் பயிற்சிக் கல்லூரி) ஆற்றுகின்ற பங்கினை எடுத்துக்காட்டி எனது உரையை முடிக்க விரும்புகின்றேன். வங்கிகள் தலைமைத்துவத்தைக் கொடுத்து பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் உற்சாகத்துடன் பங்கெடுக்கவேண்டும். பொருளாதாரத்தில் முன்னுரிமைத் துறைகளின் இயல்திறனைச் சிறப்பாக மதிப்பிடக் கூடிய வகையில் இந்நிறுவகம் வங்கி ஊழியர்களுக்கு சிறந்த பயிற்சியை அளிக்க முயற்சிக்கின்றது. குறிப்பாக, ஒழுங்குபடுத்தப்படாத துறைக்கு உதவி, முகாமைத்துவப் பயிற்சி, பொருளாதார நடவடிக்கையின் நுணுக்கமான மேற்பார்வை என்பவற்றை அளிக்கும் வகையில் அறிவூட்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. இதுவரையிலும் புறக்கணிக்கப்பட்டிருந்த துறைகளின் தேவை, இயல்திறன் என்பன பற்றிய விரிவான அறிவும் வாடிக்கையாளர்கள் செயற்திட்டங்களை அடையாளம் காண வங்கி அலுவலர்கள் உதவுவதற்கு வகை செய்கின்றது.

நாட்டின் கடன் தேவைகள் தொடர்பாக நம்பகமான தகவல் இன்மை கடன் அளிப்பு, முகாமை என்பன தொடர்பான ஒரு பிரதான பிரச்சினையாகும். வங்கிக் கிளை உள்ளடக்குகின்ற பிரதேசத்திற்குத் தேவையான ஒரு கடன் திட்டத்தைத் தயாரிக்கக்கூடிய அலுவலர்களை வங்கிகளின் கிராமியக் கிளைகள் கொண்டிருத்தல் வேண்டும். எம்முன்னுள்ள சவால்களை எதிர்நோக்கக்கூடிய வகையில் வங்கிப் பணியாளர்களின் தரம் தொடர்ச்சியாக உயர்த்தப்படல் வேண்டும். ஆகக் குறைந்த மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரையிலும் வங்கி யாளர்களைப் பயிற்றுவிப்பதற்குத் தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், புத்துணர்ச்சிப் பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள் என்பவற்றை நடாத்த வேண்டிய தேவை உள்ளது.

வங்கிப் பணியாளர்களுக்கு மாத்திரம் கல்வியூட்டுவது போதாது. அவர்கள் மறுபுறத்தில் தமது வாடிக்கையாளர்களுக்கு கல்வியூட்டுதல் வேண்டும்; குறிப்பாக "சிறிய மனிதனுக்கே" இவ்வாறு செய்ய வேண்டும்.

செயற்திட்டங்களின் உருவாக்கம், அமுலாக்கம், முகாமை என்பன தொடர்பாக வங்கிகள் திறமைச் சேவைகளை அளிக்கலாம். கடன் வங்கிகள் திறமைச் சேவைகளை அளிக்கலாம். கடன் மேற்பார்க்கு பயிற்றப்பட்ட பணியாளர்கள் உதவலாம்; இதன் மூலம் தமது கடன்களைத் திருப்பிச் செலுத்துவது தொடர்பாகக் கடன் பெறுவோருக்கு அறிவூட்டலாம். விஸ்தரிப்பிற்கும் பண்முகப்படுத்தலுக்கும் கடனைப் பயன்படுத்தலாம் என வாடிக்கையாளர்களுக்குக் காட்டலாம். சிறு முயற்சியாளர்கள் தமது மிகை உற்பத்தியைச் சந்தைப்படுத்துவதற்கு உதவும் வகையில் வங்கிகளால் ஒரு சந்தைப்படுத்தல் தகவல் முறைமையைக் கூட ஒழுங்குபடுத்தலாம். பல்வேறு அரசாங்க நிறுவனங்களையும் உள்ளடக்கிய ஒரு சிறிய வர்த்தக ஆலோசனை முகவர் நிலையத்தை அமைப்பதற்குரிய வாய்ப்பு தொடர்பாக நான் சில காலமாகச் கலந்துரையாடி வந்துள்ளேன். இதன் அடிப்படை நோக்கம் சிறிய 'முதலாளிகளையும்' முயற்சியாளர்களையும் ஊக்குவிப்பதாகும். நான் இக் கருத்தை வங்கிச் சமூகத்திற்கு விதந்துரைக்கின்றேன். பணியாளர்களதும் இதேபோன்று வாடிக்கையாளர்களதும் திறன்களை அபிவிருத்தி செய்வதற்குரிய ஒரு நிகழ்ச்சித் திட்டம் இல்லாவிடில் மிகச் சிறிய அளவிலான சாதனைகளையே புரியலாம் என்பதனை நான் வலியுறுத்துகின்றேன். தாம் இயங்குகின்ற சமூகத்தின் ஒன்றிணைந்த ஒரு அங்கமாகப் பணியாளர்கள் மாறவேண்டும். வளர்ச்சியினதும் அபிவிருத்தியினதும் முன்னோடிகளாகப் பணியாளர்கள் தம்மைக் கருதவேண்டும்.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தாபித்தல், நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய கலாசாலைகளை அமைத்தல் ஆகிய நடவடிக்கைகள் கல்வி முறைமையைச் சீர்திருத்துவதற்கான மற்றும் யோசனைகளில் சில வாகும்.

தென்னாசிய நாடுகள் ஒன்றாக வேலை செய்வதன் மூலம் அபிவிருத்தியடைய வேண்டுமென்றும் தங்கள் மக்களுக்கு நல்ல எதிர்காலத்தை உண்டாக்க வேண்டுமென்றும் கொண்டுள்ள பொது நோக்கத்தைச் சாதிப்பதுடன் மட்டுமன்றிப் பரஸ்பர கௌரவம், சமத்துவம், நட்புறவு என்ற அடிப்படையில் பிரச்சினைகளையும் தீர்க்க முடியுமென்று உறுதியாக நம்பப்படுகிறது. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் "விசேஷ கவனம்" தேவைப்பட்ட ஓர் அம்சம் யாதெனில், அதன் அண்டை நாடுகளுடன் இப்பொழுதுள்ளதைவிட அதிக சிநேகமான உறவுகளை உருவாக்குவதாகும். இந்தியாவின் தேசிய நலனுக்கு உதவிய "நன்கு பரீட்சிக்கப்பட்ட, நிலைமாறு" வெளிநாட்டுக் கொள்கையொன்றைத் தமது அரசாங்கம் தலைமுறை யுரிமை வழியால் பெற்றுள்ளதெனத் திரு. காந்தி சுட்டிக் காட்டினார். நீதியையும் சமத்துவத்தையும் பரஸ்பர ஒத்துழைப்பையும் அடிப்படையாகக் கொண்ட அணிசேராமை நியதிக்கும் ஒரு புதிய உலகப் பொருளாதார ஒழுங்கு சம்பந்தமாகவும் நாம் ஏற்றுள்ள கடப்பாடு அசைக்க முடியாததாகும் என அவர் குறிப்பிட்டார். இதன் பொருள் என்னவென்றால், சமாதானம் அபிவிருத்தி ஆகிய இரட்டை இலட்சியங்களுக்கும் எம்மை நாம் முழுமையாக அர்ப்பணித்துள்ளோம் என்பதாகும் என்று திரு. காந்தி மேலும் கூறினார். வெளிநாட்டுக் கொள்கையின் பரமானங்களை (சாரா மாறிகள்) விளக்குகையில் இந்தியப் பிரதமர் கூறினார்: "நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும் பிறநாடுகளின் விவகாரங்களில் தலையிடாதும் குறுக்கிடாதுமிருக்கும் கொள்கைகளிலும் கூட எங்களுக்கு நம்பிக்கை உண்டு."

சர்வதேச பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, "தொல்லைப்படும் ஓர் உலகில் இந்தியா அதன் வரலாற்றையும். அதன் புவியியலையும், சமாதான சகவாழ்வில் அது கொண்டுள்ள நம்பிக்கையையும் முன்னிட்டு, ஆற்றவேண்டிய பங்கொன்று உண்டு" எனத் திரு. காந்தி கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கல்வி – சில கருத்துரைகள்

எஸ். ஹெட்டிகே

கல்விச் சாதனை இலங்கையின் சமூக அசைவில் மிகப் பரவலான ஒரு மூலமாக மாறியிருப்பதாகவும் பல்வேறு மட்டங்களிலும் தகைமைகளை அளிப்பதே கல்வி முறைமையின் அடிப்படைப் பணியாக இருந்துவந்துள்ளதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் சமூகவியற் துறையைச் சேர்ந்த கலாநிதி ஹெட்டிகே இக் கட்டுரையில் வலியுறுத்துகின்றார். இன்று எமது சமூகத்தில் கல்வி செல்வாக்கு மிக்க ஒரு விழுமியமாக விளங்குகின்றது. நீண்டகாலக் கல்வித் திட்டமிடல் கல்வியின் நேர்கணிய அம்சங்களைக் கருத்திற்கொள்ள வேண்டுமெனவும் பொதுக் கல்வியில் பங்கெடுப்போர் பொருளாதாரத்தில் உற்பத்தித் துறைகளுடன் இணக்கம் மிக்க உறவினைக் கொண்டிருத்தல் வேண்டும் எனவும் அவர் கருத்துத் தெரிவிக்கின்றார். இன்றைய நிலைமையைச் சீர்திருத்துவதற்கு கல்வித் திட்டம் எதிர்காலத் தலைமுறையினருக்கு மாற்று இலக்குகள் தொகுதியொன்றை அளிக்க வேண்டும் எனவும் அவர் கருத்துத் தெரிவிக்கின்றார்.

இந் நாட்டின் கல்விச் சாதனைகள் நாம் அறிந்தனவாகும். எமது கல்வி முறைமையுடன் இணைந்தவகையிலான முக்கிய பிரச்சினைகள் உள்ளன என்பதனையும் நாம் அறிவோம். சென்ற காலத்திலும் நிகழ் காலத்திலும் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் இப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தன. கல்வித் துறைக்கு அப்பாற்பட்ட பலகாரணிகள் கல்வி முறையின் பிரச்சினை, வாய்ப்புக்கள் என்பவற்றின் மீது தாக்கத்தைக் கொண்டிருப்பது தொடர்பாக கவனத்தைத் திருப்புவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

எமது தற்போதைய கல்வி முறையின் குறைபாடு என்ன? என்ற வினாவை நான் ஆரம்பத்திலேயே கேட்கின்றேன். இதனை நான் விரிவாக ஆராய விரும்பவில்லை. கல்விக்கும் எமது சமூகத்தின் ஏனைய துறைகளுக்கும் இடையில் சில பாரதூரமான சமவலுவற்ற தன்மையை நாம் எதிர்நோக்குகின்றோம் எனக் கூறுவது தற்போதைய நோக்கத்திற்குப் போதுமானதாகும். பொதுக் கல்வி முறையின் தயாரிப்புக்கள் வெள்ளை ஆடைப்பதவிகளைச் சார்ந்திருத்தல், எமது பாடவிதான வலியுறுத்தலில் சடுதியான மாற்றம், கல்வித் தயாரிப்புக்களுக்கும் மனித வளத் தேவைகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க இடைவெளி போன்றவற்றில் இச் சமவலுவின்மை பிரதிபலிக்கப்படுகின்றது. எமது சூழலில் இச் சமவலுவின்மை எவ்வாறு தோன்றியது? இவ் வினாவிற்கு விடையளிப்பதற்கு நாம் எமது கல்வி முறையின் அண்மைக் கால வரலாற்றை மாத்திரம் நோக்காது, இங்கு தவறு ஏற்பட்டுள்ளது எனப்பார்த்து, உள்ளூர் நிலைமையை வேறொரு இடத்தின் நிலைமையுடன் ஒப்பிடுதலும் வேண்டும்.

அபிவிருத்தியடைந்த மேற்கு நாடுகளைப் போலன்றி இலங்கையில் கல்விச் சாதனைகள் சமூக அசைவில் மிகப் பரவலான ஒரு மூலமாக மாறியுள்ளன. வெள்ளை ஆடைத் தொழிலுக்கும் ஏனைய தொழில்களுக்கும் இடையிலான இடைவெளி தொடர்ந்தும் வளர்ச்சி அடைந்ததனால் இது மிகத் தெளிவான ஒரு சமூகவியல் காரணியாக இருக்கின்றது. சமகாலச் சமூகத்தில் ஒரு பிரசை தனது அடையாளத்தை விருத்தி செய்வதற்கு அவனுக்குக் கிடைக்கக்கூடிய எல்லா மார்க்கங்களையும் பயன்படுத்துவதற்கு ஆவலாக உள்ளான். சென்ற காலங்களில் போன்று இன்று மனிதனின் அடையாளம் குறிக்கப்படவில்லை எனக் கோட்பாட்டு அடிப்படையில் கூறலாம்.

குறிப்பாகக் கடந்த சில தசாப்தங்களாக இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் இரு பிரதான சக்திகள் செயற்பட்டுள்ளன. ஒரு புறத்தில் பணியகமும் பொதுநலவாதமும் வளர்ச்சியடைந்துவந்தன. நிருவாகிகள், எழுதுவினைஞர்கள், தாதிகள், ஆசிரியர்கள், விஸ்தரிப்பு ஆளணியினர் போன்ற பல்வேறு துறைகளிலும் கேள்வி அதிகரித்து வந்துள்ளது. மறு புறத்தில் விஸ்தரிப்பு அடைந்துவந்த உள்ளூர்க் கல்வி முறைமை, புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய 'தகைமை' வாய்ந்தோரை உற்பத்திசெய்தது. அண்மைக் காலத்தில் இத்தகைய வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடவும் தகைமை வாய்ந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று. இவ்வாறாக நிரம்பலுக்கும் கேள்விக்கும் இடையில் சமவலுவின்மை ஏற்பட்டது. பொருளாதாரம், சமூக முறைமை, கலாசார விழுமியங்கள் போன்ற பல்வேறு துறைகளிலும் ஏற்பட்ட மாற்றங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கவனமாக அவதானித்திருப்பின் இதன் விளைவுகளைச், சிறப்பாக ஆரூடம் கூறியிருக்கலாம்.

சமகால உலகின் எந்தவொரு நாட்டிலும் தெளிவாகத் தென்படுவது போன்று வெள்ளை ஆடைத் தொழில்களுக்கும் ஏனைய தொழில்களுக்கும் இடையிலான மெய் வளர்ச்சி விகிதாசார அடிப்படையிலேயே அமைந்துள்ளது. அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடுகளில் இடம் பெறுகின்ற தொழினுட்பவியல் புரட்சியின் விளைவாக ஏற்படுகின்ற பாரிய கைத்தொழில், விவசாய உற்பத்தி வளர்ச்சியின் விளைவாக இத்தொழில்கள் மிக வேகமாக வளர்ச்சியடைந்தன. இத்தொழினுட்ப அபிவிருத்தி உற்பத்தியைப் பாதிக்காது ஊழியப் படையில் ஒரு பெரும் பகுதியைச் சேவைத் துறைக்கு மாறவைத்தது. இவற்றுள் சில நாடுகளில் சேவைத்துறை குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றதனால் சில சமூகவியலாளர்கள் இத்தகைய சமூகங்களைக் கைத்தொழிற் பின் சமூகம் என அழைத்தனர்.

நாடு பூராகவும் கல்வி வாய்ப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டதனால் தொழில் தேடுகின்ற தகைமை வாய்ந்தோரின் நிரம்பல் இலங்கையில் அதிகரித்தமை யாவரும் அறிந்ததொன்றாகும். இச்செய்முறை ஏனைய பல்வேறு காரணிகளாலும் தூண்டப்பட்டது.

சென்ற காலங்களில் இலங்கையின் கிராமீயச் சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், மேற்குலகின் கிராமப் புறங்களில் ஏற்பட்ட தீவிர மாற்றங்களுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் பல தசாப்தங்களாக இவை அசைவுறுது இருந்து வந்துள்ளன. மேற்குலகில் சனத்தொகை மையங்கள் நாட்டுப் புறத்திலிருந்து நகர்ப்புறங்களை நோக்கி நகர்ந்தன. இலங்கையில் கிராமீய - நகர்ப்புற சமவலு பெருமளவிற்கு மாற்றமடையாதிருந்தது; பெரும்பான்மையான கிராமீய மக்கள் உள்ளூர் மூலவளங்களில் - குறிப்பாக நிலம் — கூடுதலான அமுக்கத்தை ஏற்படுத்தி, தொடர்ந்தும் கிராமங்களில் வாழ்ந்தனர். தீவிர கைத்தொழில் வளர்ச்சி இன்மையால் உள்ளூர்ப் பட்டணங்களும் நகரங்களும் கிராமீய மக்களில் பெருந்தொகையானோருக்கு இடவசதி அளிக்க இயலாதிருந்தது மாத்திரமன்றி கிராமீயப் பொருளாதார மிகையில் தொடர்ந்தும் அதிகரித்த பங்கினை நகரலாயின. கிராமீய சனத்தொகையின் வாழ்க்கை வாய்ப்புக்கள் மெதுவாக மாற்றமடைவதற்கு இந்நிலைமை பெரும்பாலும் காரணமாகவிருந்தது. இருப்பினும், குறிப்பாக இளைஞர்களிடையிலும் கல்வி கற்றோரிடையிலும் சமூக அசைவிற்கான அவா வளர்ச்சியடைந்தது. இது சுதந்திரமானதும் பரவலானதுமான ஒரு சமூகத்தில் இடம்பெறுகின்ற இயற்கையான போக்காகும். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இத்தகைய ஒரு சமூகம் மெய்யானதும் குறிப்பானதுமான வாய்ப்புக்களைத் தமது அடையாளத்தை மேம்படுத்துவதற்கு பிரஜைகளை ஊக்குவிக்கும். இப்பின்னணியிலேயே கல்வி முறைமையின் சிறப்புக்களையும் மட்டுப்பாடுகளையும் ஆராயவேண்டும்.

உரிய மட்டங்களை வெற்றிகரமாக அடைவோருக்கு

பல்வேறு மட்டங்களிலும் தகைமைகளை அளித்தல் எமது பொதுக் கல்வி முறைமையின் அடிப்படை பணிகளுள் ஒன்றாகும். பல்வேறு தொழில்களுக்கும் ஆட்களைச் சேர்க்கையில் இத்தகைமைகள் பிரதான அளவுகோளாக மாறின. உதாரணமாக: க. பொ. த. (சாதாரண) கீழ், இடைநிலை தொழில்களுக்குரிய அடிப்படைத் தேவையாகவிருந்ததுடன் பல்கலைக்கழகப் பட்டம் உயர் பணியாளர் பதவிகளுக்குரிய அடிப்படைத் தகைமையாகவும் விளங்கியது.

ஒரு தகைமை என்பது ஒரு மனிதனின் திறமைகளைக் காட்டுகின்ற ஒரு குறிகாட்டியாகும். தகைமை, ஒருவருக்குரிய குறிப்பிட்ட பணியைக் குறிப்பிடாததனால் க. பொ. த. சான்றிதழை உடைய ஒருவர் பல வேலைகளைக் கருத்திற் கொண்டிருக்கலாம். இது தொடர்பாக விதிவிலக்கு இருந்தபோதிலும் பல தகைமைகளைப் பொறுத்தவரையிலும் இது உண்மையாகும். இங்கு நாம் ஒரு பிரதான பிரச்சினையை அடையாளம் காணுகின்றோம்; பல்வேறு பணிகளுக்கும் தேவைப்படுகின்ற தகைமைகளுக்கும் திறன்களுக்கும் இடையிலான வேறுபாடே இப்பிரச்சினையாகும். இத்தகைய தகைமைகளைப் பெறுவோர் உற்பத்தித் தொழிற் துறைகளால் கவரப்படாதிருத்தல் இப்பிரச்சினைக்குரிய ஒரு காரணமாகும்.

சான்றிதழ்களை வழங்குகின்ற பொதுக் கல்வி முறைமை மாணவர்களைப் பல்வேறு பணிகளுக்கும் பயிற்றுவிப்பதில்லை. பாடசாலை முறைமையானது சமூகத்தில் கல்வி, சமூக எண்ணம் போன்றவற்றுக்கு மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கு மேலாக அவர்களைப் பொதுப் பரீட்சைகளுக்குத் தயார்படுத்துகின்றது. சிலர் இப்பரீட்சைகளில் சித்தியடைகின்றனர்; இன்னும் சிலர் சித்தியடைவதில்லை. சிலர் தமது சான்றிதழ்களின் துணையுடன் வேலைவாய்ப்பினைப் பெறுகின்றனர்; இன்னும் சிலர், வேலைவாய்ப்பினைப் பெறுவதில்லை. இப் பொது முறைமையில் பங்கெடுத்து, தகைமைகளைப் பெறத் தவறுகின்ற பெரும்பாலானோர் கிடைக்கக்கூடிய எத்தகைய வேலை வாய்ப்புக்களையும் ஏற்றுக்கொள்கின்றனர்; பலர் பல்வேறு காரணங்களுக்காக இவற்றை ஏற்க மறுக்கின்றனர். தாம் கற்கின்ற பாடங்கள் எவ்வாறிருப்பினும், சான்றிதழ்களை வைத்துள்ள பெரும்பாலானோர் வெள்ளை ஆடைத் தொழில்களைத் தேடுகின்றனர். இது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே நாட்டில் நிலவிய அந்தஸ்து வேறுபாட்டுப் போக்கிற்கு குடியேற்றதை ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னரும் எழுச்சியடைந்த வெள்ளை அணித் தொழில் புதிய அம்சத்தை அளித்தது. வெகுமதிகள், புதிய சமூக விழுமியங்கள், கலாச்சார சின்னங்கள் போன்ற குறிப்பிட்ட பொருள் சார்ந்ததும், சாராதது மான சூழ்நிலைகளால் 'வெள்ளை அணித் தொழில் பரந்துபட்டரீதியில் ஒரு வாழ்க்கை முறையாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டது இவ்விரிவான அந்தஸ்து உருவாக்கத்தின் விளைவாக ஆகக் குறைந்தது மூன்று சக்திகள் ஏற்பட்டன.

- சமூகத்தில் எழுச்சியடைந்து வந்த செல்வாக்குமிக்க விழுமியங்கள்; பொதுவாக சமூக அங்கத்தவர்கள் இவற்றை ஏற்குமாறும் கடைப்பிடிக்குமாறும் பலவந்தப்படுத்தப்பட்டனர்.

- நவீன கல்வி விழுமியங்களுடன் இணைந்ததும் நாளாந்த நடத்தை மாதிரியில் பிரதிபலிக்கப்பட்டதுமான விழுமியங்கள். உதாரணமாக: ஒரு விவசாயத் தொழிலாளி யாவதற்கு பாடசாலையை விட்டு காலகதியில் விலகிய கிராமீயப் பாடசாலையின் பழைய மாணவனையும், கல்விச் சான்றிதழைப் பெற்று, நகர அலுவலகம் ஒன்றில் கணக்கியல் எழுதுவினைஞராக வந்த கிராமீயப் பாடசாலையின் மாணவனையும் நாம் எவ்வாறு ஒப்பிடுவோம்.

- சமூகத்தில் கிடைக்கின்ற பொருள் சார்ந்ததும் சராதுமான வெகுமதிகள்.

'வெள்ளை அணி' ஒருமைத் தன்மை மிக்க ஒரு சமூக அந்தஸ்து அல்ல. ஒரு பாரிய சமூக அமைப்பிற்குள் பரவலாக்கத்தின் ஒரு உப முறைமையாகவே அது விளங்குகின்றது. ஆனால் ஒரு வறிய, கல்வி கற்காத கிராமவாசியைப்பொறுத்த வரையிலும் ஒரு நகர்ப்புற அலுவலகத்தில் கடமைபார்க்கின்ற எல்லோருமே புத்தி ஜீவிகள் குழாத்திள் அங்கத்தவர்களாகத் தென்படுவர்; ஆனால் உண்மை இதுவல்ல. இது பன்முகப்பட்டதாகவிருந்த போதிலும், எமது சமூகத்தில் உள்ள உந்துதலுள்ள இளைஞர்களுக்கு 'வெள்ளை அணிச் சமுதாயம்' ஒரு குறிப்பிடத்தக்க "உசாத்துணைக் குழு" வாக விளங்குகின்றது. பெரும்பான்மையானோருக்கு இதனை அடையக் கூடிய ஒரே மார்க்கம் கல்வி முறைமையாகும். இது வழமையாக இத்தொழில்களுக்குத் தேவையான தகைமைகளை அளிக்கின்றது.

பாடசாலையில் சேருகின்ற ஒவ்வொரு பிள்ளையும் வெள்ளை அணித் தொழிலைப் பெறுவதற்கு ஆசைப்படுகின்றனர் எனத் தவருக விளங்கிக்கொள்ளக் கூடாது. உண்மையில், குறிப்பாக கிராமப் புறங்களில், பலர் பல்வேறு காரணங்களின் விளைவாகத் தமது எதிர்கால வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படுவதற்கு முன்னரே பாடசாலையை விட்டு விலகுகின்றனர். கல்வியின் ஏனைய பல்வேறு மட்டங்களையும் அடைவோர் உடலுழைப்பினைச் சாராத தொழில்களையே விரும்புகின்றனர். இவ்விரு பகுதியினரும் பருவமடைந்ததன் பின்னர் இவர்களுக்கு இடையிலான சமூக இடைவெளி விரிவடைகின்றது.

உடலுழைப்பு சாராத வேலைகளை விரும்புகின்ற இளைஞர்களின் 'பாரிய உற்பத்தி' அண்மைய வருடங்களில் மிக முக்கியமான ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. அவற்றைப் பெற்றிருப்போரில் குறிப்பிட்ட ஒரு வீதமானோருக்கு தொழில்களை அளிக்காத 'தகைமைகளை' அளித்தல் தர்க்கரீதியானதா என்ற வினாவைக் கேட்கக் கூடிய அளவிற்கு இப்பிரச்சினை முக்கியமானதாகியுள்ளது. இந் நிலைமையைச் சீராக்குவதற்கு கலைத்திட்ட மாற்றங்கள் உதவலாம் என கல்வித் திட்டமிடுவோரையும் இது சிந்திக்கப் பலவந்தப் படுத்தியுள்ளது. மரபுரீதியற்ற கல்வியை அளிப்பதனை நோக்கமாகக் கொண்ட மாற்றங்கள், உற்பத்தித் தொழிற் துறைகளுக்குத் தேவையான திறன்களை மாணவர்களுக்கு அளிக்கும் என பாடவிதானத்தில் மாற்றத்தை வேண்டுவோர் கருதுகின்றனர். இத்தகைய கருத்தின் இயலுமான தன்மையையோ அல்லது அவற்றை அமுல்படுத்துகையில் எதிர்நோக்குகின்ற செய்முறைப் பிரச்சினைகளையோ நான் இங்கு ஆராய விரும்பவில்லை. எனினும், இத்தகைய ஒரு மாற்றம் பாடசாலையிலிருந்து வெளியேறுவோர்களுள் குறிப்பிடத்தக்க விகிதாசாரத்தினரை உற்பத்தித் தொழில் துறைகளுக்குத் திருப்புவதனை நோக்கமாகக் கொண்டிருப்பின், அத்தகைய மாற்றங்கள் அமைப்பு ரீதியானதாக விருத்தல் வேண்டும். என்பதனை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். அதாவது இது பாடப் பட்டியலை மாற்றுவதனை நோக்கமாகக் கொண்டிராது. 'வெள்ளை அணித்' தொழில்களை நோக்கி மாணவர்களை ஊக்குவிக்கின்ற நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். பாடவிதான மாற்றங்களின் தாக்கம் மிக்க அமுலாக்கம், நேர்மை என்பவற்றை மாத்திரம் உறுதிப்படுத்துவதனை இச் சந்தர்ப்ப மாற்றங்கள் கருத்திற் கொள்ளாது, புதிய முறைமை சம சந்தர்ப்பம் என்ற உறுதியான தத்துவத்திற்கு குள்ளாகச் செயற்படக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

பல்வேறு கல்விச் சான்றிதழ்கள் அண்மையில் 'மதிப்பிறக்கப்பட்ட' போதிலும் கல்வி மீதான சுருக்கம் என்றும் போல் கூடுதலாக இருப்பதிலிருந்து 'வெள்ளை அணித்' தொழில்களை நாடுகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபர்களின் போக்கு மீளுறுதிப் படுத்தப்பட்டிருப்பதனை அவதானிக்கலாம். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இசை பொருள் சார்ந்தனவாகவும் சாராதனவாகவும் உள்ளன. பல்வேறு பொருள்சார் வெகுமதிகள், சமூக கௌரவம், செல்வாக்கு, கலாசாரக் குறியீடு என்பவற்றால் பாதிக்கப்பட்ட வெவ்வேறு வாழ்க்கை முறைமைகளுடனும் பல்வேறு தொழில்களும் இணைவரையாக விருந்து இவ்வாழ்க்கை முறைகள் நேர்கணியக் காரணிகள் குறியீடுகள் என்பவற்றுடன் இணைந்தால், அவை எதிர்க்கணியங்களுடன் இணைந்துள்ளவற்றை விடவும் மிகக் கவர்ச்சிகரமானதாக அமையும். சமூகத்தில் தனிமனிதன் எப்பொழுதும், ஆகக்குறைந்தது குறியீட்டு அடிப்படையிலாவது, நேர்கணிய வாழ்க்கை முறையுடன் தன்னை அடையாளம் காண முயற்சிக்கின்றான். ஆகையால், உற்பத்தி சாராத தொழிற்றுறைகளிலிருந்து மாணவர்களின் விகிதாசாரத்தைக் குறைப்பதற்குத் தற்போது கவர்ச்சியற்ற அல்லது குறைந்த கவர்ச்சியுள்ள தொழில்களை, 'வெள்ளை அணித்' தொழில்களுக்குச் சமனாக அல்லது கூடுதலாகக் கவர்ச்சிகரமாக்குதல் வேண்டும் எனக் கருதுவது தர்க்க ரீதியானதாகும். இதற்குக் கல்வி முறைமை ஒன்றிணைக்கப்படுதல் வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதிப்பரீட்சையில் சித்தியடைவோரில் 20 சதவீதத்தினர் மாத்திரமே இன்று பல்கலைக்கழகங்களில் சேர்க்கப்படுகின்றனர். மேலும், க. போ. த. (சாதாரண தர), க. பொ. த. (உயர்தர) பரீட்சைகளில் சித்தியடைந்த குறைந்த தகைமை உடையோரின் நிலைமை எவ்வாறிருந்த போதிலும், பல்கலைக் கழகக் கல்வியைப் பூரணப்படுத்துவோரில் குறிப்பிடத்தக்க தொகையினர் தமது தகைமைக்குப் பொருத்தமான தொழில்களைப் பெறும் வரையில் இன்னும் சில வருடங்களை வீணாக்க வேண்டியுள்ளது.

'வெள்ளை அணித்' தொழில் தேடுகின்ற எல்லோருமே அத்தகைய தொழில்களைப் பெற இயலாதிருத்தல் வாய்ப்புக்களுக்கும் எதிர்பார்க்கைகளுக்கும் இடையிலான பாரிய இடைவெளி நிலவுவதனைக் காட்டுகின்றது. இதற்குத் தீர்வு என்ன? சேவைத் துறையில் கூடுதலான தொழில்களைத் தோற்றுவிப்பதா? ஏற்கனவே குறிப்பிட்டது போன்று சேவைகள் உற்பத்தித் துறைக்குப் புறம்பாக வளர்ச்சி அடைய இயலாது; முன்னையது பின்னையதில் கட்டாயமாகத் தங்கியுள்ளது. எனினும், கொள்கை, திட்டமிடல் என்பவற்றின் மூலம் சமநிலையை ஏற்படுத்த இயலாது என்பது இதன் கருத்தல்ல. ஆனால் இயற்கையான சமநிலை குலைக்கப்பட்டு, இரண்டிற்கும் இடையில் நிலவிய நல்லுறவு பாதிக்கப்படும். எனவே உற்பத்தி, சேவைத் துறைகள் ஒன்றிணைந்து வளர்ச்சியடைந்து ஒன்றிற்கொன்று விகிதாசார அடிப்படையில் அமைதல் வேண்டும். நவீன கல்வியுடன் இவற்றிற்கு உள்ள தொடர்பின் அடிப்படையில் நவீன வாழ்க்கையில் மிகத்தாக்கமாகப் பங்கெடுக்கக் கூடிய சேவைகள், முகாமைத்துவம், சட்டம், அரசியல், கல்வி, சௌக்கியம் போன்ற சேவைகளுக்கு மாத்திரம் கிடைக்கக் கூடாது; பௌதிக உற்பத்தித் துறைக்கும் இது கிடைக்க வேண்டும். ஒரு பொருளாதாரத்தின் சேவைத்துறை அதன் இயக்கத்திற்கு உற்பத்தித் துறையில் பெருமளவிற்குத் தங்கியிருப்பதே இதற்குக் காரணமாகும். நீண்டகாலக் கல்வித் திட்டமிடல் இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு, பொதுக் கல்வியும் அதில் பங்கு பற்றுவோரும் சேவைத் துறைகளுடன் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்தும் வகையில் மாற்றங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று எங்கும் பரந்துள்ள ஒரு சில சமூக - கலாசார சக்திகளின் செல்வாக்குக் காரணமாகக் கல்விச் சீர்திருத்தத்தைத் தாக்கமான முறையில் அமுல்படுத்துவது கடினமாகும். இங்கு நாம் தனிப்பட்டவர்கள் பற்றியோ அல்லது அவர்களது நடத்தை பற்றியோ ஆராயவில்லை; ஆனால் விழுமியங்கள், தரங்கள் என்பவற்றால் மாத்திரமன்றி, சமூகத்தில் பொருள்கள், பொருள் சாராத வெகுமதிகளின் பகிர்வின் பண்பினாலும் உருவாக்கப்பட்ட மக்கள் குழுக்கள், நிறுவனமாக்கப்படுத்தப்பட்ட நடத்தை மாதிரிகள் என்பன பற்றியும் ஆராய்கின்றோம்.

சென்ற காலங்களில் போலன்றி இன்று கல்வி சமூகத்தில் செல்வாக்கு மிக்க ஒரு விழுமியமாக மாறியுள்ளது. கல்வி கற்காத அல்லது குறைந்த அளவு கல்வி கற்ற ஒரு மனிதன் செய்கின்ற உடலுழைப்புத் தொழிலைத் தனது பிழைப்பூதியத்திற்காகச் செய்வதிலிருந்தும் கல்வி கற்ற மனிதன் தவிர்த்துகொள்ளல் கற்றலில் ஒன்றிணைந்த ஒரு அம்சமாக மாறியுள்ளது. மேலும் இன்று உடலுழைப்புத் தொழில்களதும் உடலுழைப்புச் சாராத தொழில்களதும் ஒதுக்கீடானது மரபுரீதியான அளவுகோள்களின் அடிப்படையில் அமையவில்லை. இந்த எழுச்சியடைந்து வருகின்ற நிலைமை தனிமனிதனுக்கு ஒரு சவாலாக உள்ளது.

நீண்ட காலமாக உடலுழைப்புத் தொழிலுக்கான வெகுமதி உடலுழைப்புச் சாராத தொழிலுக்குரிய வெகுமதியை விடவும் குறைவாகவே இருந்து வந்துள்ளது. குறித்த சேவைகளில் ஈடுபட்டுள்ளோர் குழுக்களாக ஒழுங்குபட்டுப் பல்வேறு உடலுழைப்பு உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ளோரை விடவும் கூடுதலான செல்வாக்கு, பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார் வெகுமதிகள், சமூக அந்தஸ்து என்பவற்றைக் கொண்டுள்ள நவீன சமூகத்தில் இது உண்மையாகப் புலப்படுகின்றது. 'நவீன' பணியாக உயர் குழாத்தினர் இதற்குச்சிறந்த உதாரணமாகும். எனவே கூட்டாகவும் தனியாகவும் தமது அடையாளத்தைத் தொடர்ச்சியாகத் தேடுகின்ற எமது வாலிப சமூக அங்கத்தவர்களுக்குரிய இலக்குகளை நாம் வைத்துள்ளோம். பாடசாலைப் பிள்ளைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு குழுவினரை நாம் பேட்டி கண்டால் இவ்விலக்குகள் பற்றிய ஒரு பட்டியலை நாம் தயாரிக்கலாம். எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள இவ்விலக்குகளை அடைய முயற்சிக்கின்ற எமது சமூகத்தின் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், எமது மாற்றமடைந்து வருகின்ற சமூகம், கலாசாரம் என்பவற்றின் சக்திகளுடன் இணைந்த வகையிலேயே நடக்கின்றனர். இந்த ஆற்றுப்போக்கு சில காலமாக ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் இன்று அது நிரம்பி வழிகின்றது. நாம் இதனைத் தொடர்ந்தும் புறக்கணிக்க இயலுமா? இது பற்றிக் கவனிப்பதாயின், இன்றைய நிலைமைக்குப் பொறுப்பாகவுள்ள சக்திகளை அடையாளம் கண்டு, நிலைமையைச் சரிக்கட்டுவதற்கு ஒன்றிணைந்த ஒரு திட்டத்தை உருவாக்கவேண்டும். எதிர்கால சமுதாயம் மாற்று இலக்குகளை முன்வைப்பதனை இத்திட்டம் வேண்டிநிற்கும். மேலும் இதற்கான மார்க்கங்களும் அளிக்கப்பட வேண்டும். இப்புதிய மார்க்கங்களும் இலக்குகளும் தேசிய கல்வி முறைமையுடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் புனரமைக்கப்பட்டதன் பின்னர், 1984 இன் இரண்டாம் அரைப் பாகத்தில் தனியார் துறைக் கைத்தொழில் வளர்ச்சி மேலும் அதிகரிக்கலாம். மகாவலி நீர் மின்வலுத் திட்டத்தின் கீழ் விக்டோரியா நீர் மின்வலுத் திட்டம். (இது மேலதிகமாக 210 மெகவோட் வலுவை அளிக்கும்,) செயற்படத்துவங்கியதன் பின்னர் கைத்தொழில், வர்த்தக துறைகளின் விரிவாக்கத்திற்கு மேலதிக ஊக்குவிப்பினை அளிக்கும். அதிகரித்த நீர் மின்வலுவின் விளைவாக அனல் வலுப்பாவனை குறைவடைவதனால் பெற்றோலிய நுகர்வு வீழ்ச்சியடைந்து, ஓரளவிற்குப் பெற்றோலியத்தைச் சேமிக்கலாம். இதேபோன்று செய்தித்தொடர்பு, போக்கு வரத்து, வர்த்தக வசதி விரிவாக்கம் போன்ற தற்போது அமுல்படுத்தப்படுகின்ற பொது வசதி வேலைகள் முடிவடைந்ததன் பின்னர் கைத்தொழில் வர்த்தகத் துறைகளில் முதலீட்டு வாய்ப்புக்கள் விரிவடைந்து 1984 இல் ஏனைய பொருளாதாரத் துறைகளில் கூடிய வளர்ச்சி விகிதாசாரத்தைத் தோற்றுவிக்கும்.

1984 இன் முதலரைப் பாகத்தில் எழுச்சியடைந்துள்ள இப்போக்குகளதும் இது வரையிலும் இவ்வருடம் பண நிரம்பல், கடனுக்கம், அரசாங்க நிதி அபிவிருத்திகள் என்பவற்றினதும் பின்னணியில் 1984 இல் வீக்க விகிதாசாரத்தில் வீழ்ச்சி ஏற்படும் எனலாம். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் இன்னொரு குறிகாட்டியாகும்; சென்ற வருட முதலரைப் பாகத்தில் 10 சதவீதமாகவிருந்த இதன் வளர்ச்சி விகிதாசாரம் இவ்வருட முதலரைப் பாகத்தில் 8 சதவீதமாகவிருந்தது. 1984 ஜனவரி - ஜூன் காலப்பகுதியில் மொத்த விலைச் சுட்டெண்ணின் வளர்ச்சி விகிதாசாரம் 3 சதவீதமாகவிருந்தது; சென்ற வருடம் இதே காலப் பகுதியில் இது 19 சதவீதமாக விருந்தது. இப்போக்குகள் வருடத்தின் இரண்டாம் அரைப் பகுதியிலும் தொடர்ந்து நிலவும் என நாம் கொண்டால் 1984 இல் குறைந்த வீக்க விகிதாசாரத்தை அனுபவிக்கலாம்.

அதிகரித்த தேயிலை விலையின் விளைவாக வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்ததனால் இவ் வருட முதலரைப பகு[illegible]வான பண நிரம்பல் 7 சதவீதத்தால் அதிகரித்தது. வீக்க அமுக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இறுக்கமான நிதிக் கொள்கைகடைப் பிடிக்கப்பட்டதனால் 1984 ஜனவரி - ஜூன் காலப் பகுதியில் உள்ளூர் கடனுக்கம் 2.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதிகரித்த வருமானம், சிறந்த செலவு முகாமைத்துவம் என்பவற்றின் விளைவாக 1984 இல் வரவுசெலவுத் திட்டத்தின் பொதுத் தோற்றம் திருப்திகரமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேயிலைச் செழிப்பும் அதிகரித்த இறப்பர் விலைகளும் இவ்வருட முதலரைப் பகுதியில் அரசாங்கத்தின் ஏற்றுமதித் தீர்வை வருமானத்தை அதிகரிக்கச் செய்துள்ளன. குறிப்பிடத்தக்க அளவு வருமானம் அதிகரித்துள்ள வேளையில், அரசாங்க செலவினத்தில் மிதமான அதிகரிப்பு ஏற்படுவதனால் நடைமுறைக் கணக்கில் மிகை ஏற்பட வேண்டும். இது 1984 இல் மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறையைக் கட்டுப்படுத்த உதவும். இதன் விளைவாக நிதிப்படுத்தல் மூலங்களின் விரிவாக்கம் குறைக்கப்பட்டு, வரவுசெலவுத் திட்டக் கொள்கையில் வீக்கத்தாக்கத்தை ஏற்படுத்தும்.

1984 இன் மத்திய பகுதியில் எழுச்சியடைந்த போக்குகள் தொடர்ந்து நிலவுமாயின், 1984 இன் இறுதியில் விலை உறுதி, பொருளாதார வளர்ச்சிக்குரிய உறுதியான நிலைமைகள், அதிகரித்த வேலைவாய்ப்புக்கள் என்பவற்றை அடையலாம். மேலைத் தேச கைத்தொழில் நாடுகளில் மிதமான பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகின்ற சர்வதேசப் பொருளாதாரச் சூழலும் 1984 இல் இலங்கையில் இத்தகைய விளைவு ஏற்படுவதற்கு வாய்ப்பாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபெக்குக்கான வாய்ப்புக்கள் தப்பெண்ணங்களும் யதார்த்தமும்

வி. சந்திரசேகர ராவ்

எம். கே. கஞ்சு

1970 களில், சுத்திசெய்யாத எண்ணெயில் இரு "திடீர் விலை யேற்றங்கள்" ஏற்பட்டன. 1973 - 74 ம் ஆண்டுகளில் எண்ணெய் விலைகள் நாலுமடங்கு உயர்த்தப் பட்டதால், எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் பெரும் பாலானவற்றின் மெய்வருமானங்கள் பெருகின. 1975 - 78 ம் ஆண்டுகளில் உலக எண்ணெய் விலைகள் இலேசாக வீழ்ச்சியுற்றன; பின்னர் 1979 - 80 ம் ஆண்டுகளில் இருமடங்கு ஏறி, பீப்பா ஒன்று சுமார் 35 டொலராக உச்ச நிலையை அடைந்தன. உலகப் பொருளாதாரம் மந்த நிலையை அடைந்தபோது, பீப்பா ஒன்றின் விலையில் சுமார் 6 டாலர் வீழ்ச்சியடைந்தது. அத்தசாப்தம் உலக பெற்றோலியம் கைத்தொழிலின் வரலாற்றிலும் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பொருளாதார சக்தியிலும் ஒரு புதிய யுகத்தை அங்குரார்ப்பணஞ் செய்தது. தசாப்தத்தின் முடிவில் எண்ணெயின் விலை ஆரம்பத்திலிருந்ததைவிட ஏறக்குறைய 20 மடங்கு உயர் வாயிருந்தது. அதனால் உபயோகிப்பாளர், உற்பத்தியாளர் ஆகிய இரு சாராருக்கும் சமூக, பொருளாதாரத் துறைகளில் ஆழ்ந்த விளைவுகள் ஏற்பட்டன.

உலகப் பொருளாதாரத்தில் தோன்றிவரும் புதிய போக்குகளையும், வளர்முக நாடுகளிலுள்ள சந்தைகளின் பரிமாணம் அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகளையும், நெடுங்காலமாக நீடித்த உலகப்பொருளாதார மந்தத்தின் காரணமாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் வளர்ச்சி வேகம் குறைந்துள்ளதையும் முன்னிட்டு, தெற்கும் தெற்கும் ஒத்துழைக்க வேண்டிய அவசியம் இன்று அதிகரித்துள்ளது. தெற்கு - தெற்கு ஒத்துழைப்பு பலமடைந்தால், மூன்றும் உலகநாடுகள் தங்களுடைய பொருளாதார வினைத்திறனை அதிகரிக்கவும், வடக்குக்கும் தெற்குக்குமிடையே பேச்சுவார்த்தைகளில் தங்களுடைய நிலையைப் பலப்படுத்திக் கொண்டு, பழைய சர்வதேச ஒழுங்கைத் தகர்ப்பதிலும் புதிய சர்வதேச ஒழுங்கை ஸ்தாபிப்பதிலும் உதவியாயிருக்கும்.

பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் ஸ்தாபனத்தைப்பற்றி விரிவான அளவில் பரவியுள்ள சில தப்பெண்ணங்கள் நீக்கப்பட வேண்டியதவசியமாகும். ஏனென்றால் இத்தகைய தப்பெண்ணங்கள் தொடர்ந்து இருந்து வருவதால், விற்போருக்கும் வாங்குவோருக்குமிடையே பரஸ்பர சார்பு வளர்வதைவிட சீராக்கல்கள் தாமதமாகின்றன; கொள்கைகள் திசைதப்பிவிடுகின்றன; தகராறுகள் அதிகரிக்கின்றன. இந்நோக்கத்துக்குரிய தரவுகள் உலகவங்கியின் உலக அபிவிருத்தி அறிக்கைகளிலிருந்தும், சர்வதேச நாணய நிதியத்தின் நிதிப்புள்ளி விவரங்களிலிருந்தும், ஒபெக் செயலகம் வழங்கிய தகவல்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டன.

'ஒபெக்'கில் ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா ஆகிய மூன்று கண்டங்களைச் சேர்ந்த 13 அங்கத்துவ நாடுகள் அடங்கியுள்ளன. 1960 ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 14 ம் திகதி அமைக்கப்பட்டபோது, அதில் ஐந்து ஸ்தாபக அங்கத்துவ நாடுகள் - ஈரான், ஈராக், குவைத், சவூதி அரேபியா, வெனிசுலா - இருந்தன. பின்னர், கட்டார், இந்தோனீஷியா, லிபியா, அபுதாபி (இது 1974 ம் ஆண்டில் ஐக்கிய அரபு எமிரேட்டுகளுடன் இணைந்தது), அல்ஜீரியா, நைஜீரியா, ஈக்குவடார், கபோன் ஆகிய நாடுகள் முழு அங்கத்துவ நாடுகளாக ஒபெக் ஸ்தாபனத்தில் சேர்ந்தன.

பெரிய சர்வதேச எண்ணெய்க் கம்பெனிகளுக்கெதிராக பெற்றோலியம் ஏற்றுமதிசெய்யும் நாடுகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இந்தக்குழு (ஒபெக்) அமைக்கப்பட்டது. "செவன் சிஸ்டர்ஸ்" எக்ஸன், டெக்ஸகோ, ரேயல்டச்சு/ஷெல், மொபைல், கல்ப்'பிரிட்டிஷ் பெற்றோலியம், ஸ்டாண்டர்ட் ஒயில் கலிபோர்னியா என்று பொதுமக்களிடையே அறியப்பட்ட இந்தச் சர்வதேச எண்ணெய்க் கம்பெனிகள் விலைகளைக்கட்டுப்படுத்தியதுடன் பல தடவைகள் அவற்றைக் குறைத்துமிருக்கின்றன.

"செவன் சிஸ்டர்ஸ்" கம்பெனி எவ்வளவு எண்ணெயை வாங்க வேண்டும், எவ்வளவு எண்ணெய் விற்கப்படவேண்டும், அது யாருக்கு விற்கப்படவேண்டும், என்ன விலைகளில் அது விற்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் கட்டுப்படுத்தியது. இக்கம்பெனி அளவில்லா இலாபங்கள் ஈட்டி, பிரமாண்டமான நிதிகளைச் சுயாதிகாரத்திற்குள் குவித்த அதே சமயத்தில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்ட நாடுகள் உண்மையான பெறுமதியில் மிகச் சிறு பாகத்தையே பெற்றன. 1959 ம் ஆண்டிலும் 1960 ம் ஆண்டிலும் இந்தக் கம்பெனிகள் தங்களை விருந்தோம்பும் நாடுகளுடன் கலந்தாலோசிக்காமல் கூட எண்ணெயின் விலையைக் குறைக்கவும், அதன் விளைவாகச் சம்பந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட நாடுகளுக்குக் கொடுக்கப் படும் பணத்தைக் குறைக்கவும் முடிவுசெய்தன.

பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் 1960 ம் ஆண்டு செப்டம்பர் 10 ந் திகதி முதல் 14 ந் திகதி வரை பக்தாத்தில் கூட்டமொன்றைக் கூட்டியதன் மூலம் இதற்குப் பதிலளித்தன அவை நடத்தியஆலோசனைகளின் பயனாக 'ஒபெக்' அமைக்கப்பட்டது. அங்கத்துவ நாடுகளின் நலன்களைப் பாதுகாத்தல்; எண்ணெய் விலையை ஸ்திரமாக வைத்திருக்க முயல்வது; எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு அதைக் கொடுப்பதுடன் அதைக் கிரமமாகவும்திறமையாகவும் வழங்குவதும்; எண்ணெய்க் கைத்தொழில் முதலீடு செய்வோருக்கு நியாயமான இலாபங்களைப் பெற்றுக் கொடுத்தல் ஆகியனவே ஒபெக் நாடுகளின் நோக்கம். இதை முதலாவது கூட்டத்திற்குப் பின்பு எழுத்தில் எழுதி விட்டன.

உண்மையில், 'ஒபெக்' அடக்கமாகவே ஆரம்பமாயிற்று. உலக எண்ணெய் விலைகள் சம்பந்தமாக ஒபெக்கின் முதலாவது பயனுறுதி வாய்ந்த நடவடிக்கை 1971ம் ஆண்டில் திரிப்பொலி - தெஹ்ரான் ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டதுடன் எடுக்கப்பட்டது. இவ்விதமாக 1972 ம் ஆண்டளவில், சர்வதேச எண்ணெய் விளையாட்டுப் போட்டியில் ஒபெக் ஒரு முக்கிய சக்தியாகி விட்டதென்பது தெளிவாகியது. 1973 ம் ஆண்டு முடிவில் நடைபெற்ற சம்பவங்களே (அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற யுத்தம், எண்ணெய்த்தடை, எண்ணெய்விலைகளில் ஏற்பட்ட செங்குத்தான உயர்வு) எண்ணெய்ப் பந்தய விளையாட்டில் ஒபெக்கை ஒரு பெருஞ் சக்தியாக உந்தித் தள்ளின.

உண்மையில், ஒபெக் ஸ்தாபனம் நான்கு பகுதிகளைக் கொண்டது. அதில் ஒரு மகாநாட்டு அமைப்பு, ஆளுநர் சபை, ஒரு செயலகம், ஒரு பொருளாதாரக் கமிஷன் ஆகியனவே அவை. பொதுநலன் சம்பந்தப்பட்ட நிதி - நாணய விவகாரங்களில், குறிப்பாக வளர்முக நாடுகளை ஆதரிப்பதற்கான உதவித்திட்டங்கள், மற்றும் நிதி நடவடிக்கைகள் பற்றியும் சர்வதேச நிதி முறைகள் சம்பந்தமான பரஸ்பர பிரச்சினைகள் பற்றியும் அங்கத்துவ நாடுகளின் கொள்கைகளை ஒரு முகப்படுத்துவதற்காகவும் ஒபெக் நிதி மந்திரிகள் காலத்துக்குக் காலம் கூடுகின்றனர். சர்வதேச அபிவிருத்திக்கான திறந்த நிதியின் கொள்கைகளை நிர்ணயிக்கும் மந்திரிகள் சபையாகவும் ஒபெக் நிதிமந்திரிகள் கூடுகின்றனர்.

பெற்றோலியம் அபரிமிதமாயுள்ளது; அதில் செயற்கை முறையில் ஏகபோக உரிமை ஏற்படுத்தப்பட்டுவருகிறது; பெற்றோலியத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகள் அளவு மீறிய செல்வவளமுள்ளவையாகும் என்று கூறும் ஒபெக் பலமிக்க ஒரு வர்த்தக சங்கம் என்றும் எண்ணெய் விலைகளைத் தொடர்ந்து உயர்த்துவதன் மூலம் உலகின் ஏனைய பகுதிகளைச் சுரண்டுவதற்காக ஒருசில எண்ணெய் உற்பத்தி நாடுகளால் அது அமைக்கப்பட்டதென்றும் அடிக்கடி நம்பப்படுகிறது. பெற்றோலியம் என்பது புதுப்பிக்க முடியாத - மீண்டும் சுற்றோட்டத்துக்கு விடமுடியாத - தீர்ந்துவிடக் கூடிய ஓர் இயற்கை வளம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பெற்றோலியத்தை உற்பத்திசெய்ய முடியாது; ஆனால் அது பிரித்தெடுக்கப்படும் ஒரு பொருள் மாத்திரமேயாகும்; அதைப் பிரித்தெடுக்கும் செலவு அதை உற்பத்தி செய்யும் செலவுக்குச் சமமாகுமெனக் கருதக்கூடாது.

ஆதலால், எண்ணெயை அந்த நாடுகள் ஒரு மூலதனச் சொத்தாகக் கருதுவதும் அதன் பெறுமதி மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கருதுவதும் நியாயமாகும்; நியாயப்படுத்தக்கூடியதாகும். எனவே, பெற்றோலியத்தின் விலையில், அதைப் பிரித்தெடுக்கும் செலவுக்குப்புறம்பாக, அச்சொத்துக்கான பெறுமதியும் அடங்கியிருக்க வேண்டும். மேலும், இக்குழுவைச் சேர்ந்த நாடுகள் தங்களுடைய சொந்தப் பிரச்சினைகளைக் கொண்டுள்ளன. இந் நாடுகள் அடிப்படையில் ஏழை நாடுகளாகவே இருந்துள்ளன; தற்காலிகமாக அபரிமிதமான நிதிவளத்தைக் கொண்டுள்ள அனுகூலமான நிலையிலிருந்த போதிலும், அவை பெருங் கஷ்டமான நிலைமைகளில் மாற்று வருமான வழிகளை வளர்க்க முயன்று வருகின்றன. அவை யாவும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளேயாகும். பலர் எண்ணுவது போல அவை பணக்கார நாடுகளல்ல. உண்மையில், அவை ''மூன்றும் உலகம்'' என்று கூறப்படும் உலகைச் சேர்ந்தவை. இதன் பொருள் என்னவென்றால், முறையே தங்கள் நுகர்வுக்கும் வர்த்தகத்துக்கும் தேவையான உணவையும் பொருள்களையும் உற்பத்திசெய்யும் கட்டுக்கோப்பான பொருளாதாரங்களை அவை இன்னும் பூரணமாகப் பெற்றிருக்கவில்லை என்பதாகும். ஒபெக் நாடுகளில் பெரும்பாலானவை தங்களுக்குத் தேவைப்படும் உணவிலிருந்து கைத்தொழில் உற்பத்திப் பொருள்கள் வரை பெரும் பகுதியை இறக்குமதி செய்யவேண்டிய நிலையிலுள்ளன.

இந்நாடுகள் பல அம்சங்களில் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுகின்றன - பரப்பளவில், ஜனத் தொகையளவில் - (எண்ணெய் வளம் உட்பட) இயற்கை வளப் பேற்றில், இன - மத உற்பவத்தில், பொருளாதார அபிவிருத்திக் கட்டத்தில், வாழ்க்கைத் தரத்தில், அரசாங்க வகையில், சர்வதேச உறவில், மற்றும் பல சமூக - கலாசார விழுமியங்களில் ; இந்நாடுகளுக்கிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசங்கள் உண்டு. பரப்பளவை எடுத்துக் கொண்டால், கட்டார் 11,000 சதுர கிலோ மீட்டரைக் கொண்டது; ஆனால் இந்தோனீஷியா சுமார் 52 இலட்சம் சதுர கிலோ மீட்டரைக் கொண்டது. ஜனத் தொகையளவில் கட்டார் 20 இலட்சம் மக்களைக் கொண்டது; ஆனால் இந்தோனீஷியா 14 கோடி 80 இலட்சம் மக்களைக் கொண்டது. எண்ணெய் வளங்களின் கன அளவைப் பொறுத்த வரை, சவூதி அரேபியா 1982ம் ஆண்டு முடிவில் 16,503 கோடி பீப்பா சுத்தி செய்யா எண்ணெய் வளமுடையதாயிருந்ததெனக் கூறப்பட்டது. இதனுடன் ஒப்பிடுகையில் கபோன் நாடு 100 கோடி பீப்பாவுக்குக் குறைவான எண்ணெய் வளமுடையதாயுள்ளது. இக் குழுவிலுள்ள குறைவான உறிஞ்சல் சக்தியுள்ளவையெனப்படும் நாடுகளில் சில (உதாரணமாக குவைத்தும் சவூதி அரேபியாவும்) தங்கள் அரசாங்க வருமானத்தில் ஐந்தில் நாலு பங்குக்கு மேற்பட்ட தொகைக்கு எண்ணெயையே சார்ந்திருக்கின்றன.

இக் குழுவிலுள்ள பல நாடுகள் அதிக உறிஞ்சல் சக்தியுடையன. இவை பல்வேறு அளவுகளில் வேறு மூலப் பொருள்களையும் பெருந் தொகையான பயிர் செய்யத்தகுந்த காணிகளையும் மிதமானதிலிருந்து சிறந்தது வரையான கைத்தொழில் அஸ்திவாரத்தையும் இயற்கையாகவே பெற்றுள்ளன - அல்ஜீரியா, இந்தோனீஷியா, ஈரான், நைஜீரியா, வெனிசூலா ஆகிய நாடுகளே இவை. எண்ணெய்ச் சம்பந்தமற்ற துறை சவூதி அரேபியாவில் 28 சதவிகிதம் போன்ற சிற்றளவுக்குப் பொறுப்பாயிருக்கும் போது, இது இந்தோனீஷியாவிலும் நைஜீரியாவிலும் 67 சதவிகிதம் போன்ற உயர் அளவிலுள்ளது. இன, சமய அமைப்பில் சில நாடுகள் முஸ்லிம் அராபியர்களைக் கொண்டுள்ளன; அராபியரல்லாதாரைக் கொண்டுள்ள வேறு நாடுகளில் முஸ்லிம்கள் பெரும் பான்மையாயிருக்கின்றனர். ஆள்வித மொத்தத் தேசியப் பொருளாக்கம் (1982ம் ஆண்டு) இந்தோனீஷியாவைப் பொறுத்த வரை ஆண்டொன்றுக்கு 600 டாலருக்குக் குறைவான தொகையிலிருந்து கட்டாரைப் பொறுத்தவரை சுமார் 21,880 டாலர் வரையும் ஐக்கிய அரபு எமிரேட்டுகளைப் பொறுத்த வரை 23,700 டொலருக்கு மேற்பட்ட தொகை வரையுள்ளது.

செல்வத்தின் தோற்றத்தைக் கொண்டன்றிப் பொருத்தமான சமூக, பொருளாதார அறிகுறிகளைக் கொண்டு நிதானிக்குமிடத்து, இந்த நாடுகள் யாவும் அபிவிருத்தியின் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கின்றன என்பது தெளிவு. அவையாவும் உணவில் பற்றாக்குறையாயுள்ள நாடுகள். இவற்றில் சில கிட்டத்தட்ட முற்றாக உணவு இறக்குமதிகளையே சார்ந்திருக்கின்றன. அவற்றில் ஒன்றேனும் பலம் பொருந்திய கைத்தொழில் அத்திவாரத்தைக் கொண்டிருக்கவில்லை. இந்தோனீசியாவைத் தவிர, அவற்றில் ஒன்றாவது எண்ணெயைத் தவிர வேறெந்த முக்கிய ஏற்றுமதிகளையும் கொண்டிருக்கவில்லை.

வளர்ந்தோர் எழுத்தறிவு விகிதங்களைப் பற்றிய தரவுகள், மொத்தத் தேசியப் பொருளாக்கம் பகிரப்பட்டுள்ள முறை, வணிகப்பண்ட ஏற்றுமதிகளில் சதவிகிதப் பங்கு, சிலநாடுகளின் விஷயத்தில் ஆள்வித எரிசக்தி உபயோகம் ஆகியவற்றைக் கவனிக்கும்போது, ஒபெக் நாடுகளைத் தனித்தனியாகவும் ஒரு குழுவாகவும் அபிவிருத்தி குறைந்த நாடுகளின் வரிசையிலேயே சேர்க்க முடிகிறது. இந்த நாடுகளில் நான்கின் ஆள்வித வருமானம் உயர்வாயிருப்பதற்கு அவற்றின் ஜனத்தொகை சிறிய அளவிலுள்ளதே காரணம். இதனால் இந்நான்கு நாடுகளில் உள்ள தனி நபர்கள் தற் சமயம் செல்வத்தைப் பெருக்கி வருகிறார்கள். அபிவிருத்தியடைந்த மற்றும் நாடுகளைப் போலன்றி அவற்றின் வருமானம் ஸ்தாபிதமான ஒரு கைத்தொழில் - விவசாய அத்திவாரத்திலிருந்தோ அல்லது ஸ்தாபிதமான ஒரு கைத்தொழில் அல்லது விவசாய அத்திவாரத்திலிருந்தோ மீளவரும் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

ஒபெக் நாடுகளைப் பொறுத்த வரை ஒரு நடுநாயகமான உண்மையென்னவென்றால், அவற்றில் பெரும்பாலான வற்றிற்கு வருமானம் பெற எண்ணெய் தான் ஒரே வழியாக அல்லது பிரதான வழியாக இருக்கின்றது என்பதாகும். சுருங்கக் கூறுவதெனில், இனங்காணத்தக்க வேறெந்த நாடுகள் குழுவில்விட அதிக வேற்றியல்புகள் இக் குழுவில் தான் காணப்படக் கூடும். வெளித்தெரியும் இத்தகைய பௌதிக வேறு பாடுகளுக்கும் இயற்கைப் பேறுகளுக்கும் தொழில் நுட்பப் பேறுகளுக்கும் எதிரில், இந்த நாடுகளைப் பிணிக்கும் பொது அம்சம் அவற்றின் எண்ணெய்ச் செல்வமாகவே இருந்து வந்துள்ளது. இந் நாடுகள் யாவும் பெற்றோலியம் ஏற்றுமதிகளிலிருந்து வருமானங்களைப் பெறும் வாய்ப்பைப் பகிர்ந்து கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றுள்ளன.

மூன்று இலக்குகளை அடைய எண்ணெய் வருமானங்களை உபயோகிக்கும் நோக்கத்தையும் அவை பகிர்ந்து கொள்கின்றன: தற்போதைய சந்ததியின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துதல்; எதிர்கால சந்ததிகளின் சேம நலத்தை உறுதிப்படுத்தக் கூடிய அபிவிருத்தி உபாயமொன்றை உள்நாட்டில் பின்பற்றுதல்; உள்நாட்டுப் பன்முகப்படுத்தல், வெளிநாட்டு முதலீடுகள் வாயிலாக எண்ணெயைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைத்தல் ஆகியனவே அம் மூன்று இலக்குகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெயிலிருந்து பிரமாண்டமான வருமானங்களைப் பெறும் நிலை முக்கிய எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் பொருளாதாரங்களுக்கு ஒரு தெளிவான நிதிப் பேறாக இருந்துள்ளதென்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படும் ஒரு விஷயம். 1973 - 74 ம் ஆண்டுகளில் எண்ணெய் விலைகள் நாலுமடங்கு அதிகரிக்கப்பட்டதும், அதற்கேற்ப அரசாங்கத் திறைசேரிகளில் வருமானங்கள் நேரடியாகப் போய்ச் சேர்ந்ததும், அதிகரித்த அரசாங்கச் செலவுகளுக்கு நிதிகள் கிடைத்ததுடன் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் ஆச்சரியப்படும் வகையில் பெருகுவதற்கும் வழி ஏற்பட்டது. அரசாங்கச் செலவினங்களின் உடனடியான விரிவாக்கம் அல்ஜீரியாவில் 26 சதவிகித வருடாந்த விகிதத்திலிருந்து நைஜீரியாவில் 120 சதவிகிதம் வரையும் ஈரானில் 155 சதவிகிதம் வரையும் வேறுபட்டது.

இந்நாடுகள் சிலவற்றிலும் மற்றும் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளிலும் செலவிடப்பட்ட வருமான நிதிகள் முந்திய ஐந்து வருடங்களில் (1968 - 73) செலவிடப்பட்ட வருடாந்த சராசரித் தொகையை விட இரண்டு மடங்கிலிருந்து ஐந்து மடங்கு வரை அதிகமாயிருந்தன. அரசாங்கச் செலவுகளில் பெரும் பகுதி உள்ளமைப்புகளில் முதலீடுகள் செய்வதிலும் சமூக சேவை வசதிகளை அதிகரிப்பதிலும் உற்பத்தித் திறனை விரிவாக்குவதிலும் ஈடுபடுத்தப்பட்டது. தேசிய மூலதன அமைவுக்கு ஒரு நல்ல அளவுகோலான மொத்தத் தேசியப் பொருளாக்கம் சம்பந்தமாக முதலீடுகளின் விகிதம் சவூதி அரேபியாவில் மும்மடங்குக்கு மேலும், ஈரானிலும் குவைத்திலும் நைஜீரியாவிலும் வெனிசூலாவிலும் இருமடங்கும் அதிகரித்தது. முதலாவது எண்ணெய் விலையேற்றத்துக்கு ஐந்து வருடங்களுக்குப் பின்னர் ஒபெக் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் 13 நாடுகளில் 9 நாடுகள் தங்களுடைய மொத்தத் தேசியப் பொருளாக்கத்தில் கால் பகுதிக்கும் அரைப் பகுதிக்குமிடையே ஒரு தொகையை உள்நாட்டு முதலீடுகளுக்கு ஒதுக்கி வைத்துக் கொண்டிருந்தன - இதற்கு ஈடான ஒரு சாதனையைப் பெரும் பாலான அபிவிருத்தியடைந்த நாடுகளிலோ அல்லது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலோ காணமுடியவில்லை.

அரசாங்கச் செலவுகளும் முதலீடுகளும் வளர்ந்ததையடுத்து, தனியார் துறைக்குக் கொடுகடன் வசதிகள் விரிவாக்கப்பட்டன. 1973 ம் ஆண்டுக்குப் பின்னுள்ள ஐந்து வருடங்களில் பெரும்பாலான நாடுகளில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன்களின் வருடாந்த விரிவு அதற்கு முந்திய ஐந்து வருடங்களின் தொகையை விட இரு மடங்குக்கு மேலிருந்தது. அரசாங்கத் துறையினதும் தனியார் துறையினதும் கோரிக்கை விரிவடைந்ததையடுத்து, 1973 ம் ஆண்டுக்கும் 1979 ம் ஆண்டுக்கும் இடையேயுள்ள காலத்தின் பெரும் பகுதியில் சகல நாடுகளினதும் உண்மையான மொத்த உள்நாட்டுப் பொருளாக்கம் வளர்ச்சியுற்றது. சராசரி வருடாந்த வளர்ச்சி விகிதம் அல்ஜீரியாவுக்கும் வெனிசூலாவுக்கும் 6 சதவிகிதத்துக்குக் குறைவானதிலிருந்து இந்தோனீஷியாவுக்கும் நைஜீரியாவுக்கும் ஏறக்குறைய 7.5 சதவிகிதம் வரையும் சவூதி அரேபியாவுக்கு 11 சத விகிதத்துக்கு மேல் வரையும் வேறுபட்டது.

எண்ணெய்ச் சம்பந்தமற்ற மொத்த உள்நாட்டுப் பொருளாக்கத்தின் வளர்ச்சி விகிதங்கள் இதைவிட மனதை அதிகம் கவர்வனவாயிருந்தன. சகல ஒபெக் அங்கத்துவ நாடுகள் சம்பந்தமாக இது சராசரியாக ஏறக்குறைய ஒன்பது சதவிகிதமாகவும், குவைத் சம்பந்தமாக 13 சதவிகிதமாக அவ்வளவு உயர்வாகவும் சவூதி அரேபியா சம்பந்தமாக 15 சதவிகிதமாகவும் இருந்தது. இவ்விதமாக எண்ணெயின் தாக்கம் உறுதியாகவும் விரிவாகவும் நிலையாகவும் இருந்தது. இந்த நாடுகளில் பௌதிக நிலத்தோற்றம் (குறிப்பாகப் பெரிய நகரங்களில்) அடையாளந் தெரியாதவாறு மாறிவிட்டது மட்டுமன்றிக் குடிமக்களில் பெரும் பகுதியினரின் வாழ்க்கைத் தரமும் முன்னெப் போதும் காணாத மட்டத்துக்கு உயர்ந்து விட்டது.

கிட்டதட்ட சகல முக்கிய எண்ணெய் ஏற்றுமதி நாடுகளிலும் எண்ணெய் வளங்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமாயிருந்ததும், அத்துடன் சிறைப்பட்ட ஏற்றுமதிச் சந்தையும் சேர்ந்து (இந்தச் சந்தையில் எண்ணெயை அதிகரித்த கன அளவுகளிலும், அடிக்கடி செங்குத்தான உயர் விலைகளிலும் விற்று, வன் செலாவணிகளில் பணத்தைப் பெற முடியும்) தேசியப் பொருளாதாரத் தலைவிதிகளை உருவாக்க, தேசியப் பொருளாதாரத் திட்டகர்த்தாக்களுக்குக் கட்டுப் பாடில்லாத அரியதொரு சந்தர்ப்பத்தை அளித்தன. உள்நாட்டுச் சேமிப்புகளைத் திரட்டுவதற்கோ அல்லது வெளிநாடுகளில் முதலீட்டு மூலதனத்தைப் பெறுவதற்கோ இருந்துவரும் கடுமையான கட்டுப்பாடுகளிலிருந்தும் கஷ்ட சாத்தியமான நிபந்தனைகளிலிருந்தும் விடுபட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எண்ணெய் வருமானத்தை உபயோகிப்பதற்குப் பொருளாதார ரீதியாக நியாயமான, சமூக ரீதியாக ஒற்றுமைப் படுத்தும், அரசியல் ரீதியாக ஏற்றுக் கொள்ளத்தக்க கொள்கைகளை ஒன்றிணைக்க விரிவான, வளைந்து கொடுக்கக் கூடிய தெரிவுரிமைகள் இருந்தன.

(33 -ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலர் வலயத்தில் உள்ளூர் மீன்பிடி அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள்

- [illegible]

## அறிமுகம்

இலங்கையின் உலர் வலயம் நாட்டின் பெரும் பரப்பளவினை உள்ளடக்கி உள்ளது. மொத்த நிலப் பரப்பளவில் இது 66 சதவீதத்தைக் கொண்டுள்ளது. எனினும், நாட்டின் சனத்தொகையில் 33 சதவீதத்தையே இது கொண்டுள்ளது. உலர் வலயத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு பெருமளவிலான நிலம் இருப்பதனை இது காட்டுகின்றது. நீர்ப்பாசனத்தின் வாயிலாகப் பண்ணைப் பயிர்ச் செய்கையின் (பிரதானமாக நெல்) அடிப்படையில் அமைந்த குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இப் பிராந்தியத்தில் பெறக்கூடிய வாய்ப்புக்கள் பற்றியும், இப் பிரசேத்தின் பிரச்சினைகள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது. இப் பிராந்தியத்தில் தற்போது அதிக அளவிலான அபிவிருத்தித் திட்டங்களைக் காணமுடிந்த போதிலும் உலர் வலய விவசாய சமூகம் வறுமை, போஷாக்கின்மை ஆகிய பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் உலர் வலயத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய நிவாரண நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு பிரச்சினைகளை அடையாளம் காணுதல் அவசியமாகும். இச் சந்தர்ப்பத்தில் இங்கு காணப்படுகின்ற உள்ளூர் நீர் நிலைகள் போன்ற மூலவளங்கள் கருத்திற்கு எடுக்கப்படல் வேண்டும்.

## வறுமை

உணவு முத்திரைகள் வினியோகத்தை ஒரு பொருளாதாரக் குறிகாட்டியாகக் கொண்டால், 1980 இல் நாட்டின் மொத்த சனத்தொகையில் 49.9 சதவீதமானோர் அதனைப் பெறுவதற்கு அருகதை பெற்றனர். வரண்ட வலயத்தில் இந் நிலைமை ஒப்பீட்டு ரீதியில் மிகவும் மோசமானதாகும்; இங்கு மொத்த சனத்தொகையில் 55.5 சதவீதமானோர் உணவு முத்திரை பெறுவதற்கு அருகதை உடையோராக இருந்தனர். 1973 இல் 80 சதவீதமான குடியிருப்பாளர்கள் மாதாந்தம் ரூபா 400/- அல்லது அதற்குக் குறைந்த தொகையை வருமானமாகப் பெற்றனர் என குடிசன திப்பீட்டு, புள்ளிவிபரவியற் திணைக்களத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. 1973 இல் உலர் வலயத்தில் குடியிருப்பாளரின் மாதாந்தச் சராசரி வருமானம் ரூபா 287/- ஆகவிருந்தது. இதில், நெற் செய்கை, காய்கறிகள், ஏனைய உணவுகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட மாதாந்தச் சராசரி வருமானம் ரூபா 163/- ஆகும். மேலும், "கிராமிய" "நகர" துறைகளின் மாதாந்தச் சராசரி வருமானம் முறையே ரூபா 271/- ரூபா 475/- ஆகும்.

பண்ணை விவசாயிகள் நகர்ப் புறத்தில் வாழ்பவர்களை விடவும் ஒப்பீட்டுரீதியில் குறைந்த வருமானத்தை உழைக்கின்றனர் என்பதனை இது உணர்த்துகின்றது. இவர்களது வருமானத்தில் 56 சதவீதம் பண்ணைத் தயாரிப்புக்களில் இருந்தே பெறப்படுகின்றது; இவை அடிக்கடி பயிர் நாசத்துக்கு உட்படுகின்றன.

## போஷாக்கின்மை

இலங்கையில் மூன்று பாடசாலை வயதுக்கு முற்பட்ட பிள்ளைகளுள் ஒருவர் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக 1975 - 76 இல் முன்பள்ளிப் பிள்ளைகள்தொடர்கைதிவு அளவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தெரிவிக்கின்றது. முன் பள்ளிப் பிள்ளைகளின் போஷாக்கு நிலைமை மிகவும் மோசமடைந்திருப்பதாக அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உலர் வலயத்தில் அமைந்துள்ள மகாவலி எச் பிரதேசத்தில் உள்ள குடியிருப்பாளர்களின் போஷாக்கு தேசிய ரீதியிலான போஷாக்குத் தரத்தை விடவும் ஒப்பீட்டுரீதியில் குறைவாகும் என இப் பிரதேசம் தொடர்பாகக் கிடைக்கின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. புரதச் சத்து மிக்க உணவுகளைப் போதியளவு நிரம்பல் செய்தல் உலர் வலயப் போஷாக்கின்மையை இல்லாமற் செய்வதற்குரிய ஒரு பரிகாரமாகும். மீன் இதற்குச் சிறந்த உதாரணமாகும். இன்று நாட்டில் நகரப்படுகின்ற மிருகப் புரதத்தில் 70 சதவீதம் மீன் நகர்விலிருந்து பெறப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மீன் மூலம் பிரதச் சத்தினைப் பெறுவதற்குப் போதியளவு புதிய மீனை நிரம்பல் செய்தல் ஒரு முற் தகைமையாகும். உள்ளூர் மீன்பிடித் துறையில் உற்பத்தி அதிகரிப்பின் வாயிளாகத்தலாமீன் நகர்வினை அதிகரிப்பதற்கு இது உதவுவதுடன் தேசிய தேவையையும் நிறைவு செய்வதற்கு வழிவகுக்கும்.

## மூலவளம்

மேற்காணும் குறிகாட்டிகளின் பின்னணியில் இலங்கையின் உலர் வலயம் அபிவிருத்தி செய்யப்படுதல் அவசியமாகும். இதில் உள்ளூர் மீன்பிடி பிரதான பங்கினை வகிக்கலாம். இந் நோக்கினை அடைவதற்கு உலர் வலயத்தின் மூலவளங்களையும் வாய்ப்புக்களையும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது கீழே ஆராயப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மாதாந்த சராசரி

தேயிலை விலை




மாதாந்த பண

நிரம்பல்

## பொருளாதாரத்தின் போக்குகள்

1984 ன் முதலரைப் பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்பாடு சில அனுகூலமான போக்குகளைக் காட்டுகிறது. சென்ற வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது ஏற்றுமதிகள் மூலமான மொத்த சம்பாத்தியங்கள் 41 சத வீதம் அதிகரித்துள்ளன. தேயிலை, இறப்பர், கைத்தொழில் பொருட்கள் என்பவற்றின் ஏற்றுமதிகளால் பெறப்பட்ட கூடிய சம்பாத்தியங்களே இவ்வதிகரிப்புக்கு வழி கோலியுள்ளன. இப்போக்குகள் பேணி ஸ்திரப்படுத்தப்படுமேயாயின், சென்மதி நிலுவையிலும், வரவு செலவுத்திட்ட முகாமையிலும் தோன்றி வரும் பிரச்சினைகளை வெகு தூரத்துக்கு குறைப்பதற்கு அவை துணை புரிய முடியும். இக்காலப்பிரிவில் வங்கி முறையின் வெளிநாட்டுச் சொத்துக்களின் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக நாணய விஸ்தரிப்பு நிகழ்ந்துள்ளது. குறிப்பாக ஜூன் மாதத்தில் 14 சத வீத விஸ்தரிப்பு ஏற்பட்டுள்ளது. அதே வேளையில் ஜூன் இறுதியில் விரிவான பண நிரம்பல் மொத்தம் 3970 கோடி ரூபா மட்டத்தை எய்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்டர் நெஷனல் கிரபிக் மெகசின் லிமிடட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org